ரோஜாத்தோட்டம்

எம். ஆர். ஜம்புநாதய்யர்.

ஷேக் ஸா-அதியின்

ரோஜாத் தோட்டம்

(குலிஸ்தான்)

மொழிப் பெயர்ப்பாசிரியர்

எம். ஆர். ஜம்புநாதய்யர்
'சததியார்த்தப் பிரகாசம்' ஆசிரியர்.

ஜே. என். சூடய்யர்
ஆரியன் புக் ஷாப்
14, பள்ளியப்பன் தெரு,
சௌகார்பேட்டை, சென்னை.

1926

 [விலை அணா 8.

பொருளடக்கம்

முகவுரை.

ரோஜாவின் மணத்தை அறியாதவரும், ஸா-அதியின் பன்னீரைப் பருகாவதரும் இல்லை யெனலாம். மேனாட்டார் கள் இவ்வின்பத்தேனின் உருசியை அறிந்து, அதன் இர சத்தை அருந்தின வண்ணமாகவே இருக்கிறார்கள். ஸா-அதி யினால் அருளிய அமுதவசனங்களைச் சிறுவர் முதல், பெரி யவர்வரை ஆனந்தத்துடன் அனுபவிக்கிறார்கள். ஸா-அதி சமயாவேசத்தை அறியார். "யாவரும் முழுமுதற் கடவு ளின் மக்களே. பிறர் துக்கத்தை அறியாதவனை அவன் மக னென்று ஒரு பொழுதும் சொல்வதற் கில்லை" என்கிறார்: தீமை செய்வோனுக்கு நன்மையையும் உன்னைத் தூஷிப்பவ னுக்கு மரியாதையையும் செய்" என்பதே அவர் எண்ணமா யிருந்தது. தங்கத்தைவிட ஏழை எளியோனின் பொறுமையே சிறந்தது என்னும் அவர் சொல்லிற்கிணங்கவே, ஹுலாகு கான் ஒரு தடவை அவருக்கு 50,000 பொன் நாணயங்களை அளித்த பொழுது அதை அப்படியே அவர் தர்மகாரியத்தில் செலவழித்தார். எல்லாம் ஆண்டவனின் செயல் என்பதே அவர் எண்ணம். போலித் துறவிகளையும் காடோடிகளை யும் அவர் வெறுத்தவர். மனித கோடிகளின் தொண்டே கட வுளின் தொழுகை என்று கருதினவர். ஜப மாலையிலும், ஆசனத்திலும் ஆண்டிவேடத்திலும் மதமில்லை என்றும் ஜனசமூக ஊழியமே பெரும் தர்மத்தின் சூட்சமமென்றும் கருதினவர்.

இவரது ஜீவிய சரித்திரம் குறைதீர விளங்கவில்லை; இவரது நூல்களிலிருந்து, பாரசீகத்தின் கண் உள்ள சிராசி என்னும் ஊரில் 1175. கி. பி. யில் ஸா-அதி, அக்காலத்தில் திவான் உத்தியோகம் வகித்துவந்த அப்துல்லாவின் மகனுகத் தோன்றினுர் என்று தெரியவருகிறது. சிறுவயதிலேயே தகப்பனை இழந்துவிட்டார். பக்தாத் நைசாமிக் கல்லூரியில் எல்லா சாஸ்திரங்களையுங் கற்று மக்கமா நகரத்திற்கு 14 தடவை யாத்திரை செய்துளார்.

இவரது ஒரே மகனும் இறந்தவுடன் வெகு துக்கத்தை அடைந்தார். முப்பது வருடங்கள், ஐரோப்பா, அபிசீனியா, மிச்சிரம், ஆர்மினியா, பாரசீகம், ஆப்கானிஸ்தானம், பரதகண்டம் முதலிய நாடுகளைச் சுற்றி முடிந்தவுடன் பாரசீகத்திலேயே, மேன்மையும் மரியாதையும் அடைந்து, 116-வது வயதில் இவ்வுலகை விட்டு நீங்கினுர். அவரின் 83-வது வயதில் இந்த ரோஜாத்தோட்டமாகிற நூலை இயற்றினுர்.

"தமிழ் நாடு" பத்திரிகையில் இது என்னுல் மொழிபெயர்க்கப்பட்டு வெளிவந்துகொண்டிருந்தது. அதை இப்பொழுது ஒன்று சேர்த்து புத்தக ரூபமாக வெளியிட்டிருக்கிறேன். இதற்கனுமதி தந்த 'தமிழ் நாடு' ஆசிரியர் ஸ்ரீமான் டாக்டர், பி. வரதராஜுலு நாயுடு அவர்களுக்கு நான் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்.

எம். ஆர். ஜம்புநாதன்.

ரோஜாத் தோட்டம்.

அத்தியாயம் I.

இராஜ நீதி.

கதை 1,

"உயிர் துறக்குந் தருவாயில் எவனும் உள்ளதைப் பேசுவான்; ஆசையற்றவன் தைரியமாகப் பேசுவான்; வழிதெரியாமல் திண்டாடும் பூனை நாயின் மேலேயே பாயும்; கஷ்டகாலத்தில் இருதலை வாளையே மனிதன் ஏந்துவான்" எனப் பலவாருகக் கைதி யொருவன் அரசனை வைது ஏசினன். "கைதி என்ன சொல்லுகிருன்" என்று அரசன் வினவவே, மந்திரி பதிலாகக் "கோபத்தையடக்கிப் பிறரிடம் அன்புடனிருப்பவரைக் கடவுள் ஆசீர்வதிப்பார்" என்று கூறினர். இதைக் கேட்டவுடன் அரசன் மனம் உருகி குற்றவாளியை மன்னித்து விட்டார். அப்பொழுது வேருெரு மந்திரி சொன்னதாவது "நம்முடைய பதவியிலுள்ளவர்கள் இராஜ சமூகத்தில் பேசுங்கால் மெய்யைத்தவிர்த்து மாருன வேருென்றையும் பேசக்கூடாது." அரசனுக்கு இது பிடிக்காமல் "இவ்வுண்மையைவிட அப்பொய்யைக் கண்டே சந்தோஷ மடைந்தேன். ஏனெனில் அது நல்லெண்ணத்துடன் சொல்லப்பட்டது. உன்னுடையதோ, பகையின் பேரில்

கூறப்பட்டது. கலகத்தையுண்டுபண்ணும் மெய்யைவிட நல்லுபதேசத்துடன் கூடின பொய்யே சிறந்ததென்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள்'' என்றான். கலந்து யோசிக்கும் பொழுது அரசனைத் தப்பு வழியில் திருப்புகிற வர்கள் பெரும்பாவிகள். சுயேச்சை மண்டபத்தின் வாயிலில் எழுதப்பட்டிருப்பதாவது ''உலகம் ஒருவனுடையதல்ல. கடவுளை வழிபடு. அதுவே போதுமானது. உலகத்தின் கண்ணுள்ள இராஜ்யங்களை நம்பாதே. ஏனெனில் உங்களை யொத்த பலரை அது போஷித்துமிருக்கிறது; அழித்து மிருக்கிறது.'' தேகத்தை விட்டுப் பரிசுத்த ஆத்மா விலகும் பொழுது சிங்காசனத்தின் மேலிருந்தாலென்ன? அல்லது வெறுந்தரையின் மேலிருந்தாலென்ன?

கதை 2.

சுல்தான் மாமூத் சபக்தஜீன் இறந்த நூறு வருடங்களுக்குப் பின்னர் அவருடைய பிரேதத்தைக் கனவில் அந்நாட்டு அரசர் ஒருவர் கண்டார். சரீரம் சாம்பலாகி விட்டது. கண்கள் குழிகளில் விழுந்திருந்ததும் காணப்பட்டது. எவராலும் இதன் காரணத்தைச் சொல்ல முடியாமல் போகவே பக்கிரி ஒருவர் கடைசியாகக் கூறினதாவது ''அவருடைய நாட்டைப் பிறர் அரசாண்டு கொண்டிருப்பதைப் பார்த்தார்.'' பெயர் பெற்ற பலரின் பெயர் மண்ணுடன் மறைந்துவிட்டது. சரீர எலும்புகளில் ஒன்று கூட மீதி இல்லை. ஆனால் பரோபகாரத்தின் பயனாக, பல வருடங்கள் கழிந்தும், நிஷர்வான் வம்சத்தின் பெயர் இன்னும் இருந்துவருகிறது. மானிடப் பிறப்பை மதித்து, அது மறைந்து அழிந்து போகுமுன் நன்மையைச் செய்வாய்.

கதை 3.

அரசனுக்கிருந்த பிள்ளைகளுள் ஒருவன் பெரியவனாக வும் உயரமாகவும் அழகாகவும், மற்றொருவன் குள்ளமாகவும் அழகுக் குறைவாகவும் இருந்தான். தன்னைக் கவனிப் பதாக யறிந்து குள்ளன் தகப்பனை நோக்கி, "அப்பா! புத்தியற்ற பெரியவனைக்காட்டிலும் புத்திசாலியான குள்ள னே சிறந்தவன்" என்றான். உயரத்தைப்பார்த்துப் பிரமை கொள்ளக் கூடாது. ஆடு அழகாயும் சுத்தமாயு மிருக்கிறது, யானையோ சுத்தமின்றி யிருக்கிறது. கைலாச பர்வதம் சிறி யதே. ஆனால் தெய்வீகத் தன்மையில் சிறந்தது அதுவே. அறிவீனன பருமனுள்ளவனை நோக்கி, மெலிந்த சிறுவன் "லாயம் நிரையவுள்ள கழுதைகளைவிட மெலிந்த அரபிக் குதிரையே ஏற்றது" என்று கூறினான். இதைக்கேட்ட வுடன் தகப்பனார் திருப்தியடைந்தார். சபையோர்கள் நகைத் தனர். சகோதரர்கள் வெட்கமடைந்தனர். பலமுள்ள சத்துரு அரசனைத் தாக்கினவுடன் இருவர்களுக்கும் பலத்த சண்டை ஏற்பட்டது. அப்பொழுது முன்னணி யில் தன் குதிரையின் பேரில் இச்சிறுவன் சொல்லிக் கொண்டு சென்றதாவது "ரணகளத்திலிருந்து ஓடுபவனல்ல நான். என் தலையை இரத்தப் பிரவாகத்தில் காணலாம். சண்டை செய்கிறவன் பிராணத்தியாகம் செய்கிறான்; தப்பி யோடுகிறவனோ,சேனைகளின்இரத்தத்தில் விளையாடுகிறான்." இவ்விதம் சொல்லிக்கொண்டே சத்துரு சேனையில் பல முள்ள அநேகம் பெயர்களைத்தாக்கி வீழ்த்தின பிறகு, தகப் பனிடம் வந்து "என்னுடைய தைரியத்தைக் கவனியாமல் உருவத்தைப் பொருட் படுத்தினீர்கள். யுத்தத்தில் உபயோ

கப்படுவது மெலிந்த குதிரையே தவிர கொழுத்த எருதல்ல'' என்று முறையிட்டு நமஸ்கரித்தான். சத்துருவிற்குப் பலம் அதிகமாயிருந்தபடியினுல், இச்சிறுவன் ''பெண்களின் ஆடை உடைகளைத் தரித்துக்கொள்ளத் தேடாதீர்கள். ஆடவர்களைப் போல் நடந்து கொள்ளுங்கள்'' என்று கூறவே பின் வாங்கினவர்கள் பலத்துடன் எதிர்த்தார்கள்-ஜெயமும் இவர்களுக்கே கிடைத்தது. இதைக்கண்டதும் அரசனுக்கு அவன் பேரிலிருந்த அன்பு பெருகவே அவனையே இராஜ்யாதிகாரியாக நியமித்தார். இதைக்கண்டு பொறுக்காமல், சகோதரர்கள் பாஷாணத்தை அவன் ஆகாரத்தில் கலந்தார்கள். அது பிரயோஜனமற்றதாய்விட்டது. இவை யாவற்றையும் அறிந்த அரசன் எல்லோருக்கும் சமபாகமாக நாட்டைப் பிரித்துக் கொடுத்து விட்டான். ''ஒரே கம்பளத்தில் பத்து பக்கிரிகள் சேர்ந்து தூங்குவார்கள். ஆனுல் ஒரே நாடு இரண்டு அரசர்களைக் கொள்ளாது. உதார குணமுள்ளவன் பாயை ஏழைக்கு அளிப்பான். ஒருதேசத்தை யாளும் அரசனோமற்றொரு தேசத்தையும் கொள்ள விரும்புவான்.''

கதை 4.

அராபித்திருடர்கள் கூட்டங்கூடி மலையுச்சியிலிருந்து கொண்டு, வழிப்போக்கர்களையும், பிரயாணிகளையும் மறித்து கொள்ளையடித்த வண்ணமாயிருந்தார்கள். குடி மக்கள் முறையிட்டும் அவர்களை வெல்ல, அதிகாரிகளால் முடியவில்லை.ஏனெனில் மலையின் உச்சியிலிருந்தார்கள். பலமதிகரித்துவிட்டால் வெல்ல முடியாதென்றறிந்து, மந்திரிகளுடன் அரசன் யோசனைசெய்தான். முளையில் ஒருமனிதன் மரத்தைக்களைந்துவிட முடியும். வேரூன்றி மரமாய்விட்டால், புயற்காற்றினுல் கூட

அசைக்கமுடியாதல்லவோ? ஆரம்பமாகிற விடத்தில் நீர்ஊற்றைச் சிறியமரத்துண்டினால்கூட மறைத்து விடலாம். ஆறாகப் பெருகிவிட்டால் யானையாலும் கூட முடியாது. மந்திரிகள் யோசனை செய்து, திருடர்கள் அங்கு இல்லாத சமயம் பார்த்து ஒற்றர்களை அனுப்பினார்கள். அவர்கள் ஒளிந்து கொண்டிருந்தார்கள். திருடர்களும் சாயந்திரம் திரும்பிவந்து, கொள்ளையடித்தவைகளையும், ஆயுதங்களையும் வைத்துவிட்டு, முதல் சாமத்தில் தூங்கிவிட்டார்கள். ஒற்றர்கள் முற்றுகைப்போட்டு அவர்களனைவர்களையும் அரச சமுகத்திற்குக் கொண்டுவந்தார்கள். அரசனும் அவர்களுக்கு மரண தண்டனையைவிதித்து விட்டார். இதில் இளைஞன் ஒருவனிருந்தான். அவனுடைய கன்னங்கள் வசந்தகாலத்து மல்லிகையை யொத்திருந்தது. இதைக்கண்ட மந்திரியொருவன் அரசனிடம் முறையிட்டதாவது “ இன்பசுகங்களைக்கண்டறியாத இவ்விளைஞனின் உயிரைக்காப்பாற்றி அபயமளிக்கவேண்டும்.” அரசனுக்கு இது சரியெனத்தோன்றவில்லை. ‘வகையற்றதை வழிக்குக்கொண்டு வருவது ; நெருப்பை அணைத்து பொறியை விட்டு விடுவது ; பாம்பைக் கொன்று, சிறியதை விடுவது ; இவைகளெல்லாம் அறிஞர்களுக்கு அழகல்ல. அமிருத மாரியே பொழிந்தாலும் அலரிமரத்தில் பழங்கிடைக்குமா ? இழிவானர்களுடன் காலத்தை வீணாக்காதே. நாணலிலிருந்து சர்க்கரை கிடைக்காது ” என்றான் அரசன். இதற்கு மந்திரி சொன்னதாவது “ பிரபுவே, இத்தீயோர்களை வைத்திருந்தால் இவர்களுடன் கூடி, ஒன்றாகி விடுவான் என்பது உண்மையே. ஆனால் நல்லோர்களுடன் கூடிவாழ்ந்தால்பெருங்குணமுடையவனாவான் என்பது அடியேனின் அபிப்பிராயம். பிறக்கும் பொழுது எல்லோரும் இஸ்லாத்தைச் சேர்ந்தவர்களே. ஆனால் பெற்றோர்

களுடைய வழக்கவொழுக்கங்களுக்கேற்ப, யூதனாகவோ, கிறிஸ்துவனாகவோ, மாறுகிறார்கள். இதைக் கேட்டவுடன் சபையோர்களும் சரியென்றார்கள். அரசனும் மனமிரங்கி "எனக்கு இஷ்டமில்லாமல் போனாலும் உங்களுடைய பிரார்த்தனையைத் திருப்தி செய்வேன். சத்துருவைப் பலமற்றவனாகவும் சக்தி குறைந்தவனாகவும் நினைக்காதே. சிறிய ஊற்றிலிருந்து வெளி வரும் ஜலமானது பெருகிக்கொண்டேபோய் ஒட்டகத்தையும் சுமையையும் அடித்துக்கொண்டு போய்விடுகிறது" என்று சொல்லிவிடுவித்தான். மந்திரி இச்சிறுவனை ஏற்றுகொண்டு தக்க ஆசான்களிடம் ஒப்புவித்து. சபைக்குத் தேவையான ஒழுக்க வழக்கங்களைப் பயிலுவித்தான். சின்னாள் பொறுத்து சிறுவன் சீர்திருத்தமடைந்து விட்டானென்றும் புத்திசாலியாய்விட்டானென்றும் மந்திரி அரசனிடம்சொல்லவே, அவர் நகைத்துக்கொண்டு பதிலுரைத்தாவது "ஓநாய்க்குட்டி மனிதர்களுடன் கூடவே சேர்த்து வளர்க்கப்பட்டாலும், ஓநாயாகவே வளரும்." இரண்டு வருடங்களுக்குப்பின்னர் அயோக்கியர்கள் அநேகர் சிறுவனுடன் சதியாலோசனை செய்து கொண்டு, மந்திரியைக் கொன்று விட்டார்கள். சிறுவனும் அக்கூட்டத்தின் தலைவனானான். அரசன் அப்பொழுதுச் சொன்னதாவது "கெட்ட இரும்பிலிருந்து, நல்லவாளை எவ்விதம் செய்யமுடியும்? தர்க்கம் பேசுவோர்களே!! ஒழுக்க மற்ற தீயோனை நல்லவனாக மாற்றமுடியாது. பட்சபாதமற்று பொழியும் மழையானது தோட்டங்களில் பூவாசாரங்களையும், பொட்டை நிலங்களில் பிரயோசனமற்ற புல்பூண்டுகளையும், விளைவிக்கிறது. உதவாத பூமியில் வெட்டிவேர் உண்டாகாது. வித்தை ஊனற்ற விடத்தில்விளைத்து வீணாக்காதே. தீயோர்களுக்குத் தாட்

சண்யம் காட்டுவது உண்மையில் நல்லோர்களுக்குக் கெடுதலைச்செய்வதாகும்.''

கதை 5.

சொல்வதற்கியலாத புத்தி நுட்பமும் அறிவும் உடைய ஒரு குமாரனை அரமனை வாயிலில் கண்டேன். சிறு வயதிலேயே அவனுடைய புத்தியின் பெருமை புலனாய்க்கொண்டிருந்தது. சௌபாக்ய நட்சத்திரம் அவனுடைய நெற்றியில் பிரகாசித்துக்கொண்டிருந்தது. ''மனிதனுக்கு வேண்டியது பணமல்ல பொருளல்ல, யோக்கியதையே; சாமர்த்தியத்தினாலேயே சிறந்தவனாகிறான், வயதினால் அல்ல;'' என்று பெரியோர் மொழிகளுக்கேற்ப அழகினாலும், அறிவினாலும் அரசனுடைய அன்பிற்கும் ஆதரவிற்கும் ஆளானான். இதைக் காணச்சகியாத அவனுடைய நண்பர்கள் பொய் சொல்லி அவனை மோசக்காரனாகச் செய்யவும் பார்த்தார்கள். பிராணனையும் பழி வாங்கப் பிரயத்தனித்தார்கள். ''உனக்கு விரோதமாக ஏன் இவர்கள் இருக்கிறார்கள்.'' என அரசன் வினவவே அவன் பதிலுரைத்ததாவது ''சமுகத்தினுடைய அகமகிழ்ச்சியினால் எல்லோருக்கும் நல்லவனாயிருக்கிறேன். என்னுடைய வீழ்ச்சியாலல்லாது அவன் திருப்தியடையான். அவனே பொறாமைக்காரன். எல்லோரையும் புண்படுத்தாமல் நான் நடக்க முடியும். ஆனால் தன் மனதுடனேயே புண்ணைக் கொண்டிருக்கிற பொறாமைக்காரனின் அகத்தைத் திருப்தி செய்யமுடியாது.'' பொறாமைக்காரனே !! நீ இறக்காமல் புண் உன்னை விடாது. எனவே நீ இறந்து போ! வெற்றி பெறுகிறவனின் வீழ்ச்சியை விரும்புகிறான் பொறாமைக்காரன். வௌவாலின் கண்களுக்கு

வெளிச்சத்தில் பார்க்கும் சக்தி இல்லையானல், சூரியன் மேலா குற்றம்? சூரியன் மறைந்து போவதைவிட, இவ்வித மான ஆயிரம் கண்கள் அவஸ்தைப்பட்டாலும் படட்டும்.

கதை 6.

பாரசீக தேசத்துக் கொடுங்கோன் மன்னன் ஒருவனின் கதையுண்டு. ஆட்சியைச் சகிக்க முடியாமல் அவன் குடிமக்கள் குறையவே, வருவாயும் குறைந்தது. சத்துருக்களும் பல திசைகளிலிருந்து துன்புறுத்த வாரம்பித்தனர். துன்பகாலத்தில் உதவியைக் கோருகிறவர்கள், இன்ப காலத்தில் ஜீவகாருண்யத்துடனிருத்தலவசியம். சேவகனைச் சரியாய்க்கொண்டு அன்புடன் நடத்தாவிடில் ஓடி விடுவான். அந்நியர்கள் கூட அடிமைகளாகும் வண்ணம் அன்புடன் நடந்துகொள்ளவேண்டும். பரிதூன் மன்னனின் வீழ்ச்சியைக் கூறும் ஷாஹ்நாமா என்னும் நூலைப்படிக்குங்கால், அரசனை மந்திரி வினவினதாவது "பரிதூனுக்குப் பொருள் கிடையாது, பிரஜைகள், சைனியமும் கிடையாது. இங்ஙனமிருந்தும் அவனுக்கு நாடெவ்விடம் கிடைத்தது?" "நீ சொன்ன மாதிரி பிரஜைகள் சேர்ந்தார்கள். அவர்கள் சேரவே நாடும் கிடைத்தது" என்ருன்.

இதற்கு மந்திரி "குடிமக்கள் சேர்ந்தால் நாடாகும் என்று அறிந்திருந்தும் நீர் ஏன் அவர்களைத்தொலைக்க வேண்டும்? ஆட்சி புரிய மனமில்லை போலும்? சைனியங்களே பலமானபடியினல் அவர்களையாவது சேர்க்கவேண்டும்?" என்ருன். இவைகள் முடிய வேண்டி அரசன்நியாயமாயிருக்கவேண்டும். அவனுடைய ஆட்சியின் கீழ் பிரஜைகள் வாழ வேண்டி ஜீவகாருண்யத்துடனுமிருக்க வேண்டும். ஆனல்

உன்னிடம் அக்குணங்களைக் காணோம். கொடுங்கோலாட்சிக்காரனால் ஆளமுடியாது. ஏனெனில் ஓநாயே, ஆட்டிடையனாயிருக்க முடியாது. கொடுங்கோலாட்சிக்காரன் நாட்டின் பலத்தை கீழறுத்துவிடுகிறான்." இந் நல்லுபதேசத்தைக் கேட்டஅரசன் பொறுக்கமுடியாமல், மந்திரியைச் சிறைவாசத்தில் வைக்கும்படி ஏவிவிட்டான். சில காலத்திற்குள் அரசனின் பெரிய தகப்பனாரின் பிள்ளைகள் படையெடுத்து அவர்களுடைய தகப்பனாரின் நாடெனக்கட்சி கூறி கேட்டார்கள். ஆட்சியின் கொடுமையைப் பொறுக்க முடியாமல் பல ஜனங்கள் சத்துருவுடன்சேர்ந்து உதவியும் புரிந்தார்கள். அரசனும் தோற்கடிக்கப் பட்டான். அவர்களுக்கும் நாடு கிடைத்துவிட்டது. ஏழைகளைத் துன்புறுத்துகிற அரசன், கஷ்ட நாட்களில், தன் சிநேகிதர்கள் சத்துருவாக மாறுவதைக் காண்பான். குடிகளுடன் கூடிவாழ்; சத்துருக்களுடைய படையெடுப்புக்குப பயப்படாதே; ஏனெனில் சரியான மன்னனுக்கு சைனியம் குடிமக்களே.

கதை 7.

பாரசீக அடிமையுடன் ஒரு அரசன் கப்பற் பிரயாணம் செய்து கொண்டிருந்தான். சமுத்திரத்தை முன்னால் காணாதவனும், கடல் யாத்திரையின் கஷ்டங்களையனுபவியாதவனுமான அடிமை அழவாரம்பித்தான். சரீரமும் நடுக்கமெடுத்தது; தேறுதல் எவ்வளவு கூறியும் பயன் படவில்லை. அரசனுக்கு இவனைத் தேற்றும் வழி புரியவில்லை. இத்தருவாயில் கப்பலி லிருந்த தத்துவஞானி யொருவன் அரசனுடைய உத்தரவைப் பெற்றுக் கொண்டபின் அடிமையை நீரில் எறிந்தான். சில தடவைகள் முழுகின பின்

னர், தலைமையிரைப் பிடித்து இழுக்கவே, அவனும் போராவனுடன் கப்பலின் மூலையில் அமைதியுடன் அமர்ந்திருந்தான். அரசனுக்குத் திருப்தியாகி, காரணம் கேட்கவே தத்வஞானி சொன்னதாவது "நீரில் முழுகிப் போவதின் கஷ்டங்களை அவன் அனுபவித்ததில்லை. கப்பலின் சௌகர்யத்தையும் அறிந்ததில்லை. பசியாறினவனுக்குக் கம்பங்கதிர் உபயோகமற்றதே.

கதை 8.

உன் தகப்பனுடைய மந்திரிகள் கடுங் குற்றவாளிகளா? அவர்களைக் கைது செய்யக் காரணம் என்ன? என்று வினவவே அரசன் சொன்னதாவது :

அவர்களிடம் எக் குற்றத்தையும் நான் கண்டதில்லை. ஆனால் என்னைக்கண்டு பதுங்குகிறார்கள். என் வார்த்தைகளில் நம்பிக்கை வைப்பதில்லை. சுபநலத்தை உத்தேசித்து என் நாசத்தையும் தேடக்கூடும். ஆதலால் பின்வரும் பெரியோர்களுடைய உபதேசங்களுக்கேற்க நடந்துகொண்டேன். "உன்னைக்கண்டு பதுங்குகிறவர்களை யொத்த நூறு பெயர்களை வெல்ல உனக்குச் சாமார்த்தியம் இருந்தாலும், அவர்களிடம் அவர்களைப்போலவே நடந்துகொள். நிராசையான பூனையும் தன் கால் நகங்களினால் புலியின் கண்களைக் கிழிக்கும். கற்களில் தன் தலை மோதாமலிருக்க வேண்டி பாம்பானது வேளாளன் காலைக்கடிக்குமாம்."

கதை 9.

தீராப்பிணியின் வாயிலகப்பட்டுப் பிழைக்க வகையற்று வருந்திக் கொண்டிருக்கும் அரசனிடம். போர் வீரன் வந்து

சொன்னான்: “அரசே! சமுகத்தின் கட்டளைக் கேற்ப அக் கோட்டையைப் பிடித்து அதிலுள்ளவர்களையும் கைதியாக்கி விட்டேன். சைனியங்களும், குடிமக்களும் நம் வசமாய் விட்டார்கள்.” இதைக்கேட்டதும் அரசன் பெருமூச்சுவிட்டு பதிலளித்ததாவது “இச்சந்தோஷ சமாசாரத்தினால் எனக்கு யாது பயன்.? என் பின் இராச்சியாதிகாரம் செய்யப் போகிற என் சத்துருவிற்கே இது சந்தோஷத்தைத்தரும். விலையற்ற எனது வாழ்நாளை வீண் ஆசைகளில் ஒழித்தேன். கடந்தகாலமும் இனித்திரும்பிவருமோ? கால சக்கரம் சுழன்று கொண்டேயிருக்கிறது. ஆ! என் கண்களே!! சிரசினிடமிருந்து விடை பெற்றுக் கொள்ளுங்கள். கைகளே, கால்களே நீங்களும் சொல்லிக் கொள்ளுங்கள். என் எண்ணங்களுக்குச் சத்துருவான மரணத்தின் வசமாய் விட்டேன். நண்பர்களே! கடைசியாக என் முன்வாருங்கள். அறியாமையில் என் காலத்தைக்கழித்தேன். என் கடமைகளைச் சரிவர செய்யவில்லை. என்னைப்பின்பற்றாதேயுங்கள்.

கதை 10.

அரபி நாட்டில் அநியாய அரசாட்சி செய்துவந்த மன்னன் ஒருவன் யாத்திரைகள் பல செய்துவிட்டுப் பேர்பெற்ற ஒளலியாவின் பள்ளிவாசலில் வந்து “தனவந்தர்களும் தரித்திரர்களும் இப்பூமியின் அடிமைகள்; செல்வத்தில் சிறந்தவர்களுக்கே தேவைகளும் அதிகம்” என்று முறையிட்டுக் கொண்டான். பின்னர் அங்கிருந்த ஒரு பக்கிரியியை நோக்கி “நீங்கள் பரிசுத்தரானபடியால் என்னுடைய வெற்றிக்குத் தேவனை வேண்டிக்கொள்ளுங்கள். பலமுள்ள விரோதி என்னைத் தாக்கப்போகிறான்” என்றார். அதற்குப் பக்கிரி சொன்

ளுன். "பலமுள்ள விரோதிகளுக்குப் பயப்படாமலிருக்க, இளைத்த வேளாளனிடம் அன்புடனிருங்கள். பலத்தைக் கொண்டு ஏழைகளையும் எளியோர்களையும் துன்புறுத்துவது குற்றமாகும். ஏழைகளிடம் அன்பு காட்டாதவன் பயத்தி லேயே காலத்தைக் கழிப்பான். ஏனெனில் அவன் இளைத்தால் கைகொடுத்து காப்பாற்றுகிறவர்கள் எவர்களும் கிடைக்க மாட்டார்கள். உபயோகமற்ற விதையை விதைத்து அதி லிருந்து உபயோகமுள்ள பழங்களுக்கு எதிர்ப் பார்க்கிறவன் தன் மனதைத் தற்கொலைசெய்து கொண்டவனுவான். காதிலுள்ள அடைப்பை எடுத்துவிட்டு மனித ஜாதிக்கே சரியான நீதியை வழங்கு. இல்லையேல் தண்டனை காலம் உண்டென்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள். ஆதாம் மக்கள் அனைவரும், ஒருவரையொருவர் சேர்ந்தவர் கள். பிறருடைய கஷ்டங்களைக் காணுத நீ, மனிதனுக மாட்டாய்.

கதை 11.

வீம்புக்கு வேடங்கொள்ளாமல் அந்தரங்க பக்தியுள்ள பக்கிரியைக்கண்டவுடன் ஹஜ்ஜாஜ் யூசப் "எனக்காக ஜபம் செய்யுங்கள்" என்ருர். அதற்குப்பக்கிரி "இறைவனே இவன் இறக்கவேண்டும்" என்ருர். யூசப் காரணங்கேட்கவே அவர் சொன்னதாவது "உன் சுயநன்மைக்கும், சமுகமேன்மைக் குமாகவே அவ்விதம் செய்தேன். பலமுள்ள பாதகனே! ஏழைகளைத் துன்புறுத்துகிருய். எவ்வளவு நாள் இவ் வநீதி நீடிக்கும்? உன் அரசாட்சியினுல் யாது பயன்? மனிதசாதியை நிர்ப்பந்திக்கிறபடியினுல் நீ இறப்பதே மேலா னது.

கதை 12.

கொடுங்கோலாட்சி மன்னன், சமயத்திற் சிறந்தவனை "எனக்கு யோக்கியமானதும், புண்ணியத்தை யளிக்கக் கூடியதுமான காரியம் எது" என்று வினவவே, அவன் "நீ பகல் வேளைகளிலும் தூங்குவதே. ஏனெனில் அச்சமயத்திலாவது மனிதசாதியைத் துன்புறுத்தாமலிருப்பாய்" எனப் பதிலளித்தான்.

கொடியவன் பகல்வேளையில் தூங்குவதைக் காணும் பொழுது "அவன் வருத்துகிறவன். தூக்கமயக்கத்திலிருப்பதே மேல். விழித்திருப்பதைக் காட்டிலும் தூங்குவதே சிறந்ததாக உள்ளவர், ஜீவித்திருப்பதைவிட இறப்பதேமேல்" என்பேன்.

கதை 13.

இரவு முழுதும் ஆடல் பாடல்களில் களித்துக் கொண்டிருந்த அரசன், மயக்கத்தில் சொன்னதாவது "இதுவே நான் சந்தோஷமாயிருக்குங்காலம். நன்மை தீமைகளின் எண்ணமில்லாமலிருக்கிறேன்." வெளியில் படுத்துக் கொண்டிருந்த நிர்வாணமாயிருந்த பக்கிரி யொருவன் அச்சமயம் அரசனிடம் பிச்சை கேட்கவே அவரும் பணப்பையைக் கீழே எறிந்து, ஏந்திக்கொள் என்றார். ஆடையுடையில்லாமலிருக்க ஏந்திக்கொள்ள துணி ஏது என்றான். அரசன் பரிதாபப்பட்டு துணியும் கொடுத்தான். பக்கிரி இவைகளைப் பெற்றுக்கொண்டு விரைவில் செலவு செய்துவிட்டுத் திரும்பினான். தர்மசிந்தனையுள்ளவனிடம் பணமும், காதலரிடம் பொறுமையும், சல்லடையில் நீரும் இராதல்லவோ? அரசனிடம் பின்னும் பிச்சையெடுக்கவே அவன் கடுஞ்சினங்

கொண்டு பேசமறுத்து விட்டான். காலமறிந்து போகாதவனின் கதி அதுவேயாகும். சமயம் நேரும்வரையில் சும்மாயிரு "ஏழைகளுக்கே தானஞ்செய்ய வேண்டும். அயோக்யர்களுக்கல்ல. பகல் காலங்களில் கற்பூரம் கொளுத்தி வெளிச்சத்தைத் தேடுகிறவனுக்கு இரவில் எண்ணெய் விளக்கும் கிடைக்காது" என்றான் அரசன். இதைக் கேட்டு மந்திரி சொன்னதாவது "வரையறுத்துத் தானஞ்செய்ய வேண்டும். அப்பொழுதே அதைக் கொண்டு உபயோகஞ் செய்துகொள்வார்கள். இல்லையேல் விரயஞ் செய்பவேதோணும். கோபத்தில் ஒன்றுங் கிடையாதென்று மறுப்பது உண்மை தர்மத்திற்கு அழகல்ல. தர்மக்கதவைத் திறந்த பின்னர் வேகமாக மூடுவது சரியல்ல. தாகமுள்ளவர்கள் காணப்படுவது, சமுத்திரக்கரையிலல்ல. ஊற்று நீர் உள்ள விடத்திலேயே மனிதனும், மிருகங்களும், பட்சிகளும் வந்து கூடுகின்றன.

கதை 14.

நாடு நகரங்களைக் கவனியாமலும், சைனியத்தைப் போஷிக்காமலும் இருந்த அரசன்மேல் விரோதிகள் படையெடுத்தார்கள். போர்வீரர்களுக்குச் சம்பளம் கொடுப்பது நின்று போகவே அவர்கள் யுத்தஞ் செய்ய மறுத்துவிட்டாகள். "செய்த நன்மைகளை மறந்துவிட்டு ஏதோ சில காரணங்களை முன்னிட்டு பழகின வேலையையும் எஜமானனையும் விட்டு அகலுவது அழகானதல்ல. மரியாதைக் குறைவானதே" என்று சொல்லி அவர்களை நான் வினவினேன். அதற்கு ஒருவன் சொன்னான் "என் உண்மைகள் தெரிந்தால் நீ இவ்விதம் கூறியிருக்கமாட்டாய். குதிரைக்குக் கொள்ளுகிடை

யாது. அதன் நகைகளும் கொதுவையிலிருக்கின்றன. பேராசையினல் சம்பளங்கொடுக்க மனமில்லாத அரசனுடைய சேவையில் உயிரைத் துறப்பது ஏற்றதாகாது. தன் தலையைக் கொடுக்கிற போர்வீரனுக்குப் பணத்தைக் கொடுப்பாய். இல்லையேல் வேறே வேலையைத் தேடுவான்.

கதை 15.

அரச சமுகத்திலிருந்து விலக்கப்பட்ட மந்திரி யொருவன், சாதுக்களுடைய கூட்டத்தை யடுத்து வாழ்ந்து வருங் காலத்தில், அரசன் அவனைத்திரும்பவும் அழைக்கவே வேலையிலிருந்து கஷ்டப்படுவதைக் காட்டிலும் விலகியிருப்பதே நலமென்று சொல்லிப் போக மறுத்துவிட்டான். உலக மாய மமதைகளை விட்டு ஏகாந்தத்திலிருப்பவர்கள், பயத்திலிருந்து மீறி சுதந்தரர்களாயிருக்கிறார்கள். அரசன் "ஒருவனுடைய திறமை வேலையிலிருப்பதினாலேயே வெளியாகாது. பட்சிகள் யாவற்றிலும் ஹோமை ஏன் சிறந்ததென்றால் அது எலும்புகளைத்தின்று ஜீவிக்கிறது. உயிருள்ளப் பிராணியை உபத்திரவப் படுத்துவதில்லை." பெரியோர்கள் சொல்லியுள்ளவண்ணம் "அரசர்களுடைய நிலையற்ற தன்மையை நம்பாதே. சலாம் போட்டாலும் சில சமயங்களில் சினங்கொள்வார்கள். வேறு சில சமயங்களில் மிருகத்தனமாய் நடந்துகொண்ட போதிலும் நன்மையைச் செய்வார்கள். விதூஷகனுக்கே விளையாட்டு வேண்டியது. அறிவாளர்களுக்கு அது பயனற்றதே.

கதை 16

"எனக்குப்பணமில்லை; குடும்பமோ பெரியது. வறுமையிலிருந்து பெரிதும் வருந்துகிறேன். வெளியூருக்குச் சென்று

எவரும் அறியாவண்ணம் காலத்தைக்கழிக்கலாமென்று தோன்றுகிறது. ஆகாரமில்லாமல் எவ்வளவு பெயர்கள் உயிர்துறந்து இருக்கிறூர்கள். கணிதசாஸ்திரம் கொஞ்சம் அறிவேன். உன்னுடைய தவறினுல் ஏதாவது வேலையொன்று கிடைக்குமானுல் எந்நாளும் உன்னை மறக்கமாட்டேன்'' என்று சொல்லி ஒருவன் தன் நண்பனைக்கேட்டான். அதற்குச் சிநேகிதன் சொன்னுன் "அன்புள்ளவனே! இராஜ சேவைக்கு இருபுறமிருக்கிறது. பிழைத்திருத்தல் அல்லது உயிர்துறத்தல். இவ்வபாயத்தைக் கோருவது அறிவாளர்களுடைய எண்ணத்திற்கு விரோதமாகும்'' 'நான் கேட்டதற்குச் சரியானவிடை நீயளிக்கவில்லை. குற்றமுள்ள நெஞ்சே குறு, குறு, என்றிருக்கும் என்பதைக் கேட்டதில்லையா. விசுவாச மோசஞ் செய்தவனுடைய உடலே நடுங்கும். நேர்பாதையில் சென்று வழி தப்பினவனை நான் கண்டதே கிடையாது. அயோக்கியன் அரசனுக்கும், திருடன் காவலாளிக்கும், விபசாரன் வேவுகாரனுக்கும், வேசி புருஷனுக்கும் முறையே பயப்படுகிறூர்களென்று அறிஞர் கூறியிருப்பதை நீ கேட்டதில்லையா? களங்கமற்ற மனதையுடைய வனுக்குப் பயம் ஒன்றுங்கிடையாது. வேலையை விட்டு நீங்கினபின் உன் விரோதிகள் குற்றங்குறை கூருமலிருக்க விரும்பினுல் வேலையிலிருக்கும்பொழுது அநியாயம் செய்யாதே. நேர்மையாக இரு. எவனுக்கும் பயப்படத் தேவையில்லை'' என்றுன். இதற்கு நான் சொன்னதாவது "நரியின் கதை உனக்கு ஏற்கும். நொண்டிக்கொண்டு போகும்பொழுது காரணங் கேழ்க்கவே, நரி, எனக்குப் பதிலாக ஒட்டகத்தை வைக்கப்போகிறூர்கள்'' உனக்கும் ஒட்டகத்துக்கும் என்ன சம்பந்தமிருக்கிறது என்றுன். பொருமைக்காரர்கள் என்னைக் காட்டிக்

கொடுத்து விட்டால் யார் என்னைக் காப்பாற்றுவார்கள் என்றது. ஆதலால் உன் ஆசைகளைக்குறைத்து விடு. சமுத்திரத்தில் அநேகம் பொருள்களிருந்தாலும், அபாயமில்லாமல் இருக்க விரும்பினால் கரையிலேயே இருக்கவேண்டும். இதைக்கேழ்க்கவே எனது நண்பனுக்குக் கடுங்கோபம் வந்து சொன்னான் "இதெல்லாம் என்ன பேச்சு? சிறையிலிருக்கும் பொழுது உபயோகப்படுகிறவனே நண்பன். ஏனெனில் நல்ல காலங்களில் சத்துருக்களும் மித்திரர்களைப்போல் நடிப்பார்கள். அவர்களை நம்பாதே. ஆபத்துக் காலங்களில் உதவியளித்து உபயோகப்படுகிறவர்களையே நான் நண்பனென ஏற்றுகொள்வேன்."

அவன் கோபங்கொண்டதையறிந்தேன். முன்னிருந்த சிநேகிதத்தைக் எண்ணி இராஜசமுகத்தில் அவனை ஒரு வேலையிலமர்த்தினேன். அவனுடைய நடத்தைக்கும் திறமைக்கும் தக்கவாறு மேல் பதவிகளையும் அடைந்தான். அரசனுடைய அன்பிற்கும் ஆதாவிற்கும் ஆளானான். எல்லோரும் அவனை மெச்சலானார்கள். நானும்சந்தோஷமடைந்தேன் ஏனெனில் அந்தகாரத்திலேயே அமிருதம் அடங்கியிருக்கும். பொறுமையுடனிருப்பது கைப்பாகவேயிருக்கும். அதனுடைய பயனே இனிமையாயிருக்கும. இவைகளைக்கண்ட பின்னர் நான் வெளியூர்களுக்குப்போனேன். திரும்பிவருங்கால் எனது தோழனைக்கண்டேன். உடல்மெலிந்து இளைத்திருந்த அவனைப்பார்த்ததும் என்ன சமாச்சாரம் என்று வினவவே அவன் சொன்னான் "நீ முன் கூறினமாதிரியே முடிந்தது. பகையாளர்கள் என்பேரில் பழி சுமத்தினார்கள். அரசனும் விசாரணை செய்யவில்லை. எனது பழைய கூட்டாளிகளும் ஒன்றும் சொல்லவில்லை. துரதிருஷ்டவசத்தினால் ஒருவன் விழுந்

தால், உலகம் காலால் தேய்த்துவிடுகிறது. நல்லகாலம் வந்து விட்டால் கையைக்கூப்பிக்கொண்டு போற்றுகிறது. இவ்வளவு நாள் என்னைச் சிறையில் வைத்திருந்தான். இன்றே என்னை விட்டான்.'' உடனே சொன்னேன்: "நான் சொன்னதைக் கேழ்க்கவில்லை. அரசசேவை செய்வது சமுத்திர யாத்திரை யைப் போல் பயனுள்ளதே, ஆனால் பயங்கரமானது. பொருள் கள் கிடைக்கும். இல்லையேல் அலைகளிலகப்பட்டுக்கொண்டு அழியவேண்டியதே. கைகள் நிறையத்தங்கத்துடன் வியா பாரி கரையைச் சேர்ந்தாலும்சேருவான். இல்லாமற்போனால் மணலில் அவனுடைய சவத்தை அலைகள் கொணர்ந்து விட் டாலும் விடும். தேள்க்கொட்டைப் பொறுக்க முடியாதவன் அதனுடைய வளையில் காலை விடக்கூடாது.

கதை 17.

ஒழுக்க நெறிகளிலிருந்து வழுவாத ஒரு கூட்டத்தில் நான் சேர்ந்திருந்தேன். இதைக்கண்ட தனவான் ஒருவர், அதற்கு உதவியளித்துக் கொண்டிருந்தார். பின்னர் கூட்டத் தில் ஒருவன் நெறி கெட்டுப்போகவே, அவர் உதவிய ளிக்க மறுத்துவிட்டார். அவ்வுதவியைத் திருப்பிப் பெறுவ தற்கு எண்ணினேன். தனவானுடைய இல்லத்தை யடைந்ததும் வாயிற்காப்போர்கள் உள்ளே செல்ல உத் தரவளிக்கவில்லை. ஏழை எளியோன் என்றும், அறிமுகம் செய்துவைக்க எவரும் இல்லையென்றும் அறிந்து கொண்டால் காவலாளிகள் கழுத்தைப்பிடித்து வெளியில் தள்ளுவார்க ளென்று எனக்குத் தெரிந்திருந்ததினால், ஒருவாறு தேறுதல டைந்தேன். பின்னர் தலைமைக்காவலாளியிடம் என் விஷய த்தைத் தெரிவிக்கவே அவர் உள்ளே போகச்சொன்னார்.

நானும் போய் உட்கார்ந்து தனவந்தரிடம் சொன்னதாவது. "எங்களிடம் என்ன அபராதத்தைக் கண்டீர்கள்? குற்றங் குறைகளைக் கண்டும் ஆகாரம் அளிப்பதிலிருந்து தப்பாத கடவுள் ஒருவரே கருணைக்கடல். மகான்" இதைக் கேட்டவுடன் தனவந்தருக்குச்சரியென தோன்றிற்று. நானும் விடைபெற்றுக் கொண்டு கீழ்க்கண்டவைகளைச் சொல்லிக் கொண்டே திரும்பிவிட்டேன். "பழமில்லாத மரத்தில் எவனும் கல்லை எறியமாட்டான். ஆகையினால் என்னைத்தயவு செய்து மன்னித்து அருளவேண்டும்."

கதை 18.

அரசகுமாரன் அளவற்ற தானதர்மஞ் செய்து வந்தான். கீர்த்தியுடனிருக்கவேண்டுமானால் தாயாள சிந்தையுடனிரு. ஏனெனில் வாறி இரைப்பதினாலேயே விதை முளைக்கும். இதைக்கண்ட மந்திரி சொல்லுவான் "உன் முன்னோர்கள் பாடுபட்டு பிற்காலத்திற்குத் தேவையாயிருக்குமென்று சேமித்து வைத்தார்கள். உன்னை எதிர்த்து நிற்பது காலமும் சத்துருவுமேயாவார்கள். எனவே தான தர்மங்களைக் கட்டுப்படுத்து. ஒவ்வொரு தலைக்கு ஒரு தானியங் கொடுத்தாலும், ஊர் முழுவதும் கொடுக்க உன் பொக்கிஷம் போதாது. ஒவ்வொருவரிடமிருந்து ஒரு வெள்ளி வாங்கினாலும் தினந்தோறும் பொக்கிஷம் நிறையுமே." இது அரசகுமாரனுக்குப்பிடிக்கவில்லை. "நான் அனுபவிக்கவும் பிறரை அனுபவிக்கச் செய்யவுமே கடவுள் எனக்கு இப்பெரும் பதவியை அளித்திருக்கிறார். பொக்கிஷத்தைக் காக்கப் பிசாசல்ல நான்" என்றான்.

கதை 19.

நௌஷேரவான் வேட்டை யாடின பின்னர், சாப்பாட்டிற்கு உப்பில்லாமல் போகவே அடுத்த கிராமத்திற்குச் சென்று விலைக்குக் கொஞ்சம் வாங்கிவர ஆஞ்ஞாபித்தார். இவ்வற்பத்திற்கு விலையா கொடுக்கவேண்டுமென்று பிரதானிகள் வினவினபொழுது சொல்லுவார் "எளியோனுடைய தோட்டத்திலிருந்து அரசன் ஒரு பழம் எடுத்தால் வேலைக்காரன் வேருடன் மரத்தைக் கல்லுவான். சுல்தான் ஐந்து முட்டைகளைக் கொண்டு வரச்சொன்னால் சேவகர்கள் ஆயிரங் கோழிகளைக் கொலைசெய்வார்கள்."

கதை 20.

அரசனுடைய பொக்கிஷத்தை நிறப்பவேண்டி ஒரு தாசில்தார் குடி மக்களைத் துன்புறுத்தி வந்தான். "கடவுள் கட்டளைக்கு விரோதமாய், ஒருவனுடைய நட்பை அடைய வேண்டி எவனொருவன் பிறரைத்துன்பப்படுத்துகிறானோ அவன் அந்த ஒருவனாலேயே நாசத்தை யடைவான்" என்ற ஆன்றோர் மொழிகளைக்கூடத் தாசில்தார் பொருட்படுத்தவில்லை. வருந்துகிற மனதிலிருந்து எழும் புகையைவிட அக்கினி சுவாலையின் புகையதிகமாகாது. சிங்கத்தை மிருகராஜன் என்றும் கழுதையை 'கேவலம்' என்றும் சொல்லுவதுண்டு ; ஆனால் மனிதர்களைக் கொல்லும் சிங்கத்தைக் காட்டிலும்,பொதி சுமக்கும் கழுதையே சிறந்ததென்பது அறிஞர்களின்முடிவாகும். அறிவில்லாமலிருந்தும் பாரங்களைத்தாங்குவதினால் கழுதை உபயோகமாகிறது. உழைக்கும் மாடும், கழுதையும், உபத்திரவஞ் செய்யும் மனிதனைவிட, மேலானவை.

இவ்விஷயம் அரசனுக்கு எட்டியவுடன் தாசில்தாரைச் சித்திரவதை செய்யக் கட்டளையிட்டுவிட்டான். குடிமக்களுடைய மனதைக்கவராமல் அரசனுடைய அன்பைப்பெற முடியாது. ஈசனருளைபடைய விரும்பினால், அவருடையசிருஷ்டிகளிடம் கருணைகாட்டவேண்டும். தாசில்தாரைச் சித்திரவதைசெய்புங்கால் ஒருவன் சொல்லிக் கொண்டு போனதாவது "அதிகாரமுள்ள மந்திரிகள் எக்காலமும் குடிகளைக் கஷ்டத்திற்காளக்க முடியாது. எலும்பை விழுங்கி விடலாம். ஆனால் சிக்கிக்கொண்டால் வயிற்றைக் கிழித்துவிடும்."

கதை 21.

மகாத்மாவின மேல் ஒரு அயோக்கியன் கல்லொன்றை எறிந்தான். சாது சும்மா யிருந்து விட்டார். தெய்வகதியாக ஒரு சமயம் சிக்கிக்கொள்ள, அரசன் அவ்வயோக்கியனைக் குழியில் புதைக்கும்படி ஆஞ்ஞாபித்தான். அச்சமயத்தில் அவன் தலையின் பேரில் மகாத்மா அதே கல்லைவிட்டு எறியவே "நீ யார்? என்பேரில் ஏன் அதை வீசினாய்" என்று வினவினான்.

"நான் இன்னான், என் தலையில் அன்றைக்கு நீ எறிந்த கல் இது தான்" என்றார். "இவ்வளவு நாளாய் என்ன செய்துகொண்டிருந்தீர்களென்று" வினவவே, அவர் சொன்னதாவது "உன் பதவியைக் கண்டு பயந்தேன். நீ குழியிலிருக்கும் இந்நேரமே பழிக்குப் பழிவாங்க தக்க சமயம் என வறிந்தேன். யோக்கியதையற்றவனும் தகுதியற்றவனும் உயர் பதவியிலிருக்குங்கால் அறிஞர்கள் வணங்குகிறார்கள். கிழிக்க நகமில்லாத வரையில் துஷ்டர்களை எதிர்க்காதே. வெள்ளியினால் செய்யப்பட்டிருந்தாலும், எஃகினால் ஆக்கப்பட்ட வாளைப்பிடிப்பதினால், கைக்குக் காயமேற்படும். அதிருஷ்டத்தினால் அதி

காரம் குறையும வரையிலிருங்கள். பின்னர் இஷ்டப்பிரகாரம் நடந்து கொள்ளுங்கள்.

கதை 22.

இவ்விடத்தில் சொல்லுவதற்குக் கூடக்கேவலமான பிணியின் வாயிலகப்பட்டு ஒரு அரசன் பரிதவித்துக் கொண்டிருந்தான். எல்லா வைத்தியர்களும் பார்த்து ஒன்றும் பிரயோசனப்படாமல் கடைசியாக ஒருவனுடைய நெஞ்சீரல் வேண்டும் என்றார்கள். வைத்தியர்கள் சொன்ன தகுதிகளுக்கேற்ற ஒரு குடியானவனுடைய குமாரன் இருந்தான். அவனுடைய பெற்றோர்களுக்கு வேண்டிய திரவியங்களைத் தந்த பின்னர் காஜியுடைய அங்கீகாரத்தையும் அரசன் பெற்றுவிட்டான். அரசனுடைய உயிரைக்காப்பாற்ற குடிகளுடைய உயிரையும் வதைக்கலாமென்று விட்டார். கொலையாளிகள் அவனை வதைக்கத்தயாராயிருக்குங்கால் சிறுவன் முகமலர்ச்சியுடன் சிரித்தான். இப்பொழுது அவன் சிரிக்க வேண்டிய அதிசயமென்ன விருக்கின்றதென்று அரசன் வினவவே, சிறுவன் சொன்னான் "தங்களைப் பாராட்ட, மக்கள் பெற்றோர்களை நோக்குவார்கள். காஜிகளிடம் வழக்குகளை ஒப்புவிப்பார்கள். அரசனிடமிருந்து நீதியை எதிர்பார்ப்பார்கள். உலக ஆசையின் மேலீட்டால் என் பெற்றோர்கள் என்னைக் கொலை செய்ய உத்தரவளித்து விட்டார்கள். நீதிபதியும் சரியென்று விட்டார். அரசனும் சுயசுகத்தை வேண்டி என்னைக்கைவிட்டு விட்டார். பராபரக்கடவுளிடமன்னியில் வேறுயாரிடம் என் குறையைக் கூறுவது? உங்களுக்கு விரோதமாக நான் இருக்கும் இந்நிலையில் அவரிடமன்னியில் வேறு யாரிடம் சரணம் புகுவேன்?" இதைக்

கேட்டவுடன் அரசன் மனம் உருகி கண்களிலிருந்து நீர்ப் பெருக "ஒன்று மறியாதவனைக் கொலைசெய்வதை விட நான் இறப்பதே மேல்" என்று சொல்லி, வேண்டிய மரியாதை களைச் செய்து அவனை விடுவித்தான். அதே வாரத்தில் அரசனுடைய வியாதியும் குணமடைந்தது. "உன் காலடிகளிலிருக்கும் எறும்பின் அவஸ்தையை நீ அறியாவிட்டால், யானையின் கால்களினால் இடரப்படும்பொழுது உன் அவஸ்தையை ஊகித்துக் கொள்" என்று யானைப்பாகன் சொல்லுவது என் ஞாபகத்திற்கு வருகிறது.

கதை 23.

உம்ருலைஸ் என்பவரிடம் அநேகம் அடிமைகளிருந்தார்கள். அவர்களில் ஒருவன் தப்பியோடிவிட்டான். பிடித்துக்கொண்டுவர வேலையாட்களையனுப்பவே, திரும்பிக் கொண்டுவரப்பட்டான். தன்னுடைய பகையைத் தீர்த்துக் கொள்ளுவதற்காகவும் பிறருக்குப் படிப்பினையாகவும் வேண்டி, அடிமையைக் கொலை செய்துவிடும்படி மந்திரி உத்தரவிட்டார். எஜமானனைச் சாஷ்டாங்கமாக வணங்கி அடிமை முறையிட்டதாவது "தங்களுடைய அங்கீகாரத்தைப் பெற்றது நியாயமானதே, எஜமானனுடைய முடிவுக்கு விரோதமாய் அடிமை என்ன செய்ய முடியும்? தங்களுடைய போஷணையில் இதுவரையிலிருந்துவரும் என்னுடைய இரத்தத்தைச் சிந்தின பழி உங்களைச் சேரக்கூடாதென்றே நான் கோருகிறேன். அடிமையைத் தண்டிக்க உறுதி செய்துவிட்டால் நியாயத்துடன் அதைச்செய்யுங்கள். உங்களுக்கும் பழி ஏற்படக்கூடாது." அது எவ்விதம் முடியுமென்று அரசன் வினவினான். "மந்திரியைக் கொலைசெய்ய உத்தரவளியுங்கள்,

அதற்குத் தண்டனையாக என்னைக் கொலைசெய்து விடுங்கள். அப்பொழுது நீதி வழுவாமலாகும்" என்றான் அடிமை. அரசன் சிரித்துக்கொண்டு மந்திரியுடைய அபிப்பிராயத்தைக் கேட்டான். அதற்கு மந்திரி சொன்னான் "எனக்கு ஆபத்து நேரிடாமலிருக்கவேண்டியும், தங்கள் தகப்பனுடைய சமாதிக்குப் பூஜையாக வேண்டியும் இவ்வயோக்கியனை விடுதலை செய்து விடுங்கள். மண்ணைவாரி எறிவோர்களை எதிர்க்கிறவன் மடையன் என்று பெரியோர்கள் கூறியிருப்பதைப் பொருட்படுத்தாத நானே தப்பு செய்தவனாகின்றேன். சத்துருவைத்தாக்கும்பொழுது அவனுடைய குறியிலிருந்து மறைந்து கொள்ள வேண்டுமென்றோ?"

கதை 24.

தாராள மனமுடைய மந்திரி ஒரு அரசனிடமிருந்தான். மந்திரியுடைய நடத்தையில் அரசனுக்குக் கொஞ்சம் பிடிக்காமல் போகவே, அவனைத்தண்டித்தான். செய்ந் நன்றி மறக்கக்கூடாது என்ற உண்மையையறிந்த ராஜ சேவகர்கள் மந்திரியுடைய நன்மைகளை நினைத்துத் தீங்கிழைக்காமலிருந்தார்கள். சத்துருவுடன் சமாதானத்தை வேண்டினால் புறங்கூறினபொழுதிலும் நீ அவனைப் புகழ்ந்தே பேசு. கடுஞ்சொல் சொல்லக்கூடாது என்று விரும்பினால் நீ இன்சொல்லே உபயோகப்படுத்து. தண்டனையை மந்திரி அநுபவித்துக்கொண்டிருக்கும் பொழுது பிறநாட்டரசன் கீழ்கண்ட சமாச்சாரப்பத்திரம் ஒன்றை அவனுக்கு அனுப்பினான். "அந்நாட்டரசர்களுக்குக் குணத்தைக் கண்டறியத்தெரியாது. இம்மாதிரியாக உங்களை அவமானத்திற்கு ஆளாக்கினார்கள். தாங்கள் இவ்விடத்திற்கு

வருவீர்களானால் கௌரவிக்கப் படுவீர்கள்.'' இதற்கு மந்திரி, சில வரிகளைக் காகிதத்தின் பின்புறமே பதிலாக எழுதி யனுப்பிவிட்டான். இதையறிந்த அரசனுக்குக் கோபம் வந்து சமாச்சாரத்தைக் கோரவே இவ்விதம் அதன் பின்புறம் எழுதியிருந்தது. ''நீங்கள் கூறியிருப்பதை ஒத்துக்கொள்ள முடியாது. அற்ப காரணங்களை முன்னிட்டு, இது வரையில் என்னைப் போஷித்து பாதுகாத்து வந்த அரசக் குடும்பத்தை நான் உதறித்தள்ளிவிட முடியாது. ஏனெனில் எக்காலமும் நன்மையே செய்து கொண்டிருக்கிறவரை, ஒரு தீமையைச் செய்த பொழுதிலும், மன்னித்து விடும்படி கூறியிருக்கிறது''. இதைக் கேட்டதும் மந்திரியுடைய விசுவாசத்தை மெச்சி, அவனை விடுதலைசெய்து, மரியாதை பண்ணி, தான் செய்த குற்றத்தைப் பொறுத்தருளுமாறு வேண்டினான். அதற்கு மந்திரி சொன்னதாவது ''எஜமானனே, இது குற்றமாகாது. கடவுளாஞ்ஞையே யாகும். இது வரையில் என்னைப் போஷித்து பரிபாலித்து வந்த, தங்களாலேயே அக்குறை எனக்கு ஏற்பட்டது சாலச்சிறந்தது''. மனிதர்களுடைய விருப்பையும் வெறுப்பையும் மதியாதே. ஏனெனில் அது அவர்களுடைய அதிகாரத்திலில்லை. அதற்கு மூலாகாரணம் இறைவனே. அவராலேயே இவைகள் விளைகின்றன. வில்லிலிருந்து அம்பு வந்தபொழுதிலும், வில்லையே அறிஞர்கள் கவனிக்கிறார்கள்.

கதை 25.

காலந்தவறாமல் வந்து கொண்டும், வழுவாமல் தன் வேலையைச் செய்து கொண்டுமிருந்தவனுடைய சம்பளத்தை இரட்டிக்கும்படி அரசன் ஆஞ்ஞாபித்திருந்தான். ஏனெனில்

மீதியான எல்லோரும் பொறுப்பன்னியில் கடமையைச் செய்யாமலிருந்தார்கள். கூறிய புத்தியுள்ள ஒருவன் ஈசுவர சந்நிதானத்திலும் இவ்விதமே நடப்பதாகச் சொன்னான். முதலிரண்டு நாள் அரசசேவையில் அக்கரையுடனிருப்பவன் அவனது அன்பிற்கு ஆளாவான். அந்தரங்க விசுவாசமுள்ளவர்கள் ஈசனருளைப்பெறுவோமென்று பூரணநம்பிக்கையுடனிருப்பார்கள். வணக்கமிருந்தால் பெரியவனாவான். வணக்க மில்லாமற்போனால் வீணனாவான். சத்புருஷர்கள் வணக்கமாகிற வாயிற்படியில் தங்கள் தலையை வைத்துக் கொண்டிருப்பார்கள்.

கதை 26.

ஏழை எளியோர்களிடமிருந்து பலாத்காரமாய் விறகுகளை வாங்கி, தனவந்தர்களுக்கு இனமாக ஒரு கொடுங்கோலன் கொடுத்து வந்தான். இதைக்கண்ட நியாயவாதி "கண்டவர்களைக் கடிக்கும் பாம்பு நீ; உட்கார்ந்த இடத்தை நாசஞ்செய்யும் ஆந்தை நீ; உன்னுடைய அட்டூழியம் இங்கு சென்ற பொழுதிலும், சகல இரகசியத்தையும் அறிகிற சர்வேசுவரனுடைய சந்நிதானத்தில் செல்லாது. துன்பப்படுகிறவர்களுடைய துக்கம் வானத்தைச்சேராமலிருக்க வேண்டியதற்காக, ஜனங்களை வதைக்காதே." என்றார். இதை இலக்ஷியஞ் செய்யாமல், அவனை வையதனுப்பினான். சின்னாள் சென்ற பின்னர் கொடுங்கோலனுடைய வீடு முழுவதும் தீக்கிரையாகி விட்டன. அதே பக்கமாய் அப்பொழுது போய்க்கொண்டிருந்த நியாயவாதி சொன்னதாவது "ஏழைகளினுடைய வயிற்றெரிச்சலினின்றும் உண்டான புகையினாலேயே." ஒரு

ஆத்மாவாயிருந்தாலும் அதை வதைக்காதே. ஏனெனில் முழு உலகத்தையும் மாற்ற அதற்குச்சக்தியுண்டு. "எத்தனை நாள் எவ்வளவு நேரம் என்னுடைய சவக்குழியின் மீது ஜனங்கள் நடமாடக்கூடும்? வரிசைக்கிரமத்தில் எனக்கு இராச்சியம் வந்ததுபோலவே என்னிடமிருந்தும் போகும்." இதுவே கேய்குஸ்ருவுடைய முடியில் செதுக்கப்பட்டிருக்கிறது.

கதை 27.

மல்லகசெட்டிக்கு முந்நூற்று அறுபது தந்திரங்கள் தெரியும். அவைகளைத்தினந்தோறும் புதியது புதியதாகக் காண்பித்துக்கொண்டிருந்தான். இளமைப்பருவமுள்ளவனுக்கு ஒன்று குறைவாக மீதியான யாவற்றையும் கற்றுகொடுத்தான். சிஷ்யனும் சாலச்சிறந்தவனானான். ஒரு தினம் சுல்தானிடம் வந்து தன்பெருமையைக் கூறினான். குருவைச்சண்டைக்கு அழைக்க இஷ்டப்படாமலிருந்தாலும் இருவர்களுடைய பலத்தைக் கண்டறிவேண்டி போட்டியாட்டம் ஒன்று ஏற்பாடு செய்தான். பெரிய மைதானத்தில் மந்திரிகளும் பிரதானிகளும் வந்து கூட, சிறுவன் மதம் பிடித்த யானையைப்போல் நுழைந்தான். தன்னைவிட பலம் அதிகமுள்ளவனாகச் சிறியவனை யறிந்த குரு தன்னிடம் பாக்கியிருந்த அந்த ஒரு தந்திரத்தைக் கொண்டு அவனைத் தூக்கி கீழே எறிந்தான். சனங்களும் நகைத்தனர். குருவிற்குத்தக்க மரியாதை செய்துவிட்டு, அரசன் சிறுவனைக் கண்டித்தான். அதற்கு அவன் சொன்னதாவது "பலத்தினாலும் பராக்கிரமத்தினாலும் குரு என்னை வெல்லவில்லை. எனக்குக் கற்றுக் கொடாமலிருந்த ஒரு தந்திரத

தைக் கொண்டு என்னை ஜெபித்தார்.'' இதற்குக் குரு சொன்னதாவது "பெரியோர்கள் கூறியுள்ள வண்ணம் சிநேகிதனுடைய முழுவசத்தில் இராதே. ஏனெனில் விரோதமாய்விட்டால் அவனை ஜபிப்பான். உலகில் செய்ந் நன்றியே கிடையாது. இருந்தாலும் அதை அனுபவத்தில் ஆளுவோர் கிடையாது.''

கதை 28.

கானகத்தின் மூலையில் ஏகாந்தமாய் ஒரு பக்கிரியிருந் தார். அரசன் அவ்வழியாகச் சென்றார். மகிழ்ச்சியின் இருப் பிடமாயிருக்கும் ஏகாந்தவாசத்திலுள்ள அவர், அரசனைக் கண்டதும், காலையும் முடக்கவில்லை, தலையும் வணங்கவில்லை. வழிப்போக்கர்களான பக்கிரிகள் மிருகத்தை யொத்தவர்கள் என்று அரசன் சொன்னான். இவ்வுலகையாளும் மன்னன் வரும்பொழுது தாங்கள் என் மரியாதை செய்யவில்லையென்று மந்திரி வினவவே பக்கிரி சொன்னார் "பிரதி பலனை எதிர் பார்க்கிறவர்களிடமிருந்தே பணிவிடைக்கிடைக்குமென்பதை அரசனுக்குச் சொல்லு. பிரஜைகளுடைய பாலனத்திற்கே அரசன்; பணிவிடைக்காகப் பிரஜைகளில்லை யென்பதையும் சொல்லு. செல்வமும் சீரும் பெற்றவனாயிருந்தாலும் குடிமக் களுடைய காவலாளேயாவான். இடையனுக்காக ஆடு களில்லை. ஆடுகளைக் காப்பாற்றவே இடையனிருக்கிறான். இன் றைக்கு ஒருவன் சர்வசம்பத்துடன் கூடினவனும் மற்றொ ருவன் பெரும் தரித்திரனும் இருக்கலாம். முடிவு நாளில் வீண்யோசனை செய்கிறவனுடைய மூளையை அரிந்துவிடும். தலைவிதி வரும்பொழுது பணமுள்ளவன், பணமில்லாதவன் என்கிற வித்தியாசம் கிடையாது. சவக்குழியைத் திறந்து

பார்த்தால் தனவானுக்கும் பக்கிரிக்கும் வித்தியாசம் தெரியாது.'' இவைகளைக் கேட்டதும் அரசன் மனதில் பெரும் மாறுதல் உண்டாச்சுது. "உனக்கு யாது வேண்டும்'' என்று கேழ்க்க "தங்களுடைய தொந்திரவு இல்லாமலிருக்கவேண்டும்'' என்றான் பக்கிரி. "எனக்கு நல்லுபதேசம் செய்யுங்கள்'' எனவே, பக்கிரி சொன்னதாவது "அதிகாரமும் செல்வமும் இருக்குங் காலத்தில் அது ஒருவர் கையிலிருந்து இன்னும் ஒருவர் கைக்கு மாறும் என்பதைக் கவனம் வைத்துக் கொள்.''

கதை 29.

"அரசனுடைய சேவையில் அல்லும் பகலும் இருந்து வருகிறேன். அவனுக்குப் பயந்து உழைக்கிறேன். ஏதேனும் நன்மைக் கிடைக்குமென்று நம்புகிறேன்'' என மந்திரி ஒருவரிடம் சொன்னான். அவர் அழுதுவிட்டு சொன்னார் "நீ அரசனுக்குப் பயந்திருப்பதுபோல் நான் கடவுளுக்குப் பணிவிடை செய்திருப்பேனானால் புண்ணியாத்மாக்களில் ஒருவனாகச் சேர்க்கப்பட்டிருப்பேன்.'' பரிசுக்கும் தண்டனைக்கும் பயப்படாமலிருந்தால் பக்கிரி தெய்வலோகத்தை யடைவான். அரசனுக்குப் பயப்படுவதுபோல் கடவுளுக்குக் கீழ்ப்படிந்திருந்தால் மந்திரி தேவனாயிருப்பான்.

கதை 30.

ஒன்றுமறியாதவனுக்குச் சிரச்சேத தண்டனை அரசன் அளித்தான். "என்னைத் தண்டிப்பதினால் உன் சுயநாசத்தைத் தேடிக்கொள்ளாதே'' என்றான். அது எவ்விதம் முடியும் என்று அரசன் வினவவே அவன் சொன்னதாவது

"என்னைப்பற்றின வரையில் கொஞ்ச நேரத்திற்குள் சித்திரவதை பயனற்றதாய்விடும். ஆனால் அதனுடைய குற்றம் உன்னை வெகு நாள் சூழ்ந்துகொண்டிருக்கும். பாலைவனத்துக் காற்றே போல் வாழ் நாள் முடிவடைந்துவிடும். நன்மையும் தீமையும், வடிவமும் வடிவக்கோணலும், இல்லாமற் போய்விடும். என்னைக் கொன்றுவிட்டதாகக்கொடுங்கோலன் நினைத்துக்கொள்ளலாம். ஆனால் அது என்னுடன் மறைந்தபொழுதிலும் அவனையே சுற்றிக்கொண்டிருக்கும்". இவ்வுபதேசமொழிகளினால் அரசன் பயனடைந்தான். அவனையும் விடுவித்துவிட்டு மன்னிப்புக் கேட்டுக்கொண்டான்.

கதை 31.

நௌஷேரவானின் மந்திரி சபை பெரும் இராஜகாரியங்களைப்பற்றியோஜனை செய்துகொண்டிருக்கும்பொழுது அவரவர்களுடைய புத்திக்கேற்றவாறு பதிலளித்தார்கள். ஒருவன் மாத்திரம் அரசன் சொன்னதையே சரியென்று ஆமோதித்தான். பல பெரியோர்களுடைய அபிப்பிராயத்திற்கு மாறாக ஏன் அவன் அங்ஙனம் அரசனுடையதை யங்கிகரித்தானென்று இரகசியமாகக் கேழ்க்கவே அவன் சொன்னதாவது "காரியசித்தி கடவுளைப் பொறுத்தது. எவனாலும் நிச்சயமாய்க் கூறமுடியாது. எனவே அரசன் பக்கம் சேர்ந்து கொள்வதே மேலானது. ஏனெனில் விரோதமாய் முடிந்தாலும் அரசனுடைய கோபத்திற்கு ஆளாகமாட்டேன். அரசனுக்கு மாறாக நினைப்பது தன் இரத்தத்திலேயே தன் உயிரைக் கழுவுவது போலாம். அவன் பகலை இரவென்றால்

அறிஞர்கள் சந்திரனும் சப்தரிஷி மண்டலமும் அதோ தெரிகிறது பார் என்பார்கள்.

கதை 32.

போக்கிரி யொருவன் சடைமுடி வைத்துக்கொண்டு, அலி வம்சத்தில் பிறந்தவனென்று சொல்லிக்கொண்டு மெக்காவை யடைந்து அரசனைப் பேட்டி கண்டு சில பாக்களைச் சொன்னான். சபையிலுள்ள ஒருவன் "இவனை நான் பஸ்ராவில் கண்டேன் எவ்விதம் ஹஜ்ஜீ யாத்திரையை முடித்திருக்க முடியும்?" என்றான். மற்றொருவன் "இவனுடைய பெற்றோர்கள் கிறிஸ்துவர்களாயிருக்க எவ்விதம் புனிதனுவான்" என்றான். அரசனுக்குக் கோபம் வந்து தண்டிக்கும் படி உத்தரவளித்துவிட்டார். இதைக்கேட்ட போக்கிரி பதில் சொன்னதாவது "நான் சொல்லவேண்டியது இது ஒன்றே உளது. பால்க்காரன் கொண்டு வரும் பாலில் இரண்டு பங்கு ஜலங்கலந்திருக்கும். ஒரு பங்குதான் பால் இருக்கும். எனவே அடியேன் பொய் சொன்னாலும் பொறுத்தருளவேண்டும். யாத்திரிகர்கள் சொல்லாத பொய்யுமுண்டோ?" இதைவிட உண்மையான வார்த்தைகளைக் கேட்டதில்லை யென்று கூறி அரசன் அவனை மன்னித்துவிட்டான்.

கதை 33.

தன்னைவிடத் தாழ்ந்தவர்களிடம் மிகுந்த கருணைக் காட்டி பிரத்தியேகமாகவ்வொருவருடைய சுகத்திற்காகவும் பாடுபட்டு வந்த மந்திரி யொருவனிருந்தான். அரசனுடைய கோபத்திற்கு ஒரு சமயம் ஆளாகவே அவனை அதிலிருந்து விடுவிக்க எல்லோரும் பிரயத்தினப்பட்டார்கள். அவனைக்

காவலில் காத்து வந்தவர்கள் மிகவும் பிரியத்துடன் நடத்தினார்கள். எல்லோரும் ஒன்று கூடி அரசனிடம் அவனுடைய குணங்களையெடுத்துச் சொன்னார்கள். அரசனும் விடுதலை செய்துவிட்டான். மித்திரர்களுடைய நட்பைப் பெறவேண்டி பிதுராஜ்ஜித தோட்டத்தைக் கூட விற்று விடு. உன் நன்மையைக் கோருகிறவர்களுடைய உலை கொதிக்கவேண்டி உன் சாமான்கள் யாவற்றையும் எரித்துவிடு. தீயோனாயிருந்தாலும் நன்மையே செய். நாயா யிருந்தாலும் அதன் வாயை எலும்பினால் மூடிவிடு.

கதை 34.

தன்னுடைய தாயைக் கீழ்த்தர உத்தியோகஸ்தன் மகன் ஒருவன் நிந்தனை செய்தான் என்று ஹரூன். அர். ரஷீத் மகன் ஒருவன் தகப்பனிடம் முறையிட்டான். இக்குற்றத்திற்குத் தக்கதண்டனை யென்னவென்றுவினவவே, மந்திரியொருவன் கொலை செய்துவிடவேண்டும் என்றான். ஹரூன் சொன்னதாவது "மகனே நீ மன்னிக்கவேண்டும். அதற்கு வேண்டிய ஆத்ம சக்தி யில்லாத பட்சத்தில் அவனுடைய தாயை நீ நிந்தித்துவிடு. ஆனால் வரம்பு கடந்துவிடாதே. அதிகமாய் நிந்திப்பாயேயானால் குற்றம் நம்மைச் சேரும்" என்றார். மதயானையுடன் சண்டை செய்பவன் தைரியசாலியாகமாட்டான். கடுங்கோபத்தில் கூட ஆகாத வார்த்தைகளைச் சொல்லாதவனே தீரன். இதுவே அறிஞர்களின்முடிவு. துஷ்டன் ஒருவனைத் திட்டினான். அவன் அதை ஏற்றுக் கொண்டு "என் நண்பனே நீ சொல்வதைக் காட்டிலும் என் குற்றங்களை நான் அறிவேன்" என்றான்.

கதை 35.

சிற்சில பெரியோர்களுடன் நான் ஒருபடகில் சென்று கொண்டிருந்தேன். அச்சமயத்தில் இன்னுமொரு படகு எங்களுக்குச் சமீபத்தில் முழுகவே, இரு சகோதரர்களும் தண்ணீரில் அகப்பட்டு நீர்ச்சுழலில் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார்கள். ஆயிரம் வெள்ளி தருவேன் என்று சொல்லவே மாலுமி ஒருவரைக் காப்பாற்றினுன். வேறொரு சகோதரன் முழுகி உயிர்துறந்தான். அதிர்ஷ்டமில்லாதபடியினுல் அவன் இறந்தான் என்றுநான் சொன்னேன். அதற்கு மாலுமி சொன்னதாவது "நீங்கள் கூறினது உண்மையான பொழுதிலும் இன்னும் ஒருகாரணம் உண்டு. நான் கானகத்தில் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் பொழுது எனக்கு ஒட்டகத்தை இவர் கொடுத்து உதவிபுரிந்தார். என்னுடைய இளம்பிராயத்தில் என்னை, முழுகிப்போனவர் சவுக்காலடித்தார். ஆகையினுல் நான் இவரைக் காப்பாற்றினேன்." கடவுள் நியாயமானவர். நன்மை செய்கிறவர்கள் நன்மையும் தீமை செய்கிறவர்கள் தீமையுமே அனுபவிப்பார். கூடுமான வரையில் எப்பிராணியையும் துன்பப்படுத்தாதே. ஏனெனில் வாழ்நாளின் வழிகளில் பல முட்புதர்களிருக்கின்றன, உனக்கும் துன்பங்களேற்படுமாதலால் பிறருடைய துன்பங்களைக் காப்பாற்றுவாயாக.

கதை 36.

இரு சகோதரர்களில் ஒருவன் இராஜ சேவையிலிருந்தான். மற்றொருவன் தானே பாடுபட்டு உழைத்து ஜீவித்துக் கொண்டிருந்தான். பணமுள்ள சகோதரன் மற்றவனிடம்

வந்து "நீ என் தொழில் செய்யவேண்டும்? அரசனுடைய வேலையில் அமர்ந்துவிடேன்" என்றான். அதற்கு இவன்சொன்னதாவது "அடிமைப் பட்டதை அறுத்து எறியவேண்டி நீ என் தொழில் செய்யக்கூடாது? தங்கக்கவசம் அணிந்துகொண்டு பிறருடைய உதவியை எதிர்பார்ப்பதைக் காட்டிலும், தானே சாப்பிட்டுச் சுகமாயிருப்பதே சிறந்தது. வேலையாட்களை அழைத்துப்போவதைக்காட்டிலும் தன்கையினாலேயே சுண்ணாம்பைத் தடவிக் கொள்வது நல்லது. மாரிகாலத்தில் எதைச்சாப்பிடுவேன், மழைகாலத்தில் எதை உண்பேன் என்னும் கவலையினாலேயே வாணாள் வீணாகிறது. ஒன்றுமறியா வயிறே!! அடிமைத்தொழில் புரியாமலிருக்கவேண்டி ஒரு ரொட்டித் துண்டைக் கொண்டு திருப்தியடைவாய்.

கதை 37.

"உன் சத்துரு கருணாகரக் கடவுளின் அன்பால் அழிந்துபோய்விட்டான்" என்ற சந்தோஷச் செய்தியை நௌஷிர்வான் அரசனுக்கு அறிவிக்கவே அவர் சொன்னதாவது. "என்னை விட்டு விடுவார் என்று எண்ணாதே. என் ஆயுள்காலமோ நித்தியமாகாது. எனவே சத்துருவின் மரணத்தினால் எனக்கு யாதொரு களிப்புங்கிடையாது".

கதை 38.

இராஜ சபையில் ஒரு விஷயத்தைப்பற்றி பிரஸ்தாபித்தபொழுது எல்லோரும் அதில் கலந்து கொண்டனர். ஒருவர் மாத்திரம் ஒன்றும்பேசாமலிருந்தார். காரணங் கேட்கவே அவர்சொன்னார்:— மந்திரிகள், வைத்தியர்களை ஒத்திருக்கிறார்கள். பிணியாளர்களுக்கே வைத்தியர்கள்

மருந்தளிப்பார்கள். நீங்கள் பேசுவது நியாயமாயிருக்கும் பொழுது நான் ஏன் நடுவில் புகவேண்டும்? என்னுடைய உதவி யன்னியில் ஒருகாரியம் நடக்கக் கூடுமேயானால் நான் அதில் கலந்துகொள்ள வேண்டிய அவசியமில்லை. ஆனால் கிணற் றின் திசையை நோக்கிக் குருடன் போய்க்கொண்டிருக்கும் பொழுது நான் பேசாதிருப்பின் அது குற்றமாகும்.''

கதை 39.

ஹரூன்-அர்-ரஷீத், மிசிர நாட்டை வென்ற பின்னர் ''மிசிர தேசத்திற்கு அதிபதியாயிருக்கிறோம் என்ற'' கர்வம் மேலிட்டு அதன்பயனாக அத்துரோகி தானே தெய்வம் என்று பறைசாற்றிக் கொண்டிருந்தான். அவனுக்குப்பதிலாக மிகவும் இழிவான என்னுடைய அடிமைகளிலொருவனை அரச னாகச்செய்வேன்'' என்று சபதங்கூறி, மடையனுக்குப் பட்டா பிஷேகஞ் செய்துவைத்தான். அகால மாரியினால், நீல நதிக்கரையில் விதைத்திருந்த, பஞ்சுச்செடிகள் நாசமாய்விட் டன என்று அவ்வூர் குடியானவர்கள் முறையிடவே, நீங்கள் கம்பளத்தைப் பயிர்செய்திருக்க வேண்டுமென்று சமயோசித மாய்ப் பதிலளித்தான். இதைக் கேட்டுகொண்டிருந்த அறி ஞர் ஒருவர் சொன்னதாவது ''புத்தியினால் பணம் பெருகு மேயானால், மடையனைப்போல் வருந்திகிறவர்கள் எவரும் இருக்கமாட்டார்கள். ஆயிரம் புத்திசாலிகளும் அதிசயிக்கும் வண்ணம் ஒரு மடையன் மீது, கடவுள் செல்வங்களைச் சுமத்து கிறார். பணமும் புகழும் இறைவனிஷ்டமன்னியில் தானே வராது. மடையர்கள் போற்றப்பட்டு, அறிஞர்கள் அவமானப் படுத்தப்பட்டு வருவதை நாம் காண்கிறோம். ரசாயன சாஸ் திரி துக்கத்தினாலும் துன்பத்தினாலும் உயிரைத் துறந்

தான். மடையனுக்குப் பாழான நிலத்திலும் பொக்கிஷம் அகப்படும்.

கதை 40.

சீனப்பெண்ணை அரசனிடம் கொண்டு வந்தார்கள். அவர் அப்பொழுது குடிவெறியிலிருந்தார். அவளுடன் தேக சம்பந்தஞ்செய்ய ஆசைகொண்டார். பெண் மறுத்துவிட்டாள். அவருக்கு அடங்காத கோபம் வந்து அவளைத் தன் நீக்ரோ ஜாதியைச்சேர்ந்த அடிமைகளொருவனிடம் கொடுத்து விட்டார். நீக்ரோவுடைய மேல் உதடு மூக்கிற்கு மேல் வளர்ந்திருந்தது. கீழ் உதடு மாருக்குக் கீழ்த் தொங்கிக் கொண்டிருந்தது. அவனைக்கண்டு ராக்ஷஸர்களும் நடங்குவார்கள். அவ்வளவு விகார உருவத்தைக் கொண்டவன் அவன். தேகத்திலிருந்து வரும் வியர்வையின் நாற்றம் பிண நாற்றத்தைப் போலிருந்தது. காமவெறி மேலிட்டு நீக்ரோ, பெண்ணின் கற்பையழித்து விட்டான். மறுதினம் காலையில் அரசனுக்கு இச்சமாசாரம் தெரியவே அடிமையையும், பெண்ணையும் ஒன்றுகக்கட்டி மலை மேலிருந்து கீழே உருட்டிவிடுமாறு உத்தரவளித்து விட்டார். அடிமைகளெல்லாம் அரசனுடைய அன்பிற்கும் ஆதரவிற்கும் பாத்திரமாச்சுதே என்று வினவ அரசன், "ஒரு இரவாவது தன்னுடைய காமத்தை அவன் அடக்கி யிருக்கவேண்டும்" என்றான். "நாவறண்டு இருக்கிற மனிதன் நிர்மலமான சுனையைக் கண்டவுடன் மதயானைக்கும் பயப்படமாட்டான். அறுசுவை அன்னத்துடன் கூடின அறையிலுள்ள கடும்பசியைக் கொண்டவன், உபவாசமிருக்கமாட்டான்" என்றான் மந்திரி. சமயோசிதமான இப்பதிலைக் கேட்டவுடன், அரசன் திருப்தியடைந்து "நீக்ரோவை உனக்

க்கு அளித்துவிடுகிறேன்; பெண்ணை என்னசெய்வது'' என்ருன். ஒருவன் எச்சிலைச் சாப்பிட எவனும் விரும்பமாட்டானுகையினுல், நீக்ரோவிற்கே அவளை அளித்துவிடுங்கள் என்ருன். அருவருப்பான குணங்களைக்கொண்டவனுடன் சகவாசஞ்செய்யாதே. துற்நாற்றமுள்ள வாயினுல் குடிக்கப்பட்ட ஜலத்தின் மீதியை, தாகத்தினுல் மேலிட்டவன்கூடக் குடிக்கமாட்டான். அழுக்கில் விழுந்த பழத்தை அரசனுக்குப் பரிசாகவும் அளிக்கமுடியுமோ? புண் வாயினுல் தொடப்பட்ட ஜாடியிலுள்ள நீரை எவன்தான் குடிக்க விரும்புவான்?

கதை 41.

"உன்னைவிட பணமும் பெயரும் படையும் அதிகமுள்ள அரசர்களால் ஒன்றுமுடியாமலிருக்க நீ மாத்திரம் எவ்விதம் கிழக்கேயிருந்து மேற்குவரையிலுள்ள நாடுகளைச் சயித்தாய்?'' என்று அலக்சாண்டரைக் கேட்டதிற்கு அவர் சொன்னதாவது "ஈசுவர சங்கற்பத்தினுல் எந்நாட்டைச் சயித்தாலும் நான் ஜனங்களைத் துன்புறுத்துவதில்லை. அவர்களை ஆண்டுக்கொண்டிருந்த அரசர்களையும் தூஷிப்பதில்லை. பெரியோர்களைத் தூஷிக்கிறவன் சிறந்தவனுகமாட்டான். நாடும், ஆட்சியும்; சண்டையும், ஜயமும்; சட்டமும், தாக்கீதும்; இவைகள் கைவிட்டு கைமாறிவிட்டால் பிரயோசனமற்றவைகளே. உன்னுடைய பெயரும் பழுதடையாமலிருக்கப் போனவர்களின் பெயரைத் தூற்ருதே.

இராஜ நீதி முற்றிற்று.

அத்தியாயம் 2.

பக்கிரி நீதி.

கதை 1.

ஒருவன், யோகியைப் பார்த்து "உலகம் தூற்றும்படியான இப்பக்தனைப்பற்றித் தங்களுடைய அபிப்பிராயம் என்ன" என்று கேட்டபொழுது, அவர் "மேற் பார்வையில் குற்றத்தைக் காணுவதற்கில்லை; உள்ளத்தில் அடைத்து வைத்திருப்பதை நானறியேன். தர்ம காரியத்தில் முனைந்து நிற்கிறவர்களைக் காணும் பொழுதெல்லாம், அவர்களுடைய அந்தரங்கத்தை அறியாதவரையில், உண்மையானவர்களென்றே வைத்துக்கொள்ளுங்கள். நீதிபதிக்கு வீட்டிற்குள் நுழைந்து காண வேண்டிய அவசியம் என்ன?" என்று விடையளித்தார்.

கதை 2.

மக்காவின் வாயிலில் தலையை வைத்துக்கொண்டு அழுத குரலுடன் பக்கிரியொருவர் முறையிட்டுக் கொண்டிருந்ததாவது: "யாவற்றையும் பொறுத்தருளும் பெருந்தகையானே! அஞ்ஞானி; அநியாயம் செய்கிறவன்; பாபி; இம்மனிதர்களிடமிருந்து எதுகிடைக்குமென்றும், எதை உனக்கு அர்ப்பணம் செய்வார்களென்றும் நீ அறிவாய். என்னை மன்னித்தல் வேண்டும். ஏனெனில் நான் செய்யும் கடமைகளுக்குப் பதிலை எதிர்ப்பார்க்கவில்லை. ஜனங்கள் பாபத்தைப்

பொறுத்தருளுமாறு இரப்பது சகஜம். கடவுளை யறிந்தவர்கள் உபாசனையின் ஒழுங்கு தவறுபவர்களுக்கு மன்னிப்பு கேட்பார்கள்.

பக்தர்கள் தங்கள் பக்தியின் பரிசை எதிர்பார்ப்பார்கள்; வியாபாரிகள் தங்களிடம் உள்ளசரக்கின் விலையை எதிர்பார்ப்பார்கள். நானோ பிச்சைக்காரன். வியாபாரம் செய்யவரவில்லை. ஆசையை முன்னிட்டு வருகிறேன். என்னுடைய நிலைமைக்கு ஏற்றவாறு நடத்தாமல் உன்னுடைய இருப்புக்குத் தக்கவாறு நடத்துவாயாக. நீ என்னைக் கொன்றாலும் சரி; காப்பாற்றினாலும் சரி; நான் உன்னைப் பணிந்து நிற்கின்றேன். கட்டளையிடவேண்டியது சேவகனின் வேலை யாகாது. கொடுத்த வேலையைச் செய்வதேயாகும்.'' சா ஆபாவின் வாயிற்படிகளில் நின்று கொண்டு தபஸ்வி அழுது கொண்டிருந்ததாவது ''நான்என்னுடைய பாபங்களைப் பொறுத்தருளுமாறு வேண்டுகிறேனே தவிர, என் பணிவிடையை ஏற்கும்படி வேண்ட வில்லை.''

கதை 3.

அப்துல் காதிர் கிலானி மக்காவின் ஆலயத்தில் விண்ணப்பித்துக் கொண்டிருந்ததாவது ''ஹே! சர்வேசுரனே!! என் குற்றங் குறைகளை மன்னிப்பாயாக. மன்னிக்காமல் தண்டனைக்கு ஆளாக்கினால் விமோசன தினத்தன்று, புண்ணியாத்மாக்களுடையமுன்னில்அவமானப்படாமலிருக்கவேண்டிஎன்னைக் குருடனாகச் செய்துவிடு! சோர்வையடைந்து பிரதிதினமும் விடியற்காலையில் பூமியின் பேரில் முகத்தை வைத்துக் கொண்டு நான் வேண்டிக்கொள்வேன். ''ஏ ஈசுவரனே! உன்னை நான் மறவேன். என்னைப் பராமுகஞ் செய்யக்கூடாது.''

கதை 4.

தர்மாத்மாவின் வீட்டில் திருடன் நுழைந்து வெகு நேரம் தேடித் தேடிப்பார்த்தும் ஒரு பொருளும் கிடைக்கவில்லை. இதைப்பார்த்துக்கொண்டிருந்த அவர், திருடன் ஆசை யற்றுப் போகாமலிருக்கவேண்டி, தான் போத்திக் கொண் டிருந்த கம்பளத்தைக் கழற்றி அவன் தப்பிப்போகும் வழி யில் எறிந்தார். உண்மையான தர்ம புருஷர்கள் சத்துரு மனதைக் கூட நோகச் செய்ய இசையமாட்டார்கள். எக்கால மும் மித்திரர்களுடன் சண்டை செய்து கொண்டிருக்கும் நீ இப்பதவியை எங்ஙனம் அடைதல் முடியும்? தர்மாத் மாக்கள், முன்னும் பின்னும் ஒரே விதமாகவே யிருப்பார்கள். பின்னால் புறம் பேசி, ஆளைக் கண்டவுடன் உயிரையும் விடத் தயாராயிருப்பவர் போல் நடிக்கமாட்டார்கள். உன் முன்னிலை யில் ஆட்டுக் குட்டியைப்போலும் பின்னால் ஓநாயைப் போலும் நடிக்கமாட்டார்கள். உன்னிடம் அயல் வீட்டுக் காரர்களுடைய குற்றங்குறைகளைச் சொல்லுகிறவர்கள் உனக்குப்பின்னால், உன்னிடமுள்ள குறைகளைப் பிறரிடம் பிரசுரம் செய்வார்கள்.

கதை 5.

யாத்ரிகர்களுடைய கூட்டத்தில் என்னையும் ஒருவனாகச் சேர்த்துக் கொள்ளும்படிக் கேட்டும் முடியாதென்று மறுத் விட்டார்கள். பரோபகாரம் செய்யும் தர்மாத்மாக்களுக்கு இது முறையல்லவென்றும், ஏழை எளியோர்களைப் புறக் கணித்தல் கூடாதென்றும், நான் அவர்களுக்கு உபகார முள்ளவனாகவே யிருப்பேன் என்றும் கூறினேன். அதற்குள்

ஒருவரிடம் மற்றொருவர் சொன்னதாவது "கொஞ்ச நேரத்திற்கு முன்னமே சாதுவேஷத்தில் திருடன் வந்து நம்முடன் கலந்து கொண்டான். எனவே இவ்வார்த்தைகளைக் கேட்டு நீர் மனங்கலங்கவேண்டாம். எழுதினவனுக்கே தபாலின் விஷய விவரம் தெரியும்." பக்கிரிகள் எல்லோரும் அங்கீகரிக்கிறபடியினால், அவனைப்பற்றி சந்தேகப்படாமல் சேர்த்துக்கொண்டார்கள். மானிட கண்களுக்கு பக்கிரியுடைய உடையே போதுமானது. உன்னுடைய செய்கைகள் நன்மையுள்ளதாயிருக்கிற வறையில் எந்த உடையைத் தரித்துகொண்டாலும் சரி: தலை முடியில் மகுடத்தைத் தரித்துக்கொண்டாலும் சரி: அல்லது முதுகில் சுமையைத் தாங்கிக்கொண்டாலும் சரி; கரடு முரடான வஸ்திரங்களையணிவதினால் ஒருவன் தர்மாத்மாவாகமாட்டான். பட்டைக் கட்டிக்கொண்டு தர்மாத்மாவாயிரு. சம்சார இன்ப சுகங்களைத் துறப்பதினாலேயே பரிசுத்தமாக முடியும் என்று எண்ணவேண்டாம். கேவலம் துணிகளை மாற்றிக்கொள்வதனால், ஒருவன் பெரியவனாய் விடுவான் என்பதில்லை. யுத்தகளத்திற்கு வேண்டியது ஆண்மைத்தனம். பேடிக்குக் கவசம் போடுவதினால் யாது பிரயோஜனம்? வெகு நேரம் பிரயாணம் செய்தபின்னர் மாலைப்பொழுதில் மரத்தடியில் தங்கினோம். இத்திருடன் ஒரு பாத்திரத்தைத் திருடிக் கொண்டு தப்பி யோடிவிட்டான். சாதுவின் ஆடையை அணிந்திருந்த இவன் தெய்வத்தின் போர்வையைக் கொண்டு கழுதையை மறைத்துக்கொண்டிருந்தான். அத்திருடன் அங்கிருந்து சென்று அரண்மனையில் களவாடி பின்னர் தப்பி யோடிவிட்டான். காலையில் இவன் அகப்பட்டுக் கொண்டான். அரசன் இவனுக்குச் சிறைத்

தண்டனை அளித்து விட்டான். அத்தினத்திலிருந்து எங்களுடைய கூட்டத்தைப்பெருக்க விரும்பவில்லை. தனியாகவே யிருந்தோம். ஏனெனில் அதிலேயே திருப்தியின்பத்தை கண்டோம். கூட்டத்திலொருவன் குற்றம் செய்துவிடில் பெரியவர்களாயினும் சிறியவர்களாயினும் எல்லோரையும் அது பாதிக்கும். ஒரு எருமையின் வியாதினல் கிராமத்திலுள்ள சகல எருமைகளுக்கும் வியாதி பரவிவிடும். "அவர்களுடைய சேர்க்கையிலிருந்து என்னை அப்புறப்படுத்திவிட்ட போதிலும், நான் பரமேசுவரனுக்கு மிகவும் நன்றி யுள்ளவனுயிருக்கிறேன். ஏனெனில் இனி வரப்போகும் என் வாழ் நாள் முழுவதும் உபயோகமாகும் படிப்பினையை அவர்களுடைய சேர்க்கையிலிருந்து அறிந்து கொண்டேன்". கூட்டத்தில் ஒருவனுடைய ஒழுங்கற்ற நடவடிக்கையினுல் பலஞானிகளுடைய மனம் புண்ணுகிறது. பாத்திரம் நிறையப் பன்னீர் வைத்திருந்தாலும், அதில் ஒரு நாய் விழுமாகில் அது அசுத்த மாகிவிடும்.

கதை 6.

ஒரு பக்கிரியை அரசன் விருந்துண்ண அழைத்திருந்தார். தான் சாதாரணமாகச் சாப்பிடுவதைக் காட்டிலும் குறைவாகவே சாப்பிட்டார். எல்லோரும் தன்னைப் பெரியவர் என்று நினைத்துக் கொள்ளவேண்டி ஜெபம் செய்வதில் மற்றவர்களை விட அதிக காலதாமதம் செய்தார். ஏ! மனிதனே!! நீ தெய்வலோகத்தை அடையமாட்டாய் என நான் அஞ்சுகிறேன். மனித உலகத்தைத்தான் அடைவாய். ஏனெனில் அம்மார்க்கத்தில்தான் நீ செல்லுகிருய். வீட்டிற்குத் திரும்பினவுடன் உணவைக் கொண்டுவரும்படி உத்தர வளித்

தார். இவைகளையறிந்த அவருடைய மகன் "அரசனுடைய விருந்தில் ஏன் நீர் ஒன்றும் சாப்பிடவில்லை" என்றான். "ஒரு எண்ணத்துடனேயே நான் அப்படிச் செய்தேன்" என்றார். "உன் நோக்கங்கள் நிறைவேற வேண்டியதற்கு நீ ஒன்றும் செய்யவில்லையாகையால், இன்னும் ஒரு முறை ஜபம் செய்வாயாக" என்றான் மகன். உன் குணங்களை உள்ளங்கையில் காண்பித்து விட்டு கெடுதல்களை அக்குளில் மறைத்துக் கொள்ளும் ஏ பேதையே!! இச்செல்லாத காசைக்கொண்டு துன்பப்படும் தினங்களில் என்னதான் வாங்கப்போகிறாய்? வாங்கவும் முடியும்?

கதை 7.

சிறு பிராயத்தில் நான் மிகவும் யோக்கியனாயிருந்தது எனக்கு ஞாபகமிருக்கிறது. இரவில் எழுந்திருந்து பூஜைகளையும் விரதங்களையும் செய்யவேண்டிய காலந்தவறாமல் செய்து வருவேன். ஓரிரவில் குர்ஆனைக் கட்டிக்கொண்டு, எல்லோரும் தூங்கிக் கொண்டிருக்கும்பொழுது என் தகப்பன் முன் உட்கார்ந்து கொண்டிருந்தேன். அப்பொழுது நான் அவரிடத்தில் சொன்னதாவது "செய்யவேண்டியவைகளைச் செய்யவேண்டும். எழுந்திருக்காமல் தூங்குவதைக்காணும்பொழுது அவர்கள் இறந்துபோய் விட்டார்களென்றே கூறவேண்டும்" இதற்கு விடையாக அவர் சொன்னதாவது " தகப்பனுக்குத் தகப்பனே, மனித ஜாதியின் குற்றங்குறைகளைத் தேடிக் கொண்டிருப்பதைக் காட்டிலும் நீ தூங்குவதே மேலானது." அகங்காரம் என்னும் திரையினால் கர்வியுடைய கண்கள் மூடப்பட்டிருக்கிறது. ஆதலால் தன்னைத்தவிர வேறு எவரையும் அவன் கவனிக்க

மாட்டான். அவனுடைய கண்களுக்குப் பரமேசுவரனைக் காணும் சக்தியுண்டானால், தன்னைவிடச்சக்தியில் குறைந்தவர்களைக் காணமாட்டான்.

கதை 8.

சமூகத்திலிருக்கும் சகலமானவர்களும் ஒரு தர்மாத்மாவை, வான், அளாவ தூக்கிப்புகழ்ந்து கொண்டிருக்கையில் அவர் சொன்னதாவது "என்னுடைய குறைகுணங்களை நானறிவேன். என்னுடைய வெளிபை மாத்திரம் பார்த்து விட்டு நீங்கள் என்னைப்புகழுகிறீர்கள். என்னுள்ளே என்னவிருக்கிறதென்பதை நீங்கள் அறியமாட்டீர்கள். ஜனங்களின் பார்வையில் என்னுடைய வெளித்தோற்றம் சிலாக்கியமாகவேயிருக்கும். உள்ளேயிருக்கிற அழுக்கைக் காணுங்கால் வெட்கத்துடன் தலையைக் குனியவேண்டியதாயிருக்கிறது. மானிடவர்க்கம் தோகையைக்கண்டு மயிலைப்புகழ்கிறது. ஆனால் தன்னுடைய பாதங்களைக்கண்டு அது வெட்கப்படுகிறது."

கதை 9.

தெய்வ பக்தியில் சிறந்தவரான தர்ம புருஷர் ஒருவரிருந்தார். அவருடைய பெயரும் புகழும் அரபி நாடு முழுவதும் பரவி யிருந்தது. ஒரு சமயம் அவர் திமிஷ்க் பள்ளி வாசலை யடைந்து கிணற்றின்மேல் உட்கார்ந்து கொண்டு சரீர சுத்தஞ்செய்து கொண்டிருக்கும் பொழுது தவறி அதனுள்ளே விழுந்துவிட்டார். பின்பு பெரும் பிரயாசையுடன் எழுந்திருந்தார், அவரை ஒரு நண்பர் கண்டு கேட்டதாவது " தங்கள் பாதங்கள் நனையாமல்

ஆப்பிரிக்காக் கடல்களில் நடந்துபோவதைக் கண்டிருக்கிறேன். ஒரு ஆள் ஆழம் கூட இல்லாத இதில் விழுந்த நீங்கள் இறந்தவரைப்போல காணப்படுகிறீர்களே, இதன் காரணம் என்ன?'' வெகு நேரம் யோசனை செய்து விட்டு அவர் பதிலுரைத்ததாவது ''உலகாதிபதியான முகம்மது முஸ்தபா (ஈசுவரன் அவருக்குச் சாந்தியையும் சுகத்தையும் அளிப்பாராக)இவ்வாறு சொன்னதை நீகேட்டதில்லையா!! தேவதூதர்களுக்கும் தீர்க்கதரிசிகளுக்குங் கூட அளிக்காத வலியதொரு வலிமையைக் கடவுள் எனக்குக் கொடுத்திருக்கிறார். எக்காலமும் அது இருப்பதில்லை. மகாத்மாக்களுடைய பார்வையில் ஒளி,மறைவு, இரண்டும்வெளிப்படும்.பிரகாசப்படுத்தி மறைத்துவிடும். முகத்தைக்காண்பிக்கிறாய். பின்னர் மறைத்து விடுகிறாய், உன்னுடைய குணவிசேஷத்தினால் எங்களுடைய ஆசை பெருகுகிறது. உன்னைப் பிரத்தியட்சமாகக் கண்ட பின்னர் வழியை மறந்து விடுகிறேன். நெருப்பு ஜுவாலையை எழுப்பிப் பின்னர் அதைத்தண்ணீர் கொண்டு அணைத்து விடுகிறாய். இக்காரணத்தினாலேயே சில சமயங்களில் ஜுவாலைமத்தியிலும், வேறு சில சந்தர்ப்பங்களில் அகழின் ஆழத்திலும் இருக்கிறேன்.

கதை 10.

தன் குமாரனை (யாகோப்) இழந்த வரை பார்த்து ஒருவர் வினவியதாவது ''கீர்த்தி வாய்ந்த வம்சத்தைச் சேர்ந்தவரே ! பெரியாரே !! வெகு தூரத்திலிருக்கும் அவனை அறியக்கூடிய நீங்கள் ஏன் சமீப ''கிணற்றிலுள்ளபொழுது அறிய முடியாமலிருக்கிறீர்''? அதற்கு அவர் மறு மொழி தந்ததாவது ''நம்முடைய நிலை மின்னலைப் போலிருக்கிறது. ஒரு

கணத்தில் மின்னுகிறது மறுகணத்தில் மறைகிறது. சில சமயங்களில் தெய்வலோகத்தில் நான்காவது உப்பரிகையிலி ருக்கிறோம், மற்றுஞ் சில சமயங்களில் நம்முடைய உள்ளங் காலைக் காண முடியாமலிருக்கிறோம், (அதாவது பாதாளத்தை யடைகிறோம்) எப்பொழுதும் ஒரே மாதிரியாகவே பக்கிரி யிருந்தால் இரு உலகத்தையும் சீக்கிரம் வெறுத்து விடுவார்.

கதை 11.

நொந்துபோன மனதை யுடைய ஜனக் கூட்டத்திற்கு நான் பல்பக் மசூதியிலிருந்து உபதேசம் செய்துகொண்டிருந் தேன். நான் சொல்லுவதை அவர்கள் ஏற்கவில்லை. என் னுடைய அன்பாகிய நெருப்பு அவர்களுடைய அறி வாகிய பசுங் கட்டையில் பற்றவில்லை. மடையர்களுக்கு உபதேசம் பண்ணுவது கண்ணாடியைக் கொண்டு குருட னுக்கு வழிகாட்டுவதுபோலாம். இருந்தும் நான் ஆசையை விடவில்லை. அவருடைய கழுத்து நரம்பைக் காட்டிலும் நாம் அவருடைய சமீபத்தி லிருக்கிறோம் என்றுள்ள குர்-ஆன் வாக்கியத்தை விவரித்துக் கொண்டிருந்தேன். என்னைவிட என் சிநேகிதன் என் சமீபத்திலிருக்கிறான். நான் அவனிடத்திலிருந்து வெகுதூரம் விலகியிருப்பதே விந்தையிலும் விந்தை என்னும் வரையில் வியாக்கியானஞ் செய்தேன் 'என் கை கமலங்களில் அவரிருக்க நான் அவ ரிடத்திலிருந்து பிரிந்திருக்கிறேன். என்ன செய்வேன். யாரிடம் இரப்பேன். அவருடைய உபதேசமாகிற மொழி களுடைய ஆவேசத்தி லிருக்க, மயக்க மருந்து தன்கையி லிருக்கிறதே' இக் கடைசி வார்த்தைகளைக் கேட்ட யாத்ரிக னுக்கு உற்சாகம் பிறக்கவே அவன் சப்தமிட்டான். அத்து

டன் அறிவிழந்திருந்த கூட்டமும் கலந்துகொண்டது. அப்பொழுது நான் சொன்னதாவது 'ஏ! தெய்வமே! தூரத்தினுல் பிரிக்கப்பட்டவர்கள் உன்னை அறிகிருர்கள். சமீபத்திலிருந்தும் மடையர்களானவர்கள் வெகு தூரத்திலுள்ளவர்களாகவே யிருக்கிருர்கள். கேழ்க்கிறவர்கள் ஒன்று மறியாமலிருக்க, பேசுகிறவர்களிடமிருந்து புதியதாக ஒன்றும் எதிர்ப்பார்க்காதே. முதலில் அறியவேண்டும் என்கிற அவாவை அகண்டமாகச் செய்யுங்கள். அப்பொழுதுதான் பேசுகிறவர் நன்ருகக் கூறமுடியும்.

கதை 12.

ஒரு நாளிரவு தூக்கமின்மையால், அசையக்கூட முடியாமல் மக்காவின் பாலைவனத்திலிருக்கும்பொழுது பூமியில் படுத்துக் கொண்டு ஒட்டகம் ஓட்டுபவர்களையும் தொந்திரவு செய்யாமலிருக்கும்படி சொல்லி விட்டேன். சுமை தாங்க முடியாமல் ஒட்டகம் களைப்படைந்திருக்கும்பொழுது, எவ்வளவு தூரம்தான் எளியோனுடைய கால் நடை செல்லும். கொழுத்தவனுடைய சரீரம் இளைக்குங்காலத்தில் இளைத்தவன் இரக்கவேண்டியதே. அதற்கு அவன் சொன்னதாவது 'முன்னுல் மக்காவும் பின்னுல் திருடர்களும் இருக்கிருர்கள். முன்னேறினுல் பிழைப்போம் : தூங்கினுல் உயிரை இழப்போம். இரவுநேரங்களில் பாலைவனத்தில் மரத்தினடியில் தூங்குவது சிறந்ததே, ஆனுல் உயிரைத் துறந்தோம் என்றே நினைத்துக்கொள்ளவேண்டும்.

கதை 13.

புலி கடிக்க அதனுல் ஏற்பட்ட காயத்துடன் வருந்திக் கொண்டிருந்த சாதுவைச் சமுத்திரக் கரையில் கண்டேன்.

எம்மருந்தாலும் காயம் குணமடையவில்லே. இப்பரிதாப நிலைமையில் வெகு நாளாகக் கடவுளைத் தியானித்துக் கொண்டிருந்ததாவது 'பாபத்தினலல்லாமல் துரதிர்ஷ்ட வசத்தினல் துன்பப்படுகிறதற்காகக் கடவுளை நான் போற்றுகிறேன். அம்மித்திரன்—ஈசுவரன் என்னைக் கொன்று விடுவதற்கு உத்தரவளித்து விட்டால், நீங்கள் என்னைக் கோழையென்று சொல்லாமலிருக்கவேண்டி, என் பிராணனுக்குப் பயப்படாமல் அவரைக் கேழ்ப்பேன்! ஏ! தீனபந்து தாங்கள் சினங்கொள்ளும்படி இவ்வடிமை செய்த பிழை யாது?'

கதை 14.

தரித்திரத்தினல் பக்கிரியொருவர் தன் சிநேகிதன் வீட்டிலிருந்து கம்பளியொன்றைத் திருடிவிட்டார். நீதிபதியும் கையைத் துண்டித்து விடும்படி உத்தரவளித்து விட்டார். அப்பொழுது கம்பிளியின் சொந்தக்காரர் குறிக்கிட்டு மன்னித்து விடும்படி வேண்டிக்கொண்டார். நீதிபதி நியாயம் தவரக்கூடாது என்று சொல்லி அதை ஏற்க மறுத்து விட்டார். அப்பொழுது அவன் சொன்னதாவது "நீங்கள் சரியாகச்சொன்னீர்கள். ஆனல் மானிடதர்மத்தை முன்னிட்டு திருடினவர்களுக்குத் தண்டனை யளிப்பது சரியல்ல. ஏனெனில் பக்கிரிக்கு எஜமானன் எவனுங் கிடையாது. பக்கிரிக்குச் சொந்தமானதுங் கிடையாது, பக்கிரிகளிடம் உள்ள கொஞ்சமும் வருந்துகிறவர்களுடைய உபயோகத்திற்காகவே உள்ளது." என்று கூற, நீதிபதி அவனை மன்னித்து விட்டார். அவன் மறுமொழி சொன்னதாவது" உன் சிநேகிதர்களுடைய வீட்டைச் சுத்தஞ் செய்யென்றும் விரோதிகளுடைய வீட்டை யிடியென்றும் சொல்லுவதை நீங்கள் கேட்ட

தில்லையா? கஷ்டகாலம் வரும்பொழுது மனம் உடைந்து போகக் கூடாது. விரோதிகளின்தோலை உரிக்கவேண்டும்; சிநேகிதர்களின் சட்டையைக் கழட்டவேண்டும்.

கதை 15.

அரசன் ஒருபக்கிரியைப்பார்த்து "நீ என்னைப்பற்றி நினைப்பதுண்டா?" என்றதற்கு அவன் "கடவுளை மறக்கும்பொழுதெல்லாம்" என்றான். கடவுளால் துறத்தப்பட்டவன் பலவிடந்தோறும் திரிகிறான். அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டவன் எவனுடைய இடத்தையும் எதிர்பார்க்கவேண்டிய தேவையில்லை.

கதை 16.

அரசன் சுவர்க்க சுகத்திலிருப்பதாகவும் மகாத்மா நரகதுன்பத்திலிருப்பதாகவும் ஒரு சாது கனவு கண்டார். இது மாறியிருக்க வேண்டுமே. ஒருவருடைய உயர்வுக்கும் மற்றொருவருடையதாழ்வுக்கும் யாதுகாரணமாயிருக்கும் என்று கேழ்க்க அவர்கள்சொன்னதாவது-"மகாத்மாக்களை நேசித்ததின் பயனாக அரசனுக்குச் சுவர்க்கமும்; மகாத்மாக்கள் அரசர்களுடன் கூடிக்கலந்திருந்ததற்காக நரகமும் முறையேகிடைத்தன. முரட்டுத்துணி, ஜபமாலை, முதலானவைகளால்யாதுபிரயோஜனம்? தீயகாரியங்களிலிருந்து தனிமையாயிருக்க இலைகளுடைய தொப்பிதேவையில்லை. தபஸ்விகளுடையகுணத்தைக்கொண்டு தார்த்தார்களுடைய மகுடத்தைத் தரித்தாலும் குற்றமில்லை.

கதை 17.

திறந்த தலையுடன் கால்களிலுமொன்றும் அணியாமல், கால் நடையாகவே ஒரு யாத்ரிகன் நடந்து வந்து வர்த்தகர்

களுடைய கூட்டத்தைச்சேர்ந்தான். "நான் ஒட்டகத்தின் பேரிலில்லை; அல்லது கழுதையைப்போல் சுமையின் கீழு மில்லை. நான் அடிமைக்கு அதிகாரியுமல்ல அல்லது அரச னுடைய அடிமையுமல்ல; போனதைப் பற்றி எனக்கு துக்கமு மில்லை; வருவதைப்பற்றி சந்தோஷமுமில்லை; சுயேச்சை யாக மூச்சிழுத்துக்கொண்டுச் சுகமாக வாழுகின்றேன்" என்று சொல்லிக்கொண்டே களிப்புடன் சென்றான். ஒட்ட கையின் மேலிருந்த ஒருவன் "ஏ! பக்கிரி!! நீ எங்கே போகி ருய். திரும்பிவிடு அல்லது வருந்துவாய், இறந்தும் விடுவாய் என்றான். இதைக் கவனியாமல் நடந்து கொண்டே யிருந் தான். சேரவேண்டிய ஸ்தானத்தை யடைந்தவுடன் பணக் காரருடைய காரியமும் முடிந்தது. அவரும் இறந்து விட் டார். பக்கிரி அப்பொழுது "நான் கஷ்டங்களினல் அவதிப் பட்டும் இதோ உயிருடனிருக்கிறேன். நீங்கள் சவாரி செய்தும் இறந்து விட்டீர்கள்." இரவு முழுவதும் நோயாளியின் பக்கத்திலொருவன் அழுதுகொண்டே யிருந்தான். பொழுது புலர்ந்ததும் அவன் இறந்து விட் டான். நோயாளி உயிர்ப்பிழைத்தான். என் நண்பனே! பந்தயக் குதிரைகள் பல இறந்து விட்டன; நொண்டிக் கழுதைகளே பிரயாணம் முடியும் வரையில் பிழைத் திருக்கின்றன. காய பலத்துடன் கூடினவர்களே கால னுக்கு இரையாகிறதைக் காண்கிறோம். காயம் பட்டவர் களோ பிழைக்கிறார்கள்.

கதை 18.

அரசன் பக்கிரியைக் கூப்பிட்டார். தன்னைப்பற்றி அதிக மாக அரசன் நினைக்கவேண்டும் என்று அவர் எண்ணி, சரீர

பலத்தைக் குறைத்துக்கொள்ள விரும்பி, அறியாமையினல் பாஷாணத்தைக் குடிக்க இறந்து விட்டார் எனச் சொல்லப்படுகிறது. முந்திரிக் கொட்டையைப்போல் கனமாயிருந்தவர் வெங்காயத்தைப் போல் சொக்காய் மேல் சொக்காய் அணிந்திருந்தார். உலகத்தைக் கவனிக்கிற பக்கிரிகள், மக்கா பின்புறமிருந்து ஜபம் செய்கிருர்கள். தெய்வபக்தன் என்று அழைத்துக் கொள்ளுகிறவர்களெல்லாம் ஈசுவர சேவையைத் தவிர வேறு எதையும் மதிக்கக் கூடாது.

கதை 19.

வர்த்தகக் கூட்டத்தைக் கொள்ளைக் காரர்கள் கொள்ளையடித்து யாவற்றையும் அபகரித்துக்கொண்டுபோய் விட்டார்கள். வியாபாரிகள் தெய்வத்தின் பேரைச்சொல்லி மன்ருடியும் அவர்கள் இரங்கவில்லை. தங்களுக்கு வேண்டியது கிடைத்த பின்னர் திருடர்கள், ஜனங்களுடைய துன்பக் கண்ணீரைக்கண்டு ஏன் கலங்கவேண்டும்? லுக்மான் என்னும் அறிஞன் அதிலிருந்த படியினல் வர்த்தகக் கூட்டத்திலொருவர் "இவ்வளவு பொருளையும் விடுவது மிகவும் கஷ்டமானது. அபகரித்ததில் கொஞ்சத்தையாவது திருப்பிக் கொடுத்து விடும்படி நீங்கள் ஞானேபதேசஞ் செய்யுங்கள்" என்ருர். இதற்கு லுக்மான் சொன்னதாவது "அவர்களுக்கு உபதேசிப்பது வியர்த்தமே. இரும்பைத் துரு தின்றுவிட்ட பின்னர், துடைப்பதினல் அது சுத்தமாகாது. இழிவானவர்களுக்கு நல்லுபதேசத்தினல் யாது லாபமேற்படும்? கற்களை இரும்பாணி துளைக்காது. ஏழைகளுடைய துணையைக்கொண்டே உன்னைக் காப்பாற்றிக் கொள்ள முடியுமாதலால் அவர்களுக்கு உதவு. ஏனெனில்

துன்புறுத்துகிறவன் உன்னுடையதை அபகரிக்காமலிருக்க வேண்டி, இரப்போனுக்குப் பிச்சையிடு."

கதை 20.

"தங்களுடைய நல்லொழுக்கத்திற்கு யார் காரண" மென்று ஹகீம் லுக்மானைச் சிலர் வினவினபொழுது அவர், மறுமொழி தந்ததாவது.- "வணக்க மில்லாதவர்களிடம் காணப்படும் குற்றங் குறைகளைத்தெரிந்து அவைகளை அகற்றி விட்டேன். விளையாட்டு வார்த்தைகளில் கூட அறிவாளிகள் படிப்பினையைக் காண்பார்கள். அறிவீனர்களுக்கு ஆயிரம் அத்தியாயம் தத்துவம் பேசின போதிலும் பிரயோஜன மேற்படாது."

கதை 21.

ஓரே இரவில் பத்துபேர் ஆகாரத்தைச் சாப்பிட்டுவிட்டு, விடிவதற்குள் பயபக்தியுடன் குர் ஆன் முழுவதையும் படித்து முடிக்கும் சாது ஒருவரிருந்தார். இதை யறிந்த அறிஞர் ஒருவர் சொன்னதாவது "ரொட்டித் துண்டம் பாதியைத் தின்றுவிட்டுத் தூங்கியிருந்தால் சிறப்பாயிருக்கும். தெய்வத் தன்மையை உணர, வயிறை நிரப்பாமல் வைத்திரு. விலாப்புடைக்கத் தின்பதினல் புத்தி மழுங்கிப்போகும்."

கதை 22.

கொடியவன் ஒருவனிருந்தான். கருணைக்கடவுளின் கிருபையை இழந்த பின்னர், பெரியோர்களை யடுத்து அதன் பயனாகத் தன்தீய வழக்க ஒழுக்கங்களை விடுத்து யோக்கியனானன். ஐம்புலன்களையடக்கியாளவும் பழகிக்கொண்டான்.

இருந்த பொழுதிலும் உலகம் அவனைத் தூற்றிக் கொண்டே யிருந்தது. ஏனெனில் அவனைப்பற்றின பழைய எண்ணங்கள் ஜனங்களுடைய மனதிலிருந்து விலகவில்லை. எனவே அவனு டைய தர்ம காரியத்தையும் ஈசுவர பக்தியையும் பற்றி நினைப் போருங் கூட இல்லாமலிருந்தார்கள்.

பச்சாத்தாபப்படுவதினுல் கடவுளுடைய அருளைப் பெற லாம். மானிடர்களுடைய தீய மொழிகளைக் கடக்க முடியாது. ஜனங்களுடைய நிந்தையைப் பொறுக்க முடியாமல் தன் தலை வரிடத்தில் முறையிட்ட பொழுது ஷேக் சொன்னதாவது "கடவுளருளைப் பெற்றதற்காக நீ எவ்வளவு நன்றியுள்ளவ னுக யிருக்கவேண்டாம்? உலகம் உனக்குத் தீமையை விளைத்த பொழுதிலும், உன்னுடைய உயிரை விரும்பிய பொழுதிலும், நீ நல்லவனுகவே யிரு. என்னிடம் குற்றங் குறைகளநேகம், இருந்தும், என்னை முற்றுங் கடந்தவனுக ஜனங்கள் எண்ணு கிறுர்கள்."

உண்மை யென்னவெனில் :-" அயலகத்தார்களுடைய கண் பார்வைகளிலிருந்து நான்என்னை மறைத்துக்கொள்ளுகிறேன். இருந்தும் கடவுள் என்னுடைய அந்தரங்கத்தை யறிகிறுர். ஜனங்களிடமிருந்து நான் என்னை ஒளித்துக்கொள்ள முயன்ற பொழுதிலும் சர்வ வியாபியாயும் சர்வஞ்ஞுமாயுமுள்ள ஈசு வரன் யாவற்றையும் அறிகிறுர். எனவே இவைகளினுல் யாது பயன்?"

கதை 23.

தூர்த்தன் என்னும் குற்றத்திற்கு என்னை ஆளாக்கின தைப் பற்றி நான் ஒரு பெரியோரிடம் முறையிட்டுக் கொண்ட பொழுது அவர் சொன்னதாவது "உன் நல்லநடத்

தையினுல் அவனை அவமானப்படுத்து. தூஷிப்பதற்கு இடங்கொடுக்காமல் நடந்து கொள்ளுவாயாக. சுருதி சரியா யிருக்கும்பொழுது பாடகன் கருவியைச் செப்பனிடத் தேவையில்லை.''

கதை 24.

ஸூபி வம்சத்தவர்களின் நிலையைப்பற்றி திமிஷ்க் நகரத்து ஷேக்கைக் கேட்டபொழுது சொன்னதாவது:-''முன்னொரு சமயத்தில் அவர்கள்உலகத்தில் மிகவும் துன்பப்பட்டவர்கள். ஆனுல்மனந்தளராமலிருந்தர்கள், மேல் தோற்றத்திற்குத் திருப்தி யடைந்தவர்களைப்போல் காணப்பட்ட பொழுதிலும், உள்ளத்தில் மனக்குறை யுள்ளவர்களே.''

இடம்விட்டு இடம் மாறிக்கொண்டே யிருக்கையில் ஏகாந்தத்தில் மனச்சாந்தி ஏற்படாது. தனதான்யம் ஆடை உடை பூமி யெல்லாமிருந்தும், கடவுளிடம் மனம் அடைக்கலம் புகுந்திருந்தால், அதுவே ஏகாந்தம். அத்தகைய மனதையுடையவனே ஏகாந்த வாசி யாகிறுன்.

கதை 25.

இராக்காலம் முழுவதும், யாத்திரிகர்களுடன் திரிந்த பின்னர், காலையில் பாலைவனத்தின் ஓரத்தில் படுத்துறங்கிக் கொண்டிருந்தது என் ஞாபகத்திற்கு வருகிறது. கூட வந்த ஒருவன் கொஞ்சநேரங்கூட உட்காராமல் உரக்கக் கூவிக் கொண்டே பாலைவனத்தின் வழியே சென்றுன். பொழுது நன்ருய்ப் புலர்ந்ததும் அவனை என்னவென்று வினவினேன். அவன் சொன்னதாவது''மரத்தில் குயில்களும் ஓடையில் குருவிகளும், நீரில் தவளைகளும், வனத்தில் மிருகங்களும்,

உருக்கத்துடன் முறையிட்டுக் கொண்டிருக்க, கடமையை மறந்து, மனிதனுப்ப்பிறந்த நான் கடவுளைப் போற்ருமலிருப்பது ஏற்றதல்ல வென்று தோன்றிற்று'' என்ருன். கடந்த இரவில் ஒரு சிறிய பட்சியின் குறையீட்டைக் கேட்டகாலத்தில் என் உள்ளம் உருகி மனம் நொந்தது.

இதைக்கேட்ட என் சினேகிதன் நம்பவில்லை. அப்பொழுது நான் சொன்னேன் ''ஈசுவரனிருப்பைப் பட்சிகள் வெளிப்படுத்திக்கொண்டிருக்க, நான் மௌனஞ்சாதிப்பது மனிதப்பிறவிக்கு அழகல்ல.''

கதை 26

ஒரு சமயத்தில் என் தோழர்களுடன் ஹிஜாஜில் பிரயாணஞ்செய்தேன். அன்புக்கடலில் முழுகியிருந்த அவர்கள் சிற்சில சமயங்களில் மெய்மறந்து போகும்படியான பக்திதரும்பாக்களைப்பாடுவார்கள். இக்கூட்டத்தில்பக்கிரிகளுடைய துன்பங்களையறியாத பக்தனொருவன் இருந்தான். எனவே அவர்களைப் பற்றின நல்லெண்ணம் அவனுக்குக் கிடையாது. பேணி ஹிலால் இருப்பிடத்திற்கு வந்தபொழுது தோப்பிலிருந்து கறுத்தமேனியையுடைய அரபிச் சிறுவனொருவன் வந்து வானத்தில் பறக்கும் பறவைகளும் ஆனந்தபரவசமடையும்வண்ணம் சிறுபாக்களைப் பாடினன். இதைக் கேட்ட மேற்சொன்ன பக்தனின் ஒட்டகமும் ஆடவாரம்பித்து. சவாரிசெய்வோனைக் கவனியாமல் கானகத்தின் வழியே ஓடவாரம்பித்தது. அப்பொழுது நான் சொன்னேன்'' பக்தனே! மிருகங்களைக்கூட வசப்படுத்தியது உன்னைக் கவரமுடியவில்லை. அன்பின் ஆழத்தை யறியமுடியாத என்ன மனிதன் நீ? அரபிக்கவிகளைக் கேட்ட ஒட்டகமும் மோகத்

தை யடைந்தது. நீ அடையாவிட்டால் வெறும் மிருகமேயா வாய்: ஒட்டகையும் கூட மயங்கும்படியான பாக்களைக்கேட்டு அசையாமல் கூட விருக்கிறமனிதன் வெறுங் கழுதையே ஆவான். மைதானத்தில் வீசுகிற காற்றானது மரங்களின்மெல் லிய இதழ்களை வணங்கச் செய்கிறது. ஆனால் கருங்கல்லை ஒன் றும் அதனால் செய்ய முடியவில்லை. காண்கிற ஒவ்வொரு வஸ் துவும் கடவுளைப் போற்றுகிறது. அறிகிற மனதை யுடையவர் களுக்கு இது நன்கு விளங்கும். ரோஜாமலரும், குயிலும் மாத்திரம் கடவுளைப் பகழவில்லை. முட்புதர் ஒவ்வொன்றும் அதை வலியுறுத்த ஒரு ஏதுவாயிருக்கிறது.

கதை 27.

சந்ததியற்ற அரசனொருவன் தான் இறக்குந் தரு வாயில் மரணசாஸனத்தில், தான் இறந்த மறுநாட்காலையில் நகரவாசலைத்தாண்டி வருகிற முதல் மனிதனுக்குத் தன் இராஜ்யத்தையும் அரசுரிமையையும் அளிக்கும்படி எழுதி வைத்து விட்டு உயிர் துறந்தான். தெய்வ யோகத்தினால் முதன் முதலாக நகரில் நுழைந்தவன் ஒரு பிச்சைக்கார னாக விருந்தான். ரொட்டித் துண்டுகளைச் சேகரித்துக் கொண்டும் ஒட்டின்மேல் ஒட்டுப்போட்டுத் தைத்த உடையை அணிந்து கொண்டிருந்தவனாயிருந்தான். மந்திரிகளும் பிர தானிகளும், அரசன் விருப்பத்திற் கேற்ப இராஜ்யத்தையும் பொக்கிஷத்தையும் அவனுக்கு அளித்தார்கள். பக்கிரி நன்றாய் அரசுரிமை செலுத்தி வருங்காலத்தில், பிரதானி களில் சிலர் விலகவாரம்பித்தார்கள். அயல் நாட்டர சர்களும் ஒன்றுகூடி தாக்கவாரம்பித்தார்கள். இராஜ்யத்தில் குழப்பம் ஏற்பட்டது. சில நாடுகளும் எதிரிவசமாயின.

இவைகளைக் கண்டு பக்கிரி மிகவும் வருத்தப்பட்டுக் கொண்டிருக்கையில், அவருடைய பழைய நண்பர்களிலொருவர் யாத்திரைவிருந்து திரும்பிவந்து அவருடைய மேல் பதவியைக்கண்டு சொன்னதாவது:—"பாக்கிய வசத்தினுல் நீ யடைந்திருக்கும் நன்மைக்கு முழு முதற்கடவுளை மனமாறப் போற்றுகிறேன். முள்ளிலிருந்து ரோஜாபுஷ்பம் பூத்தது போல உன் காலிலிருந்த முள்ளை யெடுத்துவிட்டார்கள். உயர் பதவியையும் அடைந்துவிட்டாய். உண்மையாகவே துன்பத்தை இன்பம் தொடரும், சில சந்தர்ப்பங்களில் காய்ந்துவிடும்; சிற் சில சமயங்களில் மரம் நிர்வாணமாயிருக்கும்; வேறு சில சமயங்களில் உடை உடுத்திக்கொண்டிருக்கும்." அப்பொழுது பக்கிரி சொன்னதாவது:—"சகோதரனே! என்னை வாழ்த்த இதுவல்ல சமயம். எனக்காக அநுதாபப்படு. முன் தடவை நீ என்னைப்பார்த்தகாலத்தில்சாப்பாட்டுக்கவலை யொன்றே தான் எனக்கு இருந்தது. இப்பொழுதோ உலகக் கவலை யெல்லாம் என்னுடைய தாயிருக்கிறது. காலச்சக்கரம் ஒத்திருந்தால் சம்சாரபோக விலாசங்களை அநுபவிக்கிறேன். விரோதமாயிருந்தால் துக்கங்களில் உழலுகிறேன். சம்சார சமாசாரங்களைவிட பெரியதொரு ஆபத்து வேறொன்றும் கிடையாது, ஏனெனில் இன்பகாலத்திலும் துன்பகாலத்திலும் மனதைப்புண் பண்ணக்கூடியது அது ஒன்றே. பொருளாசை யிருந்தால் திருப்தி இன்பத்தைத் தேடு. உன் மடியில் தனவான் பொருளை வீசி எறிந்தபொழுதிலும் அவனுக் கீழ்ப்படிந்தவனாக நினைத்துக்கொள்ளாதே. பொருளாளிகளுடைய நன்கொடைகளை விட பக்தர்களுடைய பொறுமையே சிறந்தது.

கதை 28.

ஒருவருடைய நண்பர் திவான் உத்தியோகத்திலிருந்தார். அவரை வெகுநாளாய் இவர் காணவேயில்லை. "நீங்கள் அவரைக்கண்டு வெகு நாளாச்சுதே" என்றபொழுது "காணப் பிரியமுமில்லை" என்றார். திவானின் நண்பர்களிலொருவர் இதைக் கேட்டுக்கொண்டிருந்து "அவர் செய்த குற்றமென்ன?" என்று இவரைவினவினகாலத்துச்சொன்னதாவது "இதில் குற்றம் ஒன்றுங்கிடையாது. உத்தியோகத்திலிருந்து விலகி விட்டபின்னரே திவானைக்காணுவதற்கு ஏற்றகாலம். அதிகாரமும் பெருமையும் வருங்காலத்தில் சிநேகிதர்களை மறந்து விடுவார்கள். துக்கங்களிலேயும் துன்பங்களிலேயும் மனக்கவலையைச் சொல்லுவார்கள்."

கதை 29.

அபூ ஹுரைரா பிரதிதினம் முகம்மது முஸ்தபா சாயபு அவர்களைத் தரிசனம் செய்து கொண்டிருந்தார். "நீ ஒவ்வொரு தினமும் வருவதினால் அருள் பெருகும்" என்றார் அப்பெரியார். பரோபகாரத்திற் சிறந்தோங்கும் சூரியனை அன்புடன் அழைக்கிறவர்கள் ஒருவரும் கிடையாதென்று ஒரு பெரியாரிடம் சொன்ன பொழுது அவர் பதிலளித்தாவது:— எக்காலத்திலும் அவர் காணப்படுகிறார்: ஆனால் கொஞ்சம் மறைந்திருக்கும் குளிர் காலத்திலேயே அவரை நினைக்கிறார்கள்" பெரியோர்களுடைய தரிசனத்தினால் குற்றமொன்றுமில்லை. ஆனால் சீ, போதும், என்கிறவரையில் அதைக் கடைப்பிடிக்க வேண்டாம். உன்னை நீயே திருத்திக்கொண்டால் பிறர் உன்னைத் திருத்தவேண்டிய அவசியமேற்படாது.

கதை 30.

திமிஷ்க் நகரத்துச் சிநேகிதர்களுடன் அருவருப்பு உண்டானபடியினால் அவர்களை விட்டுப்பிரிந்த காலத்தில் வனத்தையடைந்து மிருகங்களுடன் கூடிகாலங்கழித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது பிரஞ்சுக்காரர்கள் என்னைக் கைதியாக்கிச் சுரங்கத்தில் யூதர்களுடன் மண்வெட்டும் வேலையைக் கொடுத்தார்கள். அப்பொழுது என்னுடைய பழைய நண்பர்களிலொருவர் அப்பக்கமாகப் போய்க்கொண்டிருந்த காலத்தில் என் நிலைமையைக் கண்டு பரிதாபபட்டு வினவினபொழுது "கடவுளின் பேரில் முழுபாரத்தையும் போட்டு மொத்தமாக நம்பலாம் என்றெண்ணி, மனிதசேர்க்கையையொழித்து மலையை யடைந்தேன். மிருகங்களுடன் காலங்கழிக்க நேர்ந்த என்னிலைமையை ஊகித்துக்கொள். நந்தவனத்தில் முகப்பழக்கமில்லாதவர்களுடன் இருப்பதைக் காட்டிலும், மித்திரர்களாகிய கால்விலங்குகளுடன் இருப்பதே சிறந்தது" என்றேன். அவருக்கு இரங்கி, 10 பணங்கொடுத்து அடிமை வாழ்க்கையை நீக்கி அச்சிநேகிதர் தன் ஊருக்கு அழைத்துச்சென்றார். அங்கே 100 பணம் பரிசாகக் கொடுத்து தன் பெண்ணையும் மணஞ்செய்து கொடுத்தார். சின்னாள் சென்றபின்னர் சண்டைக்காரியாயும் வம்புக்காரியாயுமிருந்த அவளுக்கு என்னைப்பிடிக்காமல் இவ்வாழ்க்கையைக் கெடுத்தாள் என மொழிந்தான். நல்லோருடைய வீட்டில் ஒரு தீயோன் இருப்பதே இவ்வுலகத்தில் நரகம். தீய பெண்களுடன் சகவாசம் செய்யுமுன் எச்சரிக்கையுடனிரு. "பிரஞ்சுக்காரர்களிடமிருந்து என்தகப்பனார் பத்து பணங் கொடுத்து உன்னை மீட்டினாரா இல்லையா வென்றாள்"

"பத்து பணத்துடன் என்னை மீட்டி, 100 பணத்துடன் உன்னிடம் என்னைச் சேர்த்து வைத்திருக்கிறுமென்றேன்."

ஓநாயின் வாயிலிருந்து ஆட்டைக்காப்பாற்றின ஒரு பெரியார் அடுத்த இரவில் அதன் கழுத்தில் கத்தியை வைத்த பொழுது, ஆடு சொல்லியதாவது:-"ஓநாயினிடமிருந்து என் உயிரைக் காப்பாற்றினுய். ஆனுல் காலவளவில் எனக்கு நீயே ஓநாயாகி விட்டாய்"

கதை 31.

விலையற்ற காலத்தை எங்ஙனம் செலவழிக்கிறீர்களெனக் குடும்ப சகிதமாயிருந்த பக்கிரியைப்பார்த்து அரசன் கேட்ட பொழுது அவர் விடையளித்ததாவது "இரவை ஈசுவரோபாசனையிலும், காலைப்பொழுதை ஈசுவரனிடத்தில் இரப்பதிலும், பகற் பொழுதை செலவுகளைச் சரியாக செய்வதிலும், முறையெ கழிக்கிறேன்." தினந்தோரும் அவருக்கு வேண்டியதை அளித்து குடும்ப கஷ்டங்களிலிருந்து நீக்கி விடுமாறு, அரசன் உத்தரவளித்து விட்டார். குடும்பக் கஷ்டங்களிலகப்பட்டுக்கொண்டு உழலுபவனே! உனக்கு வேறு எவ்விதத்தில் விடுதலை ஏற்படும்? அன்ன ஆகாரதிகளுக்கும் பெண் பிள்ளைகளுக்கும் வருந்திக் கொண்டிருப்பதினுல் வேறு ஒன்றும் செய்ய முடியாது. இராக்காலம் முழுவதையும் ஈசுவரோபாசனையில் செலவிடவேண்டுமென பகற்காலத்தில் உறுதி செய்து கொள்ளுவேன். ஆனுல் பொழுது சாய்ந்தவுடன் ஜபதபங்களை யாரம்பிக்குங்கால் என் மக்களுக்கு அடுத்த நாள் ஆகாரத்தை எவ்விதம் சம்பாதிக்கப் போகிறேன், என்கிற ஞாபகம் வந்து விடும்.

கதை 32.

கந்தமூலங்களைச் சாப்பிட்டுக்கொண்டு பல வருடங்களாக வனத்தில் ஒருபக்கிரி யிருந்தார். அவரைத் தரிசனம் செய்ய எண்ணி அவ்வூர் அரசன் அங்கு சென்று, சொன்னதாவது:-"தங்களுடைய சேர்க்கையினால் ஜனங்கள் லாபமடையவும் தாங்களும் இடையூறுகளன்னியில் ஜபத்தைச் செய்யவும் தங்களுக்காக நகரத்திலேயே ஒருவிடத்தைத் தருவேன்''. பக்கிரி இதற்கிணங்காமலிருந்தும் மந்திரிகளுடைய யோசனையின்பேரில் ஒத்துக்கொண்டார். மனோரம்மியமான ஒரு இடம் தயார்செய்தார்கள். பெண்களின் கன்னங்களையொத்த சிவந்த ரோஜாக்களாலும் அதையொத்த புஷ்பங்களாலும் அவ்விடம் பிரகாசித்தது. நெருப்புக்குமிழிகளைப்போல் மரங்களில் பல புஷ்பங்கள் பிரகாசித்துக்கொண்டிருந்தன. பக்கிரியும் அவ்விடத்திலேயே இருக்க வாரம்பித்தார். தவங்களில் சிறந்த பெரியோர்களின் மனதையுங் கவரக்கூடிய கன்னிகையை அரசன் அங்கு அனுப்பினன். இவ்விளங்கன்னிகையுடன்கூட ஒரு சிறுவனும் இருந்தான். இம்மோகத்தில் அகப்பட்டுக்கொண்டு பக்கிரியும் வாழ வாரம்பித்தார். "அறிவாகிய பட்சியைப் பிடிக்கவும் ஞானமாகிய கால்களைக் கட்டவுமே, பெண்களுடைய நடையுடையுமாகும், என்று பெரியோர்கள் கூறியிருக்கிறார்கள். ஒழுக்கமுள்ளநியாயவாதிகளும், குருமார்களும், சிஷ்யர்களும், வாக்குவன்மையுள்ளவர்களும் கேவலம் உலக விஷயங்களில் ஈடுபடுங்காலத்துத் தேனில் அகப்பட்டுக்கொண்ட ஈயைப்போல் ஆகிவிடுவார்கள். மறுதடவை அரசன் அவரைத் திரும்பிப் பார்க்கும் பொழுது, பக்கிரியுடைய பார்வை மாறியிருந்தது.கொழுத்திருந்தார். பட்டுமெத்தையில் சாய்ந்

துகொண்டிருந்தார். கந்தர்வர்களைப்போன்ற சிறுவர்கள் பக்கத்தி லிருந்துகொண்டு சாமரத்தை வீசிக்கொண்டிருந்தார்கள். அரசன் அவரிடத்தில் பல விஷயங்களைப் பற்றி சம்பாஷித்து விட்டு "உலகிலுள்ளவைகளில், வித்துவானையும் ஏகாந்தவாசியான துறவியையுமே நான் விரும்புகிறேன்" என்று சொல்லி முடித்தான். அப்பொழுது பக்கத்திலிருந்த மந்திரி சொன்னதாவது "பிரபுவே. தாங்கள் செய்யவேண்டிய நியாயம் என்னவென்றால் இருவர்களுக்கும் ஏற்றத் தாழ்வில்லாமல் நன்மைசெய்ய வேண்டியதே. பிறரும் படிக்க வேண்டி வித்வான்களுக்குப் பரிசளியுங்கள். துறவிகள் மாறுமலிருக்கவேண்டி ஒன்றுமே அளிக்காதே யுங்கள்.பக்கிரிகளுக்குப் பணமும் வேண்டாம். பைசாவும்வேண்டாம். அப்படி எவர்வதுகேட்டால் வேறு பக்கிரிகளைத் தேடுங்கள். சிறந்த குணங்களைக் கொண்டவனும் ஈசுவரனிடத்தில் ஒன்றுபட்ட மனதையுங்கொண்டவனுயுமுள்ளஒருவன்,ஈசுவரன் பெயரைச் சொல்லி வாங்கினரொட்டிகளைச் சாப்பிடுவதில்லை. அதை இரப்பதுமில்லை. சுந்தரமாதின் காதும், கைவிரலும், தோடும் மோதிரமும் இல்லாமலே அழகாயிருக்கும். ஈசுவரன் பேரில் பிச்சையெடுக்காம லிருந்தாலும், தர்மாத்மாவும் ஞானியுமே, உண்மையான பக்கிரிகள்.இந்துவதனத்தையும் அழகிய மேனியையும் படைத்த மாது, ஆபரணமும், வர்ணமும் இல்லாமலே, பிரகாசிக்கிறுள். என்னிடம் எல்லாமிருந்தும் பிறருடையதை அபகரிக்கும்வரையில் என்னைப் புண்ணியபுருஷன் என்றழைக்காமலிருப்பதே சரியானது.

கதை 33.

மேற்சொன்னவைகளின் உண்மை இதிலிருந்து விளங்கும். பெரிய வழக்குகளி லகப்பட்டுக்கொண்டிருந்த அரசன், தான்

ஜயிக்கும்பட்சத்தில் கொஞ்சம் பணத்தைப் பக்கிரிகளுக்கும் புண்ணிய புருஷர்களுக்கும் தானமாகவளிப்போமென்று தீர்மானஞ் செய்துகொண்டான். வழக்குகளில் வெற்றிபெற்றவுடன் தன் தீர்மானத்தை நிறைவேற்றவேண்டி அரசன் பணமுடியொன்றை நம்பிக்கையுள்ள சேவகன் கையில் கொடுத்து பக்கிரிகளுக்கு அதைத் தானஞ்செய்துவிட்டு வரும்படி அனுப்பினன். சேவகனே மிகவும் புத்திசாலியானவன். பகல்முழுதும் சுற்றிவிட்டு பொழுது சாய்ந்ததும் பணமுடியைக் கொடுத்தவிதமே அரசன் முன்னிலையில் கொண்டுவந்து அதை முத்தமிட்டுக் கீழேவைத்தான். காரணங் கேட்டதிற்குப் பக்கிரிகளே கிடைக்கவில்லையென்றான். "இந்நகரத்தில் 400பக்கிரிகளிருப்பதை நானே அறிவேன்" என்றான் அரசன். அதற்குச் சேவகன் "அரசனே! பக்கிரிகள்பணத்தை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். பணத்தை ஏற்றுக்கொள்ளுகிறவர்கள் பக்கிரிகளாகமாட்டார்கள்" என்றான். அரசன் புன்சிரிப்புடன் சொன்னதாவது: "தெய்வத்தை வணங்கும் இப்பெரியார்களுடைய கருணையைப்பெற விரும்புகிறேன். என் எண்ணம் முடிவுபெறாமலிருக்க இச்சிறுவன் தடைபண்ணுகிறான். ஆனால் அவன் பக்கம் தான் நியாயமுமிருக்கிறது.

கதை 34.

ஈசுவரன் பெயரைச்சொல்லி பரிசுத்தம் செய்யப்பட்ட ரொட்டித்துண்டைப் பற்றினவரையில் உன் அபிப்பிராயம் என்னவென்று புத்திமான் ஒருவனைக்கேட்டார்கள்.—"சித்தவமைதியுடன் ஈசுவரபஜனையைச் செய்யவேண்டி அதைப் பெற்றுக்கொண்டால் நியாயமானதே ஆனால் வேறெண்ணம்

இல்லாமல் ரொட்டியை மாத்திரம் பெறவேண்டுமென்றிருந்தால் அது நியாயமற்றதே. மகாத்மாக்கள் ஏகாந்த வாசத்தில் ஈசுவரனை அறியவேண்டி இருக்கிறார்கள். ரொட்டியைப் பெறவேண்டி உபாசனை அறையை அடைகிறதில்லை."

கதை 35.

தர்மசிந்தனை யுள்ளவருடைய இல்லத்திற்கு ஒருபக்கிரிவந்தார். அங்கு கூடியிருந்தவர்கள் எல்லோரும் உல்லாசமாகவும் வேடிக்கையாகவும் பேசிக்கொண்டிருந்தார்கள். பக்கிரி நெடுந்தூரம் கானகத்தின் வழியே பிரயாணம் செய்திருந்தபடியினால் அவர்களுடைய பேச்சில் கலந்து கொள்ள சக்தியற்றிருந்தார். அவர் ஒன்றும் சாப்பிடவில்லை. மயக்கமும் அதிகமாயிருந்தது. அவரை ஏதாவது சொல்லும்படிகேழ்க்கவே பக்கிரி சொன்னதாவது "பெண்கள் ஸ்நானம்செய்யும் அறையின் வாயிலில் நிற்கும் சிறுவர்களைப்போல், அறுசுவை பதார்த்தங்களுடன் கூடின இலையைப் பார்க்கும்பொழுது, என்பசியின்கொடுமை வலுக்கிறது" என்றார். எல்லோரும் இதைக்கேட்டவுடனே சிரித்தார்கள். உணவளிக்கும்படி சொன்னார்கள். பரிமாறி முடிவதற்குள் பக்கிரி உண்ண வாரம்பித்தார். தடுக்கவே அவர்சொன்னதாவது: "எனக்குக் கட்டாயத்தின்பேரில் மாம்சத்துண்டு வேண்டாம். ஏனெனில் பசியிலிருந்து வருந்துகிறவனுக்குக் காய்ந்த ரொட்டித் துண்டே பஞ்சாமிருதமாம்."

கதை 36.

ஜனங்களதிகமாகத் தன்னை வந்து காணுவதினால் காலம் வீணாகி விடுகிறதென்றும் அவர்களைத் தடுக்க என்ன உபாயம் செய்யலாம் என்றும் சற்குருவைப் பார்த்து சீடன் வினவிய

காலத்தில், அவர் பதிலுரைத்ததாவது. "அவர்களிலுள்ள ஏழைகளுக்குப் பணத்தைக் கடனுகக் கொடு. பணக்காரர்களிட மிருந்து பணத்தைக்கேள். அப்பொழுது மறுதடவை கூட உன்னைக் காண எவனும் வரமாட்டான்," இஸ்லாமியக் சேனைக்குப் பிச்சைக்காரன் ஒருவன் தலைவனுயிருந்தால், நாஸ்திகர்களெல்லோரும், அவன் பிச்சைக் கேழ்ப்பான் என்ற பயத்தின் மேலீட்டினுல் சீன தேசத்திற்கு ஓடிவிடுவார்கள்.

கதை 37.

நியாயவாதி ஒருவர் தன் தகப்பனிடம் சொன்னதாவது "பிரசங்கம்செய்கிறவர்களுடைய மொழிகளில் எனக்குக் கவனஞ் செல்லுவதில்லை. ஏனெனில் அவர்கள் சொல்லுவது ஒன்று; செய்வது ஒன்று. பிறரைத் துறந்துவிடும்படி உபதேசம் செய்கிருர்கள். தாங்களோ தனத்தைச் சேமிப்பதிலேயே கண்ணுங் கருத்துமாயிருக்கிருர்கள். சொல்லுவது போல் செய்துகாட்டத்துணியாத புத்திமானின் உபதேச மொழிகளால் யாது பயன் ஏற்படும்? பாபத்தை விடு என்று கூறுபவன் புத்திமானுகமாட்டான்; பாபத்தைச் செய்யாமலிருப்பவனே ஆவான். சிற்றின்ப சுகங்களிலகப்பட்டுக்கொண்டு திண்டாடும் புத்திமானுல் பிறருக்கு எவ்விதம் வழி காட்ட முடியும்?" இவைகளைக் கேட்ட தகப்பனுர் விடையளித்ததாவது. "குழந்தாய்! இவ்வெண்ணங்களின் காரணமாக நீ பெரியார்களுடைய உபதேச மொழிகளைக்கவனியாதிருத்தல் கூடாது. படித்தவர்களின்மேல் பழியைச் சுமத்தி குற்றங் குறை யில்லாத குருவைத் தேடுவதிலேயே காலத்தைக் கழிக்கக்கூடாது. குருடன் இருளில் ஒரு பள்ளத்தில் விழவே எ! முஸ்லீம்களே, எனக்கு வழியைக் காண்பிக்க விளக்

கைக் கொண்டுவாருங்கள் என்று'' அலறினன். இதைக் கேட்ட ஒரு ஸ்திரீ ''நீயோ விளக்கைக் காண முடியாது. அதினல் உனக்கு யாது பயனேற்படும்'' என்ருள். இவ் விதமே உன்னுடைய கதையும் ஆகும். உபதேசகர்களுடைய சேர்க்கை ஒரு வியாபார ஸ்தலத்தை யொத்தது. விலையைக் கொடுக்காமல் சாமான்களைப் பெறமுடியாது. அது போலவே நல்லெண்ணத்துடன் வந்தாலொழிய பயனேற் படாது. சொல்லுவது சுப செய்கைகளுக்கு மாறினதாக விருந்த பொழுதிலும் கவனத்துடன் கேள். தானே தூங்குகிறவன் பிறரை எவ்விதம் எழுப்புவான் என்று விரோதிகள் கூறுவது இயல்பு. சுவறின் மேலெழுதப்பட்டிருந்த பொழுதிலும் உபதேசத்தையறிந்து கொள்ளுவதே நல்ல முறை.

கதை 38.

பக்கிரி யொருவர் தன் மடத்தையும் இனத்தாரையும் விட்டுப் பிரிந்து ஒரு கல்லூரியில் வந்து சேர்ந்தார். மேதையா யிருப்பதற்கும் துறவியாயிருப்பதற்கும் வித்தியாசமென்ன வென்று கேட்டபொழுது அவர் ''அலைகளிலிருந்து தன்னுடைய கம்பளத்தைத் துறவிதானே காப்பாற்றிக்கொள்ளுவான். மேதையோ முழுகிப்போவதிலிருந்து பிறரைக் காப்பாற்ற முயலுவான்'' என்று சொன்னர்.

கதை 39.

குடி மயக்கத்தினல் நடுத்தெருவில் ஒருவன் படுத்திருப்பதைச் சாது ஒருவர் கண்டார். கண்டதும் அவனை வெறுத்தார். அப்பொழுது அவன் சொன்னதாவது ''வழி தப்பின

வர்களைக் கண்டு அனுதாபப்படு. பாபியைக் கண்டு போற்று. அவனுடைய பாபங்களை மன்னித்துவிடு. எனக்காக நீ ஏன் இரங்கக்கூடாது? நீ என்னை வெறுப்பானேன்? நான் தான் நாகரிகத்திற் குறைந்திருந்த பொழுதிலும் நீ மரியாதையுடன் நடந்துகொள்."

கதை 40.

பக்கிரியுடன் வாது செய்யவேண்டிச்சில துஷ்டர்கள் வந்து அவரை வசைமொழிகளால் மனம் நொந்து போகும்படி செய்து விட்டார்கள். பக்கிரி பொறுக்க முடியாமற் தன் குருவிடம் போய் நடந்தவைகளைச் சொல்லவே அவர் சொன்னதாவது; "பக்கிரிகளுக்குப் பொறுமையுடனிருத்தலே அழகாகும். இவ்வுடையைத் தரித்தவன் கஷ்டங்களைச் சகித்துக்கொள்ள சக்தியற்றிருப்பானேயானால், இவ்வாச்ரமத்திற்கே தீங்கிழைத்தவனாவான். ஒரு சிறு கல்லினால் நதியானது கலங்காது. இவைகளினால் கஷ்டப்படுகிற பக்கிரி ஆழமில்லாத ஜலத்தைப் போலவே யாவான். பொறுத்தார் பொறுக்கப்படுவார். மண்ணுடன் மண்ணாய்ப்போவது உறுதியான படியினால் நாமே சாம்பராகிவிடுவோம்.

கதை 41.

இதைக் கவனியுங்கள். பக்தாத் நகரில் கொடிக்கும் திரைக்கும்போட்டி ஏற்பட்டது. தெருப்புழுதியினாலும் ஜனங்களின் ஓட்டத்தினாலும் வருந்திக்கொண்டிருந்த கொடி சொன்னதாவது. "நாமிருவரும் தோழர்களே; சுல்தானின் சேவகர்களே. எக்காலத்திலும் நான் பறக்கவேண்டியவனாக விருக்கிறேன். ஒருநிமிஷஅவகாசங்கூடக்கிடைப்பதில்லை. கால்நடை

யாகச்செல்லுவதின் கஷ்டத்தையும், கோட்டைகளைப் பிடிப்பதினல் ஏற்படும் துன்பத்தையும், கானகத்தின் கொடுமையையும், புயற்காற்றின் வலுவையும் நீ அறியமாட்டாய். நான் இவ்வளவு பலசாலியாயும் பராக்கிரம முள்ளவனுயுமிருந்து மரியாதை உனக்கே என்னைவிட அதிகமாகவிருக்கிறது. எப்படியென்ருல் சந்திரனை யொத்த யுவதிகளுடையவும் ரோஜா மலரை யொத்த கன்னிகைகளுடையவும் சங்கத்திலேயே காலத்தைக் கழிக்கிருய். என்னை ஏந்திச் செல்லுபவர்களோ அடிமைகள். நான் அலையும் இடமோ புயற்காற்று. நான் நடக்கும் பூமியோ பாண்டுவாத்தியம்'' இதைக்கேட்ட திரை சொல்லியதாவது ''நீ ஆகாயத்தில் பறப்பதுபோல் நானில்லை, கதவிடுக்கிலகப்பட்டுக்கொண் டிருக்கிறேன். தப்பித் தவறி என்னை மீறி எவனுவது உள்ளேபார்ப்பானேயானல் அவனுக்கு விளைவது துன்பமே''

கதை 42.

மகாத்மா ஒருவர் பயில்வான் ஒருவரைக்கண்டார். பயில்வான் கடுங்கோபத்தி லிருந்தான். வாயும் உதடும் துடித்துக்கொண்டிருந்தது. மகாத்மா அதன் காரணத்தைக் கேழ்க்கவே அவனை எவனே வைதுவிட்டதாகத்தெரிய வந்தது. அப்பொழுது மகாத்மா சொன்னர்; '' ஆயிரம் இராத்தல் நிறையுள்ள கல்லைத் தூக்கவல்ல இவ்வற்பன் ஒரு வார்த்தையைத்தாங்க முடியவில்லை. உன்னுடைய பெருமையையும் புகழையும் பலத்திற்கும் சாகஸத்திற்கும் ஒப்படைத்து விடு. துர்ப்பலமான மனதையுடையவனே! உனக்கும் ஒரு ஸ்திரீக்கும் என்ன வித்தியாச மிருக்கிறது. பிறர் உன்னிடம் பிரியத்துடன் பேசவேண்டி உன் பலத்தைச்

செலவிடு. யானையின் வாயைக் கிழிக்கவல்ல நீ, பிறருடைய வாயை அடக்கப்பார்ப்பது தைரியமாகாது. மனிதத் தன்மையில்லாதவன் மனிதனாகமாட்டான். ஆதாமின் மக்களின் மண்ணிலிருந்து உண்டானவர்களே! வணங்கிப்போகும் குணமில்லாவிடில் நீங்கள் மனிதனாகமாட்டீர்கள்.

கதை 43.

பக்தாத் நகரில் ஒருவரிருந்தார். அவர் தன்பெண்ணைச் சக்கிலியனுக்குக் கலியாணம்செய்து கொடுத்திருந்தார். சக்கிலியன் பெண்ணின் உதடை நன்றாகக் கடித்துவிட்டான். இரத்தமும் பெருகிற்று. இதைக்கண்ட தகப்பனார் மாப்பிளையிடம் வந்து சொல்லுவார் "நீசனே!! தோலினால் செய்யப் பட்டதா என்ன? அவளுடைய உதடு. அவ்வளவு கடினமாகக் கடித்துவிட்டாயே? உன்பல்லின் உறுதியே உறுதி. நான் விளையாடவில்லை, காரியத்தில் விளையாடாதே. உன் தொழிலைச்செய். அதைக் கொண்டு, களிக்காதே. தொட்டில் பழக்கம் சுடுகாடுவரையிலும்."

கதை 44.

வக்கீலுக்கு மிகவும் விகாரமான பெண் இருந்தது. அதை மணஞ்செய்துகொள்ள எவனும் விரும்பவில்லை. அவரும் பணம் எவ்வளவோ தருவேன் என்று சொல்லிப்பார்த்தார். கடைசியில் ஒரு குருடனுக்கு அவளைக்கலியாணம் செய்து வைத்தார். இதுநடந்த கொஞ்ச நாளைக்கெல்லாம் சிலோனிலிருந்து ஒரு சிறந்த கண்வைத்தியர் வந்தார். இம்மாப்பிள்ளையின் கண்பார்வைப் பெறச்செய்வேன் என்றபொழுது மாமனார் சொல்லுவார் "இழந்த பார்வையைப் பெற்றுவிட்டால்

என் பெண்ணை ஒதுக்கிவைத்துவிடுவானே என அஞ்சுகிறேன். குரூபியின் புருஷன் பார்வை யிழந்தவனாயிருப்பதே மேலான தல்லவா?''

கதை 45.

ஒரு ராஜனுக்குப் பக்கிரிகைகளைக் கண்டால் பெரும் வயிற்றெரிச்சலுண்டு. இதையறிந்திருந்த பக்கிரியொருவன் சொல்லுவான் "மேற்பார்வைக்கு ஏ! அரசனே! இவ்வுலகில் நீ எங்களைக்காட்டிலும் சிறந்தவனே. இறக்குந்தருவாயில் இருவரும் சமானமானவர்களே. நியாயத் தீர்ப்புதினத்தில் உன்னைவிட நாங்கள் சிறப்புடனிருப்போம். நாடு நகரம் ஜயித்தவனுக்கு எல்லாமிருக்கும். பக்கிரிக்கோ ஒன்றுமிராது. ஆனால் உலகவாழ்வை நீக்கும்பொழுது பிச்சைக்காரனுடைய பதவியே பெரிதாக விருக்கும். பக்கிரியின் மேல் காணப்படுவது தைத்த துணித்துண்டே; க்ஷவரம் செய்துகொண்ட மண்டையோடே. ஆனால் அவருள்ளேயிருக்கும் சித்தமோ சுத்தமானது. மனமோ கட்டுப்பட்டது. பக்கிரி கடவுளைப் போற்றுகிறார்; பூஜை செய்கிறார்; பிச்சையிடுகிறார். இக்குணங்களை யுடையவர் நல்ல ஆடையுடைகளைத் தரித்துக்கொண்டிருந்தபொழுதிலும் பக்கிரியே யாவார். சிற்றின்பசுகங்களில் அழுந்தினவன், வீண்பேச்சு பேசுகிறவன், கடவுளைத் துதியாதவன், இரவைப் பகலாக்கி மாதர் போகங்களில் கழிப்பவன், பகலை இரவாக்கி சோம்பேரியாய்த் தூங்குபவன், இவைகளெல்லாம் உள்ளவன் ஒரே துணியை கட்டிக்கொண்டிருந்தாலும் தூர்த்தனே யாவான். ஏ பேதையை! சித்த சுத்தமற்றவனே. நாரைக்கொண்டு கட்டின வீட்டிற்கு முன்னால் விலையுயர்ந்த திரையைத் தொங்கவிடுவதினால் யாது பிரயோஜனம்?

கதை 46.

கோபுரத்தின் வாயிலில் சில சிவந்த ரோஜா மலர்கள் தொங்க விட்டிருந்ததைக் கண்டேன். உடனே இவ்வளவு அழகான ரோஜாக்களுடன் புல் இருக்கவேண்டிய காரண மென்னவென்று யோசித்தேன். அப்பொழுது அப்புல்லானது அழுதுகொண்டே சொல்லும்:-பரோபகார எண்ணமுள்ள வர்கள் தங்களுடைய துணைவர்களை மறப்பது கிடையாது. என்னிடத்தில் அழகாவது, வாசனையாவது அல்லது வர்ண மாவது கிடையாது. இல்லாமற் போனபொழுதிலும் நான் தெய்வத்தினால் ஆக்கப்பட்ட தோட்டத்தின் புல்லாக மாட் டேனா? கடவுளின் அருளினால் நான் வாழ்கின்றேன். என க்கு வேறு துணை கிடையாது. அவர்தான் என்னைக் காப் பாற்றுகிறார். எஜமானன் அடிமையை விடுவிக்கவேண்டு மல்லவோ? ஏ தெய்வமே; பற்பலவற்றினால் உலகத்தை வளம்படுத்தி யிருக்கிறாய். உன் பழைய சேவகனைக் காப்பாற்று. ஏ ஸாதியே!! திருப்தி இன்பக் கோயிலைத்தேடு. ஏ மனிதனே! தர்ம வழியில் நட.

பக்கிரி நீதி முற்றிற்று.

மௌனச் சிறப்பு.

அத்தியாயம் 3

கதை 1.

“நான் மௌனவிரதமிருக்க நிச்சயம் செய்துள்ளேன். ஏனெனில் சம்பாஷணை செய்யுங்காலத்தில் நன்மை தீமை இரண்டும் விளைகின்றன. விரோதிகள் தீமையையே கவ

னிக்கிறார்கள்'' என்றார் ஒருவர். அதற்கு ஒருவர் பதிலு ரைத்ததாவது.''நன்மையைக் காணுதவனே பெரிய சத்துரு. விரோதிகளுடைய கண்ணிற்குக்குணமேபெருங்குற்றமாகும். ஸாதி ஒரு ரோஜாவே. ஆனால் சத்துருக்களின் பார்வையில் அவர் ஒரு முள்ளேயாவார். விரோதிகளுடைய கண்மூடி யைக் கொண்டவர்கள் நல்லோர்களைக் காணும் பொழுதெல் லாம் குற்றங் கூறுமல் போகமாட்டார்கள்.

கதை 2.

பெரும் நஷ்டத்தை யடைந்த வியாபாரி தன் பிள்ளை யிடம் அதை எவரிடமும் தெரிவிக்காமலிருக்கும் படியாக ஆஞ்ஞாபித்தான். மகனும் சரியென்று கூறிவிட்டுக் காரணங் கேட்கவே தகப்பன் சொன்னதாவது: ''பணம் நஷ்டமானதுபோக பகையாளிகளின் தூற்றலுக்கும் ஆளா கக் கூடாது. விரோதிகளிடம் உன் துக்கங்களையும் துன்பங் களையும் வெளியிடாதே. ஏனெனில் வெளிப்படையாக உன் னிடம் அநுதாபங் காட்டினபொழுதிலும் அந்தரங்கமாக உனது விரோதிகள் சந்தோஷப்படுவார்கள்.''

கதை 3.

ஞானத்திலும் தர்ம சிந்தனையிலும் பேர் பெற்ற சிறுவன் இருந்தான். எல்லாம் தெரிந்திருந்தும் கற்றோர்களுடைய சபையில் ஒன்றும் பேசாமல் உட்கார்ந்திருப்பான். தகப்பன் காரணம் கேட்டபொழுது சொல்லுவான் ''எனக்குத் தெரி யாததைக் கேட்டுவிட்டால் அவமானபடவேண்டி வருமே''. சூபிகளுடைய சமாசாரம் உங்களுக்குத் தெரியாதா? அவர் களிலொருவன் தன் செருப்புக்கு ஆணியை அடித்துக்கொண்

டிருந்தபொழுது தலைவர் அவனிடம் வந்து தன் குதிரைக்கு லாடம் அடிக்க அவனை யழைத்தார். பேசாமலிருக்கிறவரை யில் சிறந்ததே. பேசவாரம்பித்துவிட்டால் புள்ளி விவரங் களுடன் தயாராயிருக்கவேண்டும்.''

கதை 4.

சுல்தான் மாமூதின் சிலவேலையாட்கள் ஹசன் மைமந்தி யைப்பார்த்து ஒருசில விஷயத்தைக் குறித்து அரசன் என்ன சொன்னான் என்று கேட்டபொழுது, அவர் விடையாக "நீங் களும் அதன் விவரத்தை யறிவீர்களோ" என்றார். முதன் மந்திரியாகிய உங்களிடம் சொல்லுவனவற்றை யெல் லாம் பிறரிடம் அரசன் சொல்லமாட்டான்'' என்றார்கள். அதற்கு அவர் "நான் வேறுயாரிடமும் வெளியிடமாட்டேன் என்ற நம்பிக்கையின் மேலேயே அரசன் சொல்லும்பொழுது நீங்கள் ஏன் அதைகேழ்க்க விரும்ப வேண்டும்?" என்று விடையளித்தார். தனக்குத் தெரிந்ததாக அறிவாளி வெளிப் படுத்த மாட்டான். இராஜ இரகசியங்களைப் பிரசுரித்து உயிருடன் விளையாடுவானேன்?

கதை 5.

ஒரு வீட்டை விலைபேசி வாங்கத்தயங்கிக் கொண்டிருக் கும்பொழுது ஒரு யூதன் "அவ்விடத்தில் நான் வெகு நாளாய் வசித்துவருகிறேன். வீட்டைப்பற்றி என்னைக் கேளுங்கள். தைரியமாய் வாங்கலாம். அதில் குற்றங் குறையொன்றுமே கிடையாது'' என்றான். " ஆனால் நீங்கள் அடுத்த வீட்டுக்காரராச்சுதே'' என்று சொல்லி நான் அதை முடித்தேன். உங்களுடையதற்குஅடுத்தாற்போல் அவ்

வீடு இருப்பதினுல் அதற்கு 10 காசு விலே குறைவாகவே தானிருக்கும். நீங்கள் இறந்த பின்னர் ஆயிரம் விலே போனு லும் போகும்.

கதை 6.

கள்வர் கூட்டத்தலேவனிடஞ் சென்று கவியொருவர் அவனைக் குறித்துப் புகழுரையாகச் சில பாக்களேப்பாடினுர். அதைக்கேட்டு, அவர் உடுத்தியிருந்த ஆடைகளேக் கழற்றிக் கொண்டு நகரை விட்டு அப்புறப்படுத்தும்படி அவன் உத்தரவளித்தான். வெளியில் நாய்களின் தொந்திரவு பொறுக்க முடியாமல் கற்களே எடுக்க முயன்ருர். அவைகளோ பூமியுடன் இறுகி அசைக்க முடியாமலிருந்தது. "நாயையும் விட்டு கற்களேக்கட்டிவைத்திருக்கும் இவர்கள் என்னே" என்று அவர் வருத்தப்பட்டதைக் கள்வர் தலேவன் கேட்டு "வரன் ஒன்று கேளும்" என்ருன். அதற்குச் சொன்னதாவது "உனக்குப் பிரியமிருந்தால் என் ஆடையைக் கொடு. தர்மாத்மாக்களிடமே நன்மையை எதிர்ப்பார்க்கலாம். உன்னுடைய நீதியில் எனக்கு நம்பிக்கை கிடையாது. என்னைத் தொந்திரவு செய்யாதே. என்னை விட்டு விடுவதே பெருந்தர்மமாகும்." இதைக்கேட்ட தலேவன் மனமுருகி அவருக்கு விலேயுயர்ந்த ஆடையாபரணங்களே யளித்தான்.

கதை 7.

ஜோசியர் தன் வீட்டிற்குள் நுழைந்தவுடன், தன் மனேவியுடன் அயலாளெருவன் இருப்பதைக்கண்டு அவனை வைது சண்டைக்கிழுத்தார். பெருங் கூக்குரலேற்படவே வழிப்போக்கன் சொன்னதாவது " உன் வீட்டில் நடக்கும் விஷ

யங்களை அறியத் திறமையற்ற நீ கிரகங்களைப்பற்றி என்ன அறிவாய்?''

கதை 8.

வெறுக்கத்தகுந்த குரலோசையுள்ள ஒரு உபதேசகர், தன்னுடைய குரல் மிகவும் இனிமையான தொனியை உடையதென நினைத்து, பிரயோசனமில்லாமல் இரைவார். காட்டுக் காக்கை கத்துவது போல் அவருடைய பாட்டும் இருக்கும். "அருவருப்பான ஓசைகளுள் கழுதைக் கனைப்பே சிறந்தது'' என்ற குர் ஆன் வாக்கியம் இவருக்கே ஏற்கும். இக்கழுதை கனைக்குங்கால் பட்டணம் நடுங்கும். நகரவாசிகள், உபதேச பதவிக்காக, இவரைத் தொந்திரவு செய்யாமல் சங்கடத்தைப் பொறுத்துக் கொண்டிருந்தார்கள். இவருக்கு விரோதமான பிறநாட்டு உபதேசகர் ஒருவர் இவரைக் காணவந்து "நான் நேற்றிரவு கண்ட கனவு உண்மை யாகுமாக'' என்று சொன்னார். "அதென்ன கனவு'' என்று இவர் வினவவே அவர் சொன்னார் "உனக்கு இனிய குரலோசை யுண்டென்றும் அதைக் கேட்டு ஜனங்கள் ஆனந்தத் தாண்டவமாடுகிறார்கள் என்றும் கண்டேன்; அப்பொழுது இவர் கொஞ்சம் யோசித்து சொன்னதாவது "எனது குரலோசை அருவருப்பானதென்றும், அதைக் கேட்டுச் ஜனங்கள் துன்பப்படுகிறார்களென்றும் என் குணத்தை வெளிப்படுத்தும் கனவு சாலச் சிறந்ததே. நான் இனி மெல்லிய குரலிலேயே உபதேசஞ் செய்வேன். என் தீய குணங்களைச் சரியெனச் சொல்லி என் நடத்தைகளை ஆமோதித்த சினேகிதக் கூட்டம் எனக்கு ஏற்றதல்ல. குற்றங் குறை எங்கு இருக்கிறது என்று உற்றுப்பார்த்து என் தப்பை வெளிப்படுத்தும் சத்துருக்களின் பார்வையே ஏற்றது.

கதை 9.

கேழ்ப்பவர்களைக் கஷ்டப்படுத்தும் குரலோசையுள்ளயொருவர் சம்பளமில்லாமலே ஸஞ்சாரியா மசூதியில் அஜாம் சொல்லிக் கொண்டிருந்தார். மசூதிக்குச் சொந்தக்காரரான அமீர் ஒருவர் இவருக்கு விரோதமாகப் பேசப்பிரியப்படாமல் "என் குழந்தாய், இந்த மசூதியில் அஜாம் சொல்ல பலர் வெகுநாளாய் சொற்ப சம்பளத்திலிருக்கிறார்கள். அவர்களுக்கு மாதம் 5 வெள்ளி சம்பளமுண்டு. உனக்கு 10 வெள்ளி தருவேன். நீ வேறு மசூதிக்குப்போ" என்றார். இதைக்கேட்டும் அவனும் போய்விட்டான். சின்னாள் கழித்து அமீரிடம் திரும்பிவந்து அவன் சொன்னதாவது "10 வெள்ளிக்காக என்னை இங்கிருந்து போகச் சொன்னதினால் எனக்குப் பெரிய அநீதியை இழைத்தவராகிறீர். நான் போனவிடத்திலுள்ளவர், 20 வெள்ளிக்கு வேறொரு விடத்திற்குப் போகச்சொன்னார். நான் ஒத்துக்கொள்ள மறுத்துவிட்டேன். அமீர் சிரித்து "உனக்கு ஐம்பது வெள்ளியும் கொடுப்பார்கள், ஏற்றுக்கொள்ளாதே" என்றார். உன் குரலினால் என் ஆத்மாவை நீ வெட்டுவதுபோல், மண்வெட்டி கூட வெட்டாது.

கதை 10.

இசையில்லாத ஸ்வரத்துடன் குர் ஆனை இரைந்து படித்துக் கொண்டிருந்தான். வழிப்போக்கர்கள் என்ன சம்பளமென்று கேட்டதற்கு ஒன்றுமில்லை யென்றான். "அப்படியானால் ஏன் இவ்வளவு கஷ்டப்படுகிறாய்" என்றதிற்கு "ஈசுவரனுக்காகத்தான்" என்றான். "ஈசுவரனுக்காக நீ

படிக்காதே. இவ்விதம் படிப்பதினல் இஸ்லாத்தின பெருமையைப் பங்கம் பண்ணுகிருய்,, என்ருர் ஒருவர்.

மௌனச் சிறப்பு முற்றிற்று.

திருப்தி யின்பம்.

அத்தியாயம் 4.

கதை 1.

துணி வியாபாரிகளின் விடுதியில் வசித்துக் கொண்டிருந்த ஆபிரிக்காப் பிச்சைக்காரன் ஒருவன் "பணமுள்ளவர்களே! உங்களிடத்தில் நியாயமும் எங்களிடத்தில் திருப்தியும் இருந்திருந்தால் உலகத்தில் வறுமையே இராது" என்ருன். ஏ !! சந்தோஷமே! மனவமைதியே ! என்னைப் பொன்னுள்ளவனுகச்செய். நீ யில்லாமல் பொருளுக்குப் பிரயோஜனமே கிடையாது. லுக்மான் தனித்திருந்தும் சந்தோஷமாகவும் திருப்தியாகவும் இருந்தார். சந்தோஷமற்றவர்களுக்குத் தத்துவஞானமும் கிடையாது.

கதை 2.

எகிப்தில் ஒரு கனவானுக்குப் பிள்ளைகள் இருவரிருந்தனர். ஒருவன் படிப்பைத்தேடிக்கொண்டான், இன்னுமொருவன் பொருளைத்தேடிக் கொண்டான். படித்தவன் பெரிய வித்வானுஞன்,பொருளுள்ளவன்எகிப்தியஅதிகாரியானுன். பொருளுள்ளவன், படித்த தன் சகோதரனைப் பார்த்து "நான் அரசனுகிவிட்டேன். நீயோ அதே வறுமையிலிருக்கின்ருய்" என்று ஏசினுன். "தீர்க்கதரிசிகளுடைய பரம்பரையில் நான்

சேர்ந்ததற்குக் கடவுளைப் பணிகிறேன். அதுவே ஞானம். நீ எப்போதிய ஆளுகையை அண்டந்திருக்கிறுய். ஜனங்களுடைய கால்களில் அகப்படும் எறும்பே நான்: விஷத்தைக் கொண்டு கொட்டும்வண்டல்ல. ஈசுவரனுக்கு நான்மிகவும் கடமைப்பட்டவனுக விருக்கிறேன். ஏனெனில் மனிதஜாதியை உபத்திரவஞ் செய்யவேண்டிய சக்தி என்னிடமில்லை'' என்றுன்.

கதை 3.

ஒட்டு மேல் ஒட்டுப் போட்டுத் தைத்துக் கொண்டிருந்த பெரும் வறுமையிலிருந்த பக்கிரி ஒருவன் கீழ்க்காணும் வசனங்களைச் சொல்லிக்கொண்டே சாந்தத்துடனிருந்தான். "காய்ந்த ரொட்டித்துண்டம்; கனமான உடை: இதைக் கொண்டே நான் திருப்தியுடனிருக்கிறேன். ஏனெனில் மனிதர்களுக்குக் கடமைப்பட்டு அச்சுமையின் கீழ் கஷ்டப்படுவதைவிடை தன் கஷ்டத்துடன் துன்பப்படுவதே மேலானது.'' இதற்கு ஒருவன் அவனிடம் சொன்னதாவது "இந்நகரில் பெருந்தகையாளர்களும் நன்கொடையாளிகளும் இருக்க நீ ஏன் சும்மாவிருக்கிறுய்? நீ அவர்களைக்கேட்டால் வேண்டிய உதவியை யளிப்பார்களே.'' அதற்கு அவன் விடையளித்தான் "தன் தேவைகளை ஒருவனிடம் முறையிட்டுக் கொள்ளுவதைவிட வறுமையில் இறப்பதே மேலானது. ஏனெனில் ஆடை உடைகளுக்காகப் பெரியவர்களுக்கு மகஜர் தயார் செய்வதைவிட ஒட்டுமேல் ஒட்டுப் போட்டுத்தைத்துக் கொண்டு பொறுமையுடனிருப்பதுமேல் எனச் சொல்லியுள்ளார்கள்.'' உண்மையென்னவென்றுல் பிறர் உதவியைக்கொண்டு சுவர்க்கத்தையடைவது நரகமேயாம்.

கதை 4.

இரான் தேயத்தரசன் ஒருவன் முகம்மது நபியிடம் ஒரு வைத்தியனை அனுப்பினான். சில வருடம் அரேபியாவில் தங்கியிருந்தார். ஆனால் தன் சாமர்த்தியத்தைக் காண்பிக்கவும் மருந்து வாங்கிக்கொள்ளவும் எவனும் வரவில்லை. ஒரு தினம் தீர்க்கதரிசிகளுடைய அரசனிடம் வந்து அவன் முறையிட்டதாவது "உங்களுடைய நண்பர்களுக்குச் சிகிச்சை செய்ய என்னையனுப்பினார்கள். ஆனால் நாளதுவரையில் எவனும் வரவில்லை. எனக்குண்டான வேலையின் தேர்ச்சியைக் காண்பிக்கவும் சமயம் வாய்க்கவில்லை." இதற்கு முகமது நபி பதிலளித்ததாவது "கடும்பசி உண்டாகும் வரையில் சாப்பிடுகிறது கிடையாது, நல்லபசியுடனிருக்கும் பொழுது சாப்பிடுவார்கள். இதுவே இவர்களுடைய வழக்கமாகும்." "சுகஜீவியாய் இருக்க வழியிதுவே" என்று வைத்தியன் கூறி விட்டுப் போய்விட்டான். தன் மௌனத்தினால் துன்பம் விளையும் என்று அறிந்தபொழுதும், அதிகமாகச்சாப்பிட்டபொழுதும், பசியின் கொடுமையினால் மரணம் ஏற்படும் பொழுதுமேவைத்தியன் பேசுவான். அப்பேச்சு அப்பொழுது அமிர்தமாகும். அவ்விதச் சாப்பாடும் உயிரை யளிக்கும்.

கதை 5.

வாக்குறுதிகள் பல தந்து ஒன்றையும் நிறைவேற்றாமலிருந்த ஒருவனைப் பார்த்து பெரியார் ஒருவர் சொன்னதாவது "நீ அதிகமாக உண்ணுவதை யான் அறிவேன். பசியைக்கட்ட நீ முயற்சிக்கும் வலிமையானது மயிரை விட மெல்லியதாயிருக்கிறது. நீ பசியைப் பெருக்கக் கஷ்டப்படுவது ஒரு

இரும்புசங்கிலி யுடையபலத்தையும் துண்டு துண்டாக்கிவிடும். மிதமின்மையால் நீ உயிரைத் துறக்கவேண்டிய நாளும் வந்துவிடும். வளர்த்த ஓநாய்க் குட்டி பெரியதானவுடன் எஜமானனையே கிழித்துவிடும்.''

கதை 6.

ஒரு நாளில் எவ்வளவு அளவு ஆகாரம் சாப்பிடவேண்டும் என்று ஒரு அரபி வைத்தியரைக் கேட்டதாக ஆர்டிஷர் பாபுகான் அவர்களுடைய சரித்திரத்தில் காணப்படுகிறது. அதற்கு நூறு திரான் இடை அளவு சாப்பிட்டால் போதுமானதென்று விடைதரப்பட்டது. அதிலிருந்து உண்டாகும் வலிமை எவ்வளவு என்று அரசன் வினவினன். அதற்குவைத்தியன் கூறியதாவது ,'உன்னைத்தாங்க இந்த அளவு போதுமானது. அதிகமாக இன்னும் எவ்வளவு சாப்பிட்டபொழுதிலும் நீ தான் அதைத்தாங்கவேண்டும். பிழைத்துக்கடவுளைத் துதிக்கவே நாம் சாப்பிடுகிறோம், என்று நாங்கள் நம்புகிறோம். நீங்களோ சாப்பிடுவதற்காகவே பிழைத்திருப்ப தாக நம்புகிறீர்கள்.

கதை 7.

குராஸான் நாட்டுப் பக்கிரிகள் இருவர் ஒன்றுகூடி யாத்திரைக்குப் புறப்பட்டார்கள். ஒருவன் மெலிந்தவன், இரண்டு நாள் பட்டினி யிருப்பான். பருத்த மற்றொருவன் நாளைக்கு மூன்று தடவை சாப்பிடுவான். துப்பறிவோர்களென்ற சந்தேகத்தின்பேரில் கைதியாக்கி, இருவர்களையும் ஒரே அறையில் அடைத்து விட்டுப் பூட்டிவிட்டார்கள். பதினைந்து நாள் பொறுத்து அவர்கள் குற்றவாளிகள் அல்ல,

என்பது விளங்கியது. கதவைத்திறந்து பார்க்கும்பொழுது பருத்தவன் மரணமடைந்திருப்பதையும் இளைத்தவன் பிழைத்திருப்பதையும் கண்டு ஆச்சரியமடைந்தார்கள். அப்பொழுது ஞானி ஒருவன், இதற்கு விரோதமாக நடந்திருந்தால் ஆச்சரியப்பட வேண்டியதுதான் என்றார். ஏனெனில் அதிகம் சாப்பிட்டுக் கொண்டிருந்தவன், பசியின் கொடுமை தாங்க முடியாமற் இறந்துவிட்டான். தன் வயமாக்கிக்கொண்ட சரீரத்தையுடைய மெலிந்தவன் பட்டினியிருக்கக்கூடியவன். எனவே தப்பித்துக் கொண்டான். மிதமாகச் சாப்பிடுகிறவன் வறுமை வந்த காலத்திலும் சுலபமாகத் தப்பித்துக்கொள்வான். அதிகமாகச் சாப்பிடுகிறவனே துன்பப்பட்டு அவஸ்தையில் உழலுவான்.

கதை 8.

மிதமிஞ்சி அதிகம் சாப்பிடுகிற தன் மகனைப் புத்திமான் ஒருவர் கோபித்துக்கொண்டார். ஏனெனில் நிறைவினால் நோய்களே விளைகின்றன. "அப்பா! பசி பிராணனைப்பழி வாங்கும். பசியின் வறுமையினால் துன்பப்படுவதை விட அதிகம் சாப்பிட்டு உயிரிழப்பதே மேல் என்று ஞானிகள் சொல்லக்கேட்டதில்லையா?" என்றான் மகன். அதற்குத் தகப்பன் "நிதானமாய் இரு. குடி என்று கடவுள் சொல்லியிருக்கிறார், ஆனால் மிதமிஞ்சி நெஞ்சு நிரம்பச் சாப்பிட்டு, அதனால் பலக்குறைவின் காரணமாக மரணத்தை அடையாதே" என்றார். உயிரைக் காப்பாற்ற ஆகாரமே ஆதாரமான பொழுதிலும் மிதமிஞ்சிச் சாப்பிடுகிறவன் பலமற்றுப்போகிறான். வேண்டாத பொழுது ரோஜாக்களின் குவியலைச் சாப்பிடுவது கேடானது. ஆனால் பட்டினி

யிருந்த பின்னர் உலர்ந்த ரொட்டித் துண்டானது ரோஜா வின் குவியலை விட மேலானது, உருசியானது.

கதை 9.

நோயாளியைப் பார்த்து என்ன வேண்டும் என்று கேட்ட பொழுது சொன்னதாவது "ஒன்றையும் விரும்பாமலிருப் பதே". வயிறு துடித்து வலிக்கும்பொழுது மீதியானதெல் லாம் சரியாயிருந்து பிரயோஜனம் என்ன?

கதை 10.

வஸீத் நகரிலுள்ள கசாப்புக்காரனுக்கு ஸூபிகள் அதிகம் கடன்பட்டிருந்தார்கள். அவன் தினந்தோறும் வசூலிக்கத் தொடங்கி வசமொழிகளையும் சொல்ல வாரம்பித்தான். அவனுடைய இகழ்மொழிகளைக் கேழ்க்கச்சமுகம் மிகவும் துன்பமடைந்தது. ஆனால் அதைப் பொறுத்துக்கொண்டே யிருக்க வேண்டியிருந்தது. தருவேன் என்று சொல்லிக் கசாப்புக் காரர்களைத் திருப்தி செய்வதைக் காட்டிலும் சாப்பாட்டு ஆசையைக்காண்பித்து பசியைத் திருப்தி செய் வது சுலபமானது. பெரியவர்களுடைய ஆதரவின் ஆசை யைத் தொலைத்துவிடலாம்; அவருடைய வாயிற் காற்போன் களுடைய ஹிம்சைகளைப் பொறுக்கமுடியாது. கசாப்புக்காரர் களுடைய நச்சைப் பொறுப்பதைக் காட்டிலும் மாம்சம் இல் லாமல் இறப்பது மேல்.

கதை 11.

வீரன் ஒருவன் தார்தார்களுடன் யுத்தஞ் செய்கையில் பலத்த காயமடைந்தான். அப்பொழுது ஒருவர் " அவ்வியா

பாரியிடம் தைலமிருக்கிறது, கேட்டால் கொஞ்சம் கொடுப்பான்'' என்று சொன்னர். வியாபாரியோ லோபித்தன்மைக்குப் பேர்பெற்றவன். ரொட்டித்துண்டிற்குப் பதிலாக அவனுடைய மேஜையில் சூரியன் இருந்திருந்தால், பிரளய காலம் வரையில் அதை எவருமே காணமாட்டார்கள். அதற்கு வீரன் ''நான் தைலத்தைக்கேட்டால் கொடுப்பானே, மாட்டானே! கொடுத்தாலும் பிரயோஜனமற்றதாய்விடும். அவ்வித மனிதனிடமிருந்து பெற்றுக் கொள்ளுவது விஷமேயாகும். அற்பர்களிடமிருந்து கெஞ்சி வாங்கிக் கொள்வது சரீர சுகத்தையளிக்கும். ஆனல் ஆத்ம சுகத்தை யளிக்காது. உதாரணமாக அம்ருதத்தைக் கீர்த்திக்கு விற்றால் புத்திமான்கள் வாங்கமாட்டார்களென்று ஞானிகள் கூறியிருக்கிறார்கள். மானங்கெட்டுப் பிழைப்பதைக் காட்டிலும் மானத்துடன் மாணமடைவதே மேல். முகக்கோணலுடன் துஷ்டர்கள் கொடுக்கும் தின்பண்டத்தைவிட, நல்லவர்கள் கொடுக்கும் கைப்பான பண்டங்களே மேலானது.

கதை 12.

காப்பாற்ற வகையில்லாமல் பெருங்குடும்பத்தைக் கொண்டிருந்த வித்வான் ஒருவன், பெரியார் ஒருவரிடத்தில் முறையிட அவர் மிகவும் பரிதாபப்பட்டார். ஊக்கமுள்ளவனுக்கு அது அழகல்லவென்று சொல்லி உதவி செய்ய மறுத்து விட்டார். உனக்கு உண்டானதைக்கொண்டு திருப்தியடையாமற் போனல் நண்பனிடம் அணுகாதே. ஏனெனில் அவருடைய அன்பு கைப்பாக மாறிவிடும். உன் வருத்தங்களை வெளிப்படுத்தும்பொழுது பிரசன்னமாயிரு. மலர்ந்த முகத்தையுடையவர்கள் பயனடையாமல் போகார்கள். பெரியா

ருடைய சம்பளம் கொஞ்சம் உயர்ந்த பொழுதிலும், மானம் குறைந்துவிடும். இதையறிந்த சில தினங்களுக்குப் பின்னர் அவர் சொன்னதாவது "கஷ்டகாலங்களி கிடைக்கும் சாப்பாடு துன்பத்தையே யளிக்கும். அடுப்பின் மேல் ஒலையிருந்தும், மரியாதை குறைந்துவிடும். என் சாப்பாட்டையதிகரித்தான்; ஆனால் பேர் போய்விட்டது; பிச்சை யெடுப்பதைவிட, வகையற்றிருப்பதே சிறப்பானது."

கதை 13.

வருந்திக் கொண்டிருந்த பக்கிரியைப் பார்த்து ஒருவன் சொன்னதாவது "அவனிடத்தில் அளவிட முடியாத பொருள் இருக்கின்றது. உன்னுடைய தேவையைத் தெரிந்து கொண்டால் தானஞ் செய்யாமலிருக்கமாட்டார்." பக்கிரி, தனக்கு அவரைத் தெரியாதெனவே அவருடைய வீடுதிக்கு அழைத்துச்சென்றான். அவ்விடத்தில் கடும் முகத்தையும் காய்ந்த உதடுகளையும் உடைய ஒருவனைக் கண்டவுடன் பக்கிரி திரும்பிவிட்டான். காரணங்கேட்டதற்கு "அவனுடைய தானத்தை இழந்துவிட்டேன்" என்றான். வெடுவெடுப்பான முகத்தையுள்ளவர்களிடம் உன் தேவைகளைச் சொல்லாதே. ஏனெனில் அவருடைய தீயகுணங்களினால் துன்பமேற்படும். கேட்டால் கிடைக்கும் என்பதைக் குறிக்கும் முக மலர்ச்சி யுள்ளவர்களிடமே உன் துன்பங்களைச்சொல்.

கதை 14.

மழையில்லாததினால் ஆபிரிகாதேசத்துப் பட்டணம் ஒன்றில் கொடும் பஞ்சம் பரவிற்று. ஜனங்காளல் சகிக்க முடியவில்லை. எல்லாப் பிராணிகளும், மனிதனுள்பட, கட

வுளைத் துதித்துப் போற்றின. இவர்களுடைய முறையீடு களெல்லாம் மழையாக மாறி வானம் வருஷிக்காமலிருந்தது விந்தையே. அக்காலத்தில் ஸ்திரீபுருஷ லக்ஷணமுள்ள பிராணி ஒன்றிருந்தது. அதனிடத்தில் அதிகச் செல்வமிருக் கத் தானம் பலசெய்து சத்திரமும் கட்டிவைத்தது. வறுமை யினால் வருந்தும் ஜனங்கள் அதனுடைய தானத்தைப் பெற லாமா வென்று என்னைக்கேட்டார்கள். "கூண்டில் ஆகாரமில் லாமல் அவஸ்தைப்பட்டாலும் நாயின் எச்சிலைச் சிங்கம் தின்னாது. அற்பனிடமிருந்து இரப்பதைவிடப் பசியின் வயப்பட்டு, பாடுபடுவது மேலானது. தர்ம சிந்தனையற்ற மனிதனைக் குபேரனுக்குச் சமானமான ஐசுவரியங்களை யடைந்திருந்த பொழுதிலும், சாதாரணமாகவே நினை. மதல் களுக்குச் சுவர்ண ஆபரணங்கள் போடுவதுபோலவே, அறி வீனனின் மேற்போடும் பஞ்சவர்ணப் பட்டாடைகளும்.

கதை 15.

தன்னைவிட உதாரகுணமுள்ள மனிதனைப்பார்த்ததுண்டா வென்று கேட்க, ஹாதீம்தாய் சொன்னதாவது "ஒரு சமயம் நாற்பது ஒட்டகங்களைப் பலியளித்த பின்னர், அரபியுடன் பாலைவனத்தின் முனைக்குச்சென்றவிடத்தில், முள்ளுச் சேர் த்துக் கட்டிக்கொண்டிருக்கும் தொழிலாளி யொருவனைக்கண் டேன். பல ஜனங்கள்போகும் ஹாதீம்தாயுடைய விருந்திற்கு ஏன் போகவில்லை என்று வினவே, அவன் சொன்னதாவது "உழைத்துத் தானாகவே ஜீவிப்பவன் ஹாதீம்தாயிக்குக் கட மைப்பட்டவனாகமாட்டான்" நான் இவனையே உதாரகுணத் திலும் நன்கொடையிலும், என்னைவிடச் சிறந்தவன் என வறிந்துகொண்டேன்.

கதை 16.

உடுக்க உடையில்லாமல் மண்ணில் மறைந்து கொண்டிருந்தவன், தீர்க்கதரிசி மோசேயைப் பார்த்தவுடன், "பரிதவிக்கும் எனக்குப் பொருளளிக்கும்படி கடவுளைக் கேள்" என வேண்டினன். மோசேய் வேண்டவே கடவுளும் திருவுளமிரங்கினர். சின்னாட்கள் சென்ற பின்னர் மோசேய் திரும்பி வரும்பொழுது அவனைச் சுற்றி ஜனங்கள் நின்றுக் கொண்டிருந்ததைக் கண்டவுடன் என்னவென்று வினவ "குடிமயக்கத்தினல் ஒருவனைக் கொன்றுவிட்டான். பழிக்குப் பழி வாங்கப் போகிறார்கள்" என்றார்கள். பாவம்! பூனைக்குச் சிறகுகள் முளைத்திருந்தால் உலகில் ஒரு குருவியின் கூண்டைக்கூட மீதிவைத்திராது. அற்பனுக்குப் பதவியும் அதிகாரமும் கிடைத்தால் இறுமாப் புள்ளவனாக எளியோர்களைத் துன்புறுத்துவான். மோசேய் தன் தப்பையுணர்ந்து, மன்னிப்புக்கேட்டுக்கொண்டு "இறைவன் தனது பொக்கிஷத்தைத் திறந்துவிட்டால் பூமியில் ஜனங்கள் கலகம் செய்துகொள்வார்கள் என்பது உண்மையே" என்றார். உன் நாசத்தையடைய எ மனிதனே! நீ செய்த பாபமென்ன? எறும்பிற்குப் பறக்கச் சக்தியில்லாதது நலமே. அற்பனுக்குப் பெருமையும் பதவியும் கிடைக்கும்பொழுது தலைமேல் அடிக்கத்தடியும் தேவை. கடவுளிடம் அதிகம் பொருள்உண்டு. உன்னைப்பொருளுள்ளவனாகச் செய்யாதஅவருக்கு உனக்கு எது நன்மை எது தீமை என்பது தெரியும்.

கதை 17.

கமலவியாபாரிகளின் கூட்டத்தின் நடுவில் உட்கார்ந்து கொண்டு அரபி ஒருவன் சொல்லிக் கொண்டிருந்த

தாவது "கானகத்தில் வழி தப்பிக் கையில் ஆகாரமற்றுப் பரிதவித்துக் கொண்டிருக்கும் பொழுது நான் இறந்துவிட்டேன் என்று நினைத்தேன். அப்பொழுது முத்துக்களால் நிறைந்த மூட்டை யொன்று கிடைத்தது. உண்ண உணவு அதலிருக்கும் என்ற பேராவலுடனும் பேராசையுடனும் அவிழ்த்ததை நான் மறக்கமாட்டேன்! அவிழ்த்தவுடன் மூட்டையில் முத்துக்களைக் கண்டதும் உண்டான ஏமாற்றத்தையும், மனக்கசப்பையும் மறக்கமாட்டேன்." பாலைவன மண்களில் முத்துக்களும் மரகதங்களும் கஷ்டப்படும் யாத்ரீகனுக்குப் பிரயோசன மற்றவைகளே. உண்ணுவதற்கு ஆகாரமில்லாமல் வருந்துகிறவனுடைய மடியில் தங்கம் இருந்தாலென்ன தகரமிருந்தாலென்ன? எல்லாம் ஒன்றே.

கதை 18.

'என்னுடைய தோல் பை நிறம்பத் தண்ணீர் நிறைத்துக் கொள்ளவேண்டி, அலைகள் என்கால்களில் மோதவேண்டும். இவ்வெண்ணம் பூர்ணமாகுமுன் நான் இறக்கக்கூடாது' என்று நாவறண்ட வழிப்போக்கன் ஒருவன் சொல்லிக் கொண்டிருந்தான். ஆகாரமற்று வருந்தும் மனிதனுக்குத் தங்கத்தினால் யாது பிரயோசனம்? சூரிய உஷ்ணத்தினால் வறண்டிருக்கிற பாலைவன யாத்ரீகனுக்கு அசல் வெள்ளியைவிட உணவே சிறந்தது.

கதை 19.

விதிவசத்தைப் பற்றியும், தெய்வ கட்டளையைப்பற்றியும் நான் வருந்தாமலிருந்தேன். ஒரே சமயத்தில் என்காலில் பாதரட்சை யில்லாமலிருந்தபொழுது வருத்தப்பட்டுள்

ளேன். ஏனெனில் ஒன்று வாங்குவதற்குஞ் சக்தியற்றிருந்தேன். ஒரு நாள் மசூதியை யடைந்தவுடன் பாதங்களில்லாத ஒருவரைக் கண்டேன். உடனே கடவுளை வணங்கிவிட்டு, பாதரட்சையில்லாததைக் குறித்து வருந்தாமலிருந்தேன். அறுசுவையுடன் உண்டவனுக்கு நல்ல ஆகாரம், பச்சையிலை போலவேயாகும். ஆனால் ஆகாரமில்லாதவனுக்குக் கிழங்கே அறுசுவை யன்னமாகிறது.

கதை 20.

குளிர்காலத்தில் வேட்டையாடச் சென்றிருந்த அரசன் நெடுந்தூரத்தில் குடிசையொன்றைக் காணவே, அதில் போய் இரவைக் கழிக்கலாமென்றிருந்தான். "கேவலம் குடியானவனிடம்போய் தங்குவது நம்முடைய மரியாதைக்கே பங்கத்தை விளைவிக்கும். இவ்விடத்திலேயே டேராவைப் போட்டுக்கொண்டு இருக்கலாம்" என்றான் ஒருவன். இதை யறிந்த குடியானவன் தன்னால் இயன்ற அன்னாகாரம் முதலானவைகளைச் சமூகத்தில் சமர்ப்பித்துவிட்டு "ஏழையுடைய விடுதியைப் புனிதமாக்க இவர்கள் பிரியப்பட வில்லைபோலும்" என்று விண்ணப்பம் செய்துகொண்டான். இதைக் கேட்டவுடன் அரசன் அங்கேயே சென்று இரவைக் கழித்துவிட்டுக் காலையில் திரும்பும் பொழுது அவனுக்குக் கொஞ்சம் பொருளையும் ஆடைகளையும் அளித்தான். அவன் அரசன் கூடவே "ராஜமரியாதைக்கு எக்கேடும், எளியோனுடைய இல்லத்தை யடைந்ததினால் விளையவில்லை. ஆனால் ஏழைகளுடைய தலையோ ஆகாயமளாவ உயர்ந்துவிட்டது" என்று சொல்லிக்கொண்டே வந்தான்.

கதை 21.

கடுந்தபஸ்வியினிடம் அதிகப் பொருளிருந்தது. "உன்னிடம் அதிகச் செல்வமிருப்பதாக அறிகிறேன் எனக்கு அவசியமாகக்கொஞ்சம் தேவையாயிருப்பதினால், நீ கடன் அளிப்பாயேயானால் பணம்வந்தவுடன் திருப்பி அதைக்கொடுத்து விடுவேன்" என்று ஒரு அரசன் அவரைக்கேட்டான். "நான் பிச்சைக்காரன். கொஞ்சங் கொஞ்சமாகப் பிச்சையெடுத்துச் சேர்த்த திரவியம் இது. இராச்சியாதிபதிகளுக்கு என்னிடமிருந்து வாங்கிக் கொள்ளல் அழகல்ல" என்றான். "அதைப்பற்றிச் சிந்திக்காதே. ஏனெனில் நான் அதைத் தார்தர்களிடம் ஒப்படைத்து விடுகிறேன். அழுக்குப் பொருள்கள் பரிசுத்த மில்லாதவர்களுக்கே தகும். கிறிஸ்துவனின் கிணற்றுத் தண்ணீர் அசுத்தமா யிருந்தாலும் அதைக்கொண்டு யூதனுடைய சவத்தைக் கழுவுவதில் யாது சந்தேகம்." என்று அரசன் சொன்னான். இதை ஏற்றுக்கொள்ளாமல் தபஸ்வி சண்டை செய்யவே, தன்னதிகாரத்தைக் கொண்டு அவனிடமிருந்ததைப் பிடுங்கிக் கொள்ள ஆஞ்ஞாபித்தான். இன் சொற்களால் நடவாததைக் கடுமையாகவே நடத்திக் கொள்ளவேண்டும். தானாகவே தருவதற்குப் பிரியப்படாமல் போனால் தரும்படி செய்ய வேண்டும்.

கதை 22.

வியாபாரஞ்செய்ய சாமான் சுமைகளுடன் 150 ஒட்டகங்களையும், 50 அடிமைகள், வேலைக்காரர்கள் முதலிய பரிவாரங்க

ளுடன் வியாபாரியொருவன் "எனக்கு அவ்வூரில் பூஸ்திதி இவ்வளவு இருக்கின்றன. இவ்வூரில் இவ்வளவு இருக் கின்றன. அவைகளுடைய பத்திரங்களே இவைகள். நான்நல்ல காற்றையுடைய ———— பட்டிணத்திற் குப் போக விரும்புகிறேன். ————கடல் கொந்த ளிப்பு அதிகமாய் இருப்பதினுல் நான் போகப் பிரியப்பட வில்லை ஓ! ஸாதி!! நான் செய்யவேண்டிய யாத்திரை இன்னும் ஒன்றே உளது. அதாவது பாரசீக கற்க ளேச் சீனுவிற்குக் கொண்டுபோய் விற்கவேண்டும். சீனச் சமான்களைக் கிரீசில் விற்கவேண்டும். கிரீஸ்தேசச் சாமான் களை இந்தியாவிலும், இந்தியாவினுடையதை அலெப்போவி லும், அலெப்போவிலுள்ளதைப் பாரசீகத்திலும் விற்கவேண் டும். பின்னர் நான் வியாபாரத்தை விட்டுவிட்டு, அமைதி யுடன் ஓரிடத்தில் உட்காருவேன்" என்றான். அவனுடைய அறியாமையைப் பற்றி இவ்வளவு பேசிவிட்டுக் களிப்படைந்த வராய் "ஓ! ஸாதி!! தாங்கள் கேட்டதையும் பார்த்ததையும் பற்றி கொஞ்சம் கூறுங்கள்" என்றார். "பாலைவனத்தில் போய்க்கொண்டிருக்கும்பொழுது தலைவன் தன் ஒட்டகத் தின் மேலிருந்து கீழே விழவே உயிர்துறந்தான். பொருளா சையுள்ள மனிதனின் கண்கள் மனதினுலோ, சவக்குழி யின் மண்ணினுலோ ஆறுதலை யடைகிறது." என்றேன்.

கதை 23.

ஹாதீம்தாயின் தாராளத்திற்கு நேர் விரோதமான பிசி னறி ஒருவனிருந்தான். வெளிப்பார்வைக்கு மிகவும் பொரு ளுடையவனுயிருந்தும், ஒரு ரொட்டித் துண்டைக்கூடக் கொடுக்க மனமில்லாத அகத்தை உடையவனு யிருந்தான்.

நாயிக்கும் பூனைக்குங்கூட ஒரு எலும்பைக் கொடுத்தறியான். அவனுடைய சமயலறைத் திறக்கக் கண்டவர்கள் எவருமே கிடையாது. சமையல் வாசனையைத் தவிர வேறெவ்விதத்திலும் அவனுடைய ஆகாரத்தைக்கண்ட பிச்சைக்காரன் கிடையவே கிடையாது. பறவைகள் பொறுக்கும் வண்ணங்கூட அவன் எச்சிலை எறியான். தன்னை அரசனென நினைத்துக்கொண்டு மத்தியதரைக் கடலில் அவன் யாத்திரை செய்து கொண்டிருந்தான். அப்பொழுது எதிர்காற்று வீசவே இறைவனைப் போற்ற வாரம்பித்தான்.

இரந்துகேழ்க்கும்பொழுது கையை மடக்கிக்கொண்டவன், தனக்குத் தேவையானபொழுது கைகளைக் கூப்பி ஜபம்செய்வதில் யாது பிரயோஜனம்? தங்கம் வெள்ளியைக் கொண்டு பிறரைச் சுகமுள்ளவர்களாகச் செய். இந்நன்மையாகிற கட்டடம் வெகு நாள் நிற்குமாதலால் தங்கக்கல் வெள்ளிக்கல் ஆகியவைகளைக் கொண்டே அதைக்கட்டு.

கதை 24.

பலமுள்ள மீன் பலக்குறைவான ஒருவன் வலையில் அகப்பட்டுக்கொண்டவுடன், தப்பிப் போய்விட்டது. நதியிலிருந்து நீர் கொண்டுவரப்போனச் சிறுவனும் பிரவாகத்தில் அகப்பட்டுக்கொண்டு உயிர்துறந்தான். நாளது வரையில் வலையே மீன்களைப் பிடித்திருக்கிறது. இப்பொழுதோ வலையை அறுத்துக்கொண்டு அத்துடன் மீன் நழுவிப்போய் விட்டது. இத்தகைய மீன் கிடைத்தும் அதை விட்டுவிட்டவனைப்பார்த்து வேறொருவன் சொன்னதிற்கு அவன் சொன்னதாவது:—“நான் என்ன செய்யக் கூடும்? எனக்கு அதிருஷ்டமில்லையென அறிந்துகொள்ளவே மீன் தப்பியோடிவிட்டது.

அது இன்னும் சில நாள் இருக்கவேண்டி யிருக்கிறது. அதிருஷ்ட மில்லாதவனுக்கு மீனும் கிடைக்காது. விதியில்லாத மீன் காய்ந்த பூமியிலும் இறக்காது.''

கதை 25.

பயில்வான் பெரும் தரித்தரனாய் விட்டான். வயிற்றுக்கும் வழியற்றுப்போகவே தன் பலத்தைக்கொண்டு ஜீவனோபாயம் செய்யலாம் என்று எண்ணி வெளி தேசங்களுக்குப்போக அனுமதியளிக்கும்படி தன் தகப்பனைத்தேடி வந்தான். பலமும், பராக்கிரமும் வெளிப்பட்டாலொழிய பிரயோசனமேற்படாது. ''முடியாத வெண்ணங்களைக் கொள்ளாதே. உள்ளதைக்கொண்டு இன்பமாக வாழு. சரீர சிரமத்தினால் ஐசுவரியங்கள் சேராது. நம்முடைய ஆசைகளைக்கட்டுவதினாலேயே முடியும். பொருளைப் பலாத்காரத்தினால் அடைய முடியாது. இழந்த கண்களை அம்ருதத்தைக்கொண்டு தேய்ப்பதனால் யாதுபயன்? என்று பெரியோர்கள் சொல்லி யிருக்கிறார்கள். உன் தலைமயிர் ஒவ்வொன்றிற்கும் ஒரு நூறு யோக்கியதைகளிருந்தும், சமயம் வாராதவரையில் அவைகள் பயனற்றவைகளே. பலமிருந்தும் அதிருஷ்ட மற்றவன் யாதுசெய்யக்கூடும்? காயபலமுள்ள கையைக்காட்டிலும் அதிருஷ்ட பலமுள்ளகைகளே சிறந்தவை'' என்று தகப்பனார் சொன்னார். ''மனோல்லாசம், அதிசயங்களைக்காணல்; பெரும் விஷயங்களைக் கேட்டல்; பொருள்விருத்தி; ஒழுக்கம்; ஜீவனோபாயம்; நட்பைப்பெறல்; உலக அனுபவம்; இவைகளே உலகயாத்திரை யினாலுண்டாகும் நன்மைகள். வீட்டிலேயே இருப்பதினால் மனிதனாக மாட்டான். உலகத்தைவிட்டுப் பிரியுங்காலம் வருமுன் அதைச் சுற்றிப்பார்த்துவிடு'' என்றான் மகன். அதற்குத்

தகப்பன் கூறினதாவது. "நீ சொன்ன நன்மைகளெல்லாம் ஏற்படுகிறது உண்மையே. ஆனல் அது பின்வருபவர்களுக்கே நன்மையைத்தரும். (1) வியாபாரி.பணமும்,பெயரும்,அடிமைகளும், ஆட்களும் உள்ள வியாபாரி புது புது விடங்களுக்குச் சென்று இரவையும் பகலையும் கழிக்கலாம். எவ்விடத்திலும் தனக்குவேண்டிய சௌகரியங்களையும் பெறலாம். மலைகளிலும் காடுகளிலும் சரியே பணமுள்ளவன் அன்னியனாக மாட்டான். ஏனெனில் போகும் இடங்களெல்லாம் தன் கூடாரத்தைப் போட்டுக்கொண்டு பல வசதிகளை ஏற்படுத்திக்கொள்ளலாம். தன்னைத்தானே காப்பாற்றிகொள்ள வகையில்லாதவன் தன் சுதேசத்திலேயே அறியாதவனாகவும் அன்னியனாகவுமாகிறான். (2) வித்வான். இன்சொல், நாவன்மை, அகண்ட அறிவு இவைகளைக் கொண்டவன் சென்ற விடமெல்லாம் சிறப்பிக்கப் படுகின்றான். பத்தரை மாத்துத் தங்கத்தைப், படித்தவன் ஒத்திருக்கிறான். ஏனெனில் செல்லுமிடமெல்லாம் அவன் சிறப்பு தெரியும். சுதேசத்தில் ஏற்கப்பட்டு விதேசத்தில் தள்ளப்பட்ட தோல்காசையே படித்தவனுடைய மகனான மடையனும் ஒத்திருக்கிறான். (3) அழகு வாய்ந்தவன். தர்மாத்மாக்கள் அவனை விரும்புவார்கள். யாவரையும் கவர்ச்சிக்கும் சக்தி இவனிடம் உள்ளது. அதிகப் பொருளைக்காட்டிலும் கொஞ்சம் அழகேமேலென்று சொல்லுவதுமுண்டு. அழகுவாய்ந்தவன் எங்கிருந்தால்தானென்ன ? அழகுள்ள முத்து நத்தையின் வயிற்றிலிருப்பானேன். எவனும் அதைக் கொள்வான். (4) பாடகன். சாதாரணமாக எல்லோரையும் சிறப்பாக மதப் பற்றுடையவர்களையும் இழுத்துக் கொள்ள கூடிய சக்தியை யுடையவன் பாடகன். மலர்ந்த முகம் சரீர வின்பத்தை யளிக்கும். இனிய குரலோ

ஆத்மாவையே பெருமைப் படுத்தும். (5) கைவேலைக் காரன். அவனுக்குச் சென்ற விடமெல்லாம் வேலையுண்டு. அவனை யாவரும் கோருவார்கள்" என்று தகப்பன் சொன்னான். இவர்களுக்கே தேசசஞ்சாரத்தினால் பயனேற்படும். மற்றவர்கள் வீணெண்ணங் கொண்டவர்களே யாவார்கள். "வாழ்க்கைக்குத் தேவையான சுகங்களை யாவரும் ஒரே விதமாகவே அளிக்கப்பட்டிருக்கின்றனர். இருந்தாலும் அவனவன் அதைத் தேடிக் கொள்ளல்வேண்டும். நமக்கு அதிருஷ்டம் இல்லாமலிருந்தாலும் துரதிருஷ்ட வழியைத் தடுக்க முயலவேண்டும். தினச் சாப்பாட்டிற்குத் தேவையானது தானே வந்த பொழுதிலும் அதைத் தேடிச் செல்ல வேண்டும் என்றிருக்கிறது. தலைவிதியிருக்கப் பாம்பின் வாயில் அகப்பட்டுக் கொள்ளலாமா? இவ்விதம் பெரியார்கள் சொல்லக் கேட்டதில்லையா? நான் ஒரு மதயானையையும்சிங்கத்தையும் அடிக்க வலிமையுடையவனாயிருக்கிறேன். சஞ்சரிக்க ஆசையுமிருக்கிறது. மரியாதையற்று இருக்கப்பிடிக்கவில்லை. பேரும் புகழும் போய்விட்டால் வேறு எதற்காகத் தான் மனிதன் யோசிக்கவேண்டும்? தனவான் இரவில் தன் அரண்மனையை அடைகிறான். ஏழைக்கோ கிடைக்கும் இடமே அரண்மனையாகிறது" இவ்விதமாக மகன், கூறிவிட்டு விடை பெற்றுக்கொண்டு விலகிவிட்டான்.

"அதிருஷ்ட மில்லாத வேலைக்காரன் தன்னைத் தெரியாத நாட்டிற்குப் போகிறான்" என்று சொல்லக் கேட்டது. தன் அலைகளை மோதிக்கொண்டிருக்கிற நதிக்கரையை யடையும் வரையில் சுற்றினான். அவ்விடத்தில் அநேக பிரயாணிகளையும் ஒரு படகையும் கண்டான். தன்னிடம் பொருளில்லாத இச்சிறுவனைப் பார்த்து உன்னிடம் பணமில்லாததினால்

வரக்கூடாதென்றார்கள். தன் கோபத்தைத் தீர்த்துக் கொள்ள வேண்டி ''என் பேரிலுள்ள இத்துண்டை வேண்டுமானால் கொடுப்பேன்'' என்றான். படகுக்காரன் பேராசையுள்ளவனானபடியினால் அதைப் பெற்றுக் கொண்டான். பேராசையினால் புத்தியும் மழுங்கிப் போய்விடும். அதினாலேயே தானல்லவோ பறவைகளும் மீன்களும் வலைகளில் விழுந்து விடுகின்றன. படகுக்காரன் கையை நீட்டினவுடன் சிறுவன் அவனுடைய தாடியைப் பிடித்து இழுத்தான். இருவருக்கும் சண்டை பெருகவே படகிலுள்ளவர்கள் சொல்ல, கட்டணமில்லாமல் இவனை யேற்றிக்கொண்டுபோக உடன் பட்டான். கோப காலத்தில் சாந்தமாயிரு. சாந்தத்தினால் சண்டை யொழியும்.

இன் சொற்களாலும் சாந்தத்தினாலும், ஒரு மயிரிழையைக்கொண்டு யானையை நடத்தலாம். எல்லோருமாகப் பிரயாணம்செய்துகொண்டிருக்கையில் நதியின் நடுவில் பெரிய தூண் ஒன்றைக் கண்டார்கள். உடனே படகுக்காரன் ''படகு கஷ்டத்திலிருக்கிறது. உங்களில் பலமுள்ளவர் எவரேனும் தூணின் பேரில் ஏறி கயிற்றைப் பிடித்துக்கொண்டால் படகைக் காப்பாற்றலாம்'' என்றான். தன் தேகபலத்தின் கர்வத்தினால் இச்சிறுவன், கீழ்க்காணும் உண்மைகளைக் கூடக் கவனியாமல் கயிற்றைக் கையில் பிடித்துக்கொண்டு தூணின் பேரில் சென்றான். உடனே படகுக்காரன் கையிலிருந்த கயிற்றை இழுத்துக்கொண்டு அவனை அங்கேயே பரிதவிக்க விட்டு விட்டுப் போய் விட்டான். நீ குற்றஞ்செய்த ஒருவனுக்கு எவ்வளவு நன்மைகள் செய்தபோதிலும் அந்த ஒரு குற்றத்திற்காகப் பழிக்குப் பழிவாங்காமல் விடமாட்டான், புண்ணிலிருக்கும் அம்பை எடுத்துவிட்ட பொழுதிலும் மனதின் ஆத்

திரம் அடங்காது. ஒருவனைத் துன்பப்படுத்தி யிருந்தால் அது உன்னைப் பாதிக்காமல் விடாது. அதுவரையில் தப்பித்துக்கொண்டு விட்டோமென்று எண்ணாதே. துணி, அன்னுகாரம் இல்லாமலிருந்து தூக்க மயக்கத்தினுல் நதியில் விழவே கரையை யடைந்தான். கரையில் கந்தமூலபதாதிகளைத்தின்று கொண்டு வழிதெரியாமல் பரிதவித்து ஒட்டகக்காரர்களுடைய கூட்டம் ஒன்றை யடைந்தான். போய்ச் சேர்ந்த விடத்தில் இருந்த அன்னம் கேட்க, அவர்கள் பணங்கேட்டார்கள். பணம் இல்லாத இவன் அவர்களைப் பயமுறுத்தி அடித்தான். அவர்களும் இவனை நையப்புடைத்தார்கள். பலம் பராக்கிரமம் எல்லாமிருந்தும்எறும்புகளின்கூட்டம்யானையைத் தொந்திரவு செய்யும். சிங்கத்தின் தோலையும் தின்றுவிடும். அக்கூட்டத்தாருடன் கூடிக்கொண்டு பொழுதுசாய்ந்தவுடன் ஓரிடத்தில் தங்கினுன். அவ்விடத்தில் திருடர்களின் பயம் அதிகமாக விருந்தது., காவலிருக்கிறேன் என ஒத்துக்கொண்டான். கடும்பசியுடனிருந்தமையினுல் நன்றுய் சாப்பிட்டுக் குடித்தவுடன் தூங்கிவிட்டான். ஒரு வயோதிகரின் யோசனையின் பேரிலும், சத்துருவின் மோசத்தைக் காட்டிலும் நேசங் காட்டி மோசஞ் செய்வது பெருங் கஷ்டமானதென அறிந்ததின் பேரிலும், இச்சிறுவன் திருடனுகவே யிருப்பான் என ஊகித்துப் பயந்து அவனை இருந்த விடத்திலேயே விட்டு விட்டு எல்லோரும் போய்விட்டார்கள். எழுந்திருந்து ஒருவரையுங் காணுத சிறுவன் 'யாத்ரிகளுக்கு யாத்ரிகளே' துணை என்று சொல்லிக்கொண்டிருக்கும் பொழுது இராஜகுமாரன் அவ்விடம் வந்தான். இவன் வரலாற்றைக் கேட்டு மனவருத்தங் கொண்டு அவனுக்குத்தேர்தல் சொல்லி ஆட்களைக் கூட யனுப்பிக்க ஏற்பாடு செய்தான். தகப்ப

னிடம் வந்தவுடன் நடந்த சமாச்சாரத்தை யெல்லாம் சொன்னான்.

நான் போகும்பொழுதே ஐம்பது ராத்தல் பலத்தைக் காட்டிலும் தங்கத்துண்டே மேலானதென கூறவில்லையா என்றான்? அதற்குப் பிள்ளை "கஷ்டமில்லாமல் பொருள் கிடைப்பதரிது. உயிரைக் கொடுக்காமல் சத்துருவை ஜயிக்க முடியாது. நான் பட்ட துன்பங்களுக்கெல்லாம் அனுபவத்தைப் பெற்றேன். கடவுள் அளித்ததிற்குமேல் அனுபவிக்க முடியாமல் போன பொழுதிலும் அடையாததை அடைய முயற்சிக்கவேண்டும். முதலைக்குப் பயப்படுகிறவன் விலையுயர்ந்த நவரத்னங்களை யடைய முடியாது. இயந்திரத்தின் அடிப்பாதி அசையாததினாலேயே பெருங்கனமுள்ளதாயிருக்கிறது. அடங்காத சிங்கத்தின் குகையிலே என்ன ஆகாரங் கிடைக்கும்? வீட்டிலேயே அன்னமும் ஆகாரமும் வருமென்று எதிர்ப்பார்த்துக்கொண்டிருப்பாயே யானால் கைகளும் கால்களும் சிலந்திடையுதைப்போல் மெலிந்து விடும்" என்றான். இதற்குப்பதில் தகப்பன் சொன்னதாவது "குழந்தாய், இச்சமயம் கடவுள் உனக்குத் துணையாக நின்றார். முள்ளிலிருந்து ரோஜாவையும், காலிலிருந்து முள்ளையும் எடுத்து விட்டாய்; எப்பொழுதும் இவ்விதமே வாய்க்காது. வேட்டைக்குச் செல்லுகிறவன் தானே ஜயித்தாலும் ஜயிப்பான்; அல்லது இரையாகி விட்டாலும் விட நேரிடும். ஆயிரம் பெயர்களால் அடிக்க முடியாத பாணத்தை அற்பற் பையன் எதேச்சையாய் அடித்து விடுவான் !!"

திருப்தியின்பம் முற்றிற்று.

காதலும் இளமையும்

அத்தியாயம் 5.

கதை 1.

அன்பிற் சிறந்த நண்பனை வாயிற்படியில் கண்டவுடன் அவனை வரவேற்க வெகு அவசரத்துடன் எழுந்தேன். அக்கால் என் கைச்சட்டையின் காற்றினால் சமீபத்திலிருந்த விளக்கு அணைந்தது. அவ்விருட்டில் கோடி சூரியப்பிரகாசத்தையொத்த ஒளி ஒன்று வீசியது. ஒளியினால் ஏற்பட்ட பேரானந்தத்தில் அமிழ்ந்திருந்தேன். அவரைக் கண்டவுடன் நான் விளக்கை நிறுத்திவிட்டேனென்று குறை கூறவே நான் சொன்னதாவது "சூரியோதயம் என நினைத்தேன். பெரியோர்கள் கூறியுள்ளதுபோல விளக்கின் முன் நிற்பவன் அவலக்ஷணமாயிருந்தால் அவமானப்படுத்து. புன்முறுவலுடனும் இந்து வதனங்களுடனுமிருந்தால் விளக்கை அணைத்து அவனைப்பிடித்துக் கொள்".

கதை 2.

"நான் உன்னைக் காண அலைந்து கொண்டிருக்கிறேன் நீ எங்கே போயிருந்தாய்?" என்று வெகு காலமாய்க் காணாத நண்பனை ஒருவர் கேட்டபொழுது அவர் சொன்னதாவது: "எக்காலமும் மனைவியுடன் கலந்திருப்பதின் பயனாகக் மனக்கசப்பு ஏற்படுவதைவிட விலகியிருப்பதே சிறந்தது. அப்பொழுது கசப்பு ஏற்படாது. கணப்பொழுதேனும் என் காதலியை விரோதிகளுடன் கண்டால்கூட நான் இற

பேன் என்றபொழுது அவர் சொன்னதாவது "ஏ! ஸா-அதி சபையின் ஒளி நான். புழு தன்னைத் தானே மாய்த்துக் கொண்டால் நான் என்ன செய்யலாம்.''?

கதை 3.

சிறிதுநேரமேனும் விட்டுப் பிரியாமல் ஒரு நண்பனோடு பூவுடன் கூடின மணமே போலிருந்தேன். திடீரென்று வெளியிற் போய்ப்பிரிந்து திரும்பிவந்த பின்னர் "ஒரு தூத னைக்கூட அனுப்பாமல் இருந்ததிற்கு'' என்னுடன் சினங் கொண்டான். அதற்கு நான் சொன்னதாவது "நான் அனு பவியாமலிருக்க என்னுடைய தூதன் உன் முகத்தைக்கண்டு மகிழ்ந்திருக்கச் சகியேன். உன்னை எவனும் கண்ணுறக் காண நான் மனந்துணியேன். உன்னைக் கண்டுத் திருப்தி யடைகிறவர்களு முண்டோ?''

கதை 4.

துடுக்கான போக்கையுங்கூட கவனியாமல் ஒருவ னுடைய மாய வலையில் அறிஞர் ஒருவர் அகப்பட்டுக் கொண்டிருந்தார். இதையறிந்தொருவன் சொன்னதாவது "நீங்கள் அவனை நேசிப்பதில் குற்றமொன்றுமில்லை. ஆனால் அம்முரடனுடைய பிடிவாதங்களையும் கூட கவனியாமலிருப் பது விந்தையே''"இதற்கு அறிஞர் சொன்னார்''.என் விதியை வையாதே. இதைப்பற்றி பலமுறை யோசித்ததுண்டு. அவனைவிட்டு விலகுவதைக்காட்டிலும் அவனுடனிருப்பதே சுலபமானதென்று தோன்றிற்று. மனதைக்கவர்ந்த பொரு ளிடம் கவனத்தைச் செலுத்த மறுப்பதைவிட அதனிடம் ஆசை வைப்பதே ஏற்றதென்று பெரியோர்கள் கூறியிருக்

கிறார்கள். மனதைக் கொடுத்தவர்கள் தன்தாடியைப் பிற ரிடம் ஒப்புவித்தவர்களாவார்கள். உன் ஆசைப் பொருள் ஹிம்சை செய்தால் கூட பொறுத்துக் கொண்டிருக்க வேண்டியதே. கழுத்தைச்சுற்றி கயறுள்ள மான் கண்ட விடங்களில் அலையமுடியுமோ? தன் மனதைக்கவர்ந்த பொருளிலிருந்து காதலன் தனியாக யிருக்கமுடியாது. நான் அவளிடம் என் மனதைச் செலுத்திவிட்டேன். விருப்பத்துடன் அவள் ஏற்றுக்கொண்டாலும் சரி; அல்லது வெறுப்புடன் தள்ளி விட்டாலும் சரி;

கதை 5.

எனது சிறு பிராயத்தில் ஒருவனுடன் நான் நட்புக் கொண்டேன். அவன் நல்ல சரீர அமைப்பைக் கொண்டவன். அவனிடமுள்ள ஒரு குணம் எனக்குப் பிடிக்காமல் போகவே "தொலைந்துபோ" என்று கூறி அவனைவிட்டு விலகலானேன். அதற்கு அவன் மறுமொழியாக "சூரியனுடனிருக்க வெளவாலிற்கு மனமில்லையானல், அதனுடைய வெளிச்சமா கெட்டுப்போகும்?" என்று சொன்னான். அவன் பிரிந்ததின் காரணமாகப் பெரிதும் வருந்தினேன். கூடிக் குலவவும் அவகாசமில்லாமற் போய்விட்டது. மரத்தின் நிழல் வெய்யிலில் போனால் தான் தெரியும். உன்னைக் காணாமல் உயிர் வாழ்வதைவிட உன்னைக்கண்டு உயிர் துறப்பது மேலாகையினால் திரும்பவும் அவனுடன் பழக எண்ணினேன். அவனும் சிலகாலம் கழித்து திரும்பிவந்தான். தாவீதின் குரலோசை, ஜோசப்பின் அழகு, இவைகளை இழந்திருந்தான். மோவாய் நிறைய புழுதியடைந்திருந்தது. நான் அவனைக் கட்டியழைப்பேன் என்று எண்ணினான். அப்பொழுது

நான் சற்று விலகிப்போய் சொன்னதாவது "இளமையில் மலர்ந்து கொண்டிருக்குங்கால், உன்னை நேசித்தவர்களைப் புறக்கணித்தாய். மனிதப்பிராயத்தையடைந்த இப்பொ பொழுது அமைதியுடன் வருகிறாய். வசந்த காலம் மாறி விட்டது. எங்களுடைய அடுப்பில் நெருப்பு இல்லை யாகை யினால் உன் உலையை அதன்மேல் வைக்காதே. எவ்வளவு நாள்தான் கர்வமும் மோகமும் நிற்கும்? உன் சக்தி குறைந் திருப்பதை யறிந்து, வேண்டியவர்களிடம் செல்லுவாயாக.

புள்ளிமானைப்போல் சென்று மறுவுள்ள சிறுத்தையைப் போல் திரும்பி யிருக்கிறாய். ஸா-அதி விரும்புவது இள மையே; ஊசிக் கட்டைப்போன்ற ரோமங்களல்ல. தாடியை வளரவிட்டாலும் சரி, வெட்டி விட்டாலும் சரி இளமைக் காலம் மாறிவிட்டது."உன் முகத்தின் அழகு என்னவாயது" என்று நான் கேட்டதற்கு அவன் சிரித்துக்கொண்டு சொன் னதாவது "இழந்த இளமைக்கு வருந்துகிறேன் என்ப தைத்தவிர வேறொன்றையும் நானறியேன்" என்றான்.

கதை 6.

இளம்பிராயமுள்ளவர்களைப்பற்றி பாக்தாத் வாசிகளை அபிப்ராயம் கேட்டபொழுது அவர்கள் சொன்னதாவது "இளமையுடனிருப்பதினால் விரும்பக்கூடியதொன்றும் அவர் களிடம் காணப்படுவதற்கில்லை. ஏனெனில் அப்பொழுது தான் இறுமாப்புடனிருக்கிறார்கள். இளமை மாறுங்கால் அடக்கத்துடனிருக்கிறார்கள். முகம் மழுமழுப்புடனிருக்கும் வரையில் கடுஞ் சொற்களும், கடின சித்தமுமே காணப் படுகின்றன. தாடி வளருங்கால் தயையும் தாட்சிண்யமும் வெளிப்படுகின்றன.

கதை 7.

"தனித்தவிடம், அழகியமாது, மூடினகதவு, உறங்கும் விரோதி, பழுத்தபேரிச்சை, இவைகளுடன் கூடினவனைக் கற்பு காக்குமா?" வென்று அறிஞரைக் கேட்டபொழுது அவர் சொன்னதாவது "அழகிய மாதினிடமிருந்து தப்பினும் அபவாதக் காரர்களிடமிருந்து தப்பமாட்டான்." காம வேகத்தை யடக்காமற் போனால் சந்தேக உலகம் தூற்றும். ஒரு சமயம் அவ்வேகத்தை அடக்கிடினும் அடக்கலாம்; மனிதர்களுடைய நாக்கை அடக்கமுடியாது.

கதை 8.

ஒருவன் காக்கையையும் நரியையும் ஒரே, கூட்டில் அடைத்து வைத்தான். நரி, காக்கையைப் பார்த்துக் கூறியதாவது:—"நீ குரூபி. நீயும் நானும் விலகியிருப்பதே மேல். உன் முகத்தில் விழிப்பவர்களுக்கு அருணோதயம் அஸ்தமனமாய்விடும். உன்னுடன் என்னையும் சேர்த்துவிட்டார்களே. உனக்குச் சரியானவன் உலகிலும் இருக்கிறானோ?" காக்கையும் இவ்வாறே நரியைத் தூஷித்தது. "என்ன துரதிர்ஷ்டம், என்ன காலப்போக்கு; இன்னுமொரு காக்கையுடன் நானிருக்க வேண்டியதுபோக இவ்விதமிருக்கலாயிற்றே. தூர்த்தர்களுடன் சேர்த்துவைப்பதே சாதுக்களுக்குப் போதுமான தண்டனை. இவ்வித மதிகெட்ட தற்புகழ்ச்சிக் காரனுடன் சேர்ந்திருக்க நான் என்ன பாபம் செய்தேனோ. உன் சித்திரம் தீட்டப்பட்டுள்ள சுவரைக்கூட எவனும் பார்க்கமாட்டான். உன்னைச் சுவர்க்கத்தில் அனுப்பிவிட்டால், அங்கிருப்பவர்கள் நரகத்தைத்தான் கோருவார்கள்" என்று காக்கைப்

பலவாருகச்சொல்லிற்று. அறிஞர்கள் எவ்வளவு தூரம் மடையர்களைப் புறக்கணிக்கிருர்களோ, அதைவிட ஆயிரம் தடவையதிகமாக அவர்கள் அறிஞர்களுடைய சேர்க்கையை வெறுக்கிருர்கள் என்பதைக் காட்டவே இதைச் சொன்னேம்.

கதை 9.

அழகிற் சிறந்த மனைவியை யிழந்தவனுடன் மாமியார் வந்து வாழ வாரம்பித்தாள். அவளை இவனுக்குப் பிடிக்காமலிருந்த பொழுதிலும், ஸ்திரீதனத்தைத் திருப்பிக் கொடுக்கச் சக்தியற்றிருந்தபடியினுல் பொறுத்துக்கொண்டிருந்தான். மனைவியை யிழந்த பின்னர் எவ்வித மிருக்கிருனென்று தனது நன்பன் கேட்டதிற்கு அவன் சொன்னதாவது ''என் மனைவி மடிந்த துக்கத்தை விட எனக்கு இவளைக் காணும் போது ஏற்படும் துக்கம் பெரியதாயிருக்கிறது. மலர் மடிந்தது; முள்ளோ விருக்கிறது. பொக்கிஷமோ போய் விட்டது; பாம்போ போகவில்லை. சத்துரு முகத்தைக் காண்பதை விட ஈட்டியில் கண்ணைக்குத்துவது மேலானது. ஆயிரம் சிநேகிதர்களை யிழக்கலாம். ஆனுல் ஒரு சத்துருவுடன் இருத்தல் முடியாது''

கதை 10.

கதிரவன் கொடுமையினுல் நா உலர்ந்து உஷ்ணக் காற்றினுல் உடம்பு வெடித்துக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்குங்கால், யாரேனும் ஒரு கோப்பை ஜலங் கொடுப்பார்களாவென்றெண்ணி சுவரின் நிழலில் தங்கினேன். திடீரென்று சொல்லுவதற்கியலாத சகல சௌந்தரிய லக்ஷணங்களுடன் கூடின மாது ஒருத்தி கையில் ஏந்திய கோப்பையுடன்

காணப் பட்டாள். கோப்பையில் இருந்தது பன்னீரோ, அல்லது அவளுடைய கன்னங்களிலிருந்து வழிந்த இன்பத் தண்ணீரோ வென்று நானறியேன். உடனே அதை வாங்கினேன். குடித்தவுடன் களைப்புத் தீர்ந்தது. ஆனால் எனக்கிருந்த அக் களைப்பு அச்சிறு கோப்பையிலிருந்த தண்ணீரினால் தீரக்கூடிய தல்ல. ஆறுகளே பெருகி வந்திருந்தாலும் போதாமலே யிருந்திருக்கும். இவ்வித உருவத்தைத் தினந்தோறும் காணும் பாக்கியம் பெற்றவனே மனிதன். மதுமயக்கம் மறுதினம் காலையில் நீங்கிவிடும், கோப்பைக் காரியின் மயக்கமோ தீர்ப்புதினம் வரையில் தீராது.

கதை 11.

காஷ்கூர் மசூதியில் ஒப்புயர்வற்ற அழகுடன் பிரகாசித்துக் கொண்டிருந்த ஒரு சிறுவனைக் கண்டேன். என்னை அவன் முதலில் அறிய முடிய வில்லை. பின்னர் ஸா-அதி என்று தெரிய வந்தவுடன் சின்னாள் என்னைத் தன் கூட வனிருக்கக் கூடாதென்று வினவியதற்கு நான் சொன்னதாவது "கீழ் கண்ட இக்காரணத்தினால் முடியாதென்றேன். ஊர்க்குப் புறம்பே, ஒருஞானி குகையிலிருந்தார். மனதின் கவலையைப் போக்க என் அடிக்கடி ஊருக்கு வரக் கூடாதென்று கேட்ட பொழுது அவர் சொன்னதாவது 'அங்கே அநேகம் சுந்தரப் பொருள்களிருக்கின்றன. களிமண்ணில் யானைக்கும் அடி அகன்றுவிடும். ! !

கதை 12.

வியாபாரக் கூட்டத்துடன் பக்கிரி யொருவரிருந்தார். திருடர்கள் வியாபாரி களுடையை யாவற்றையும் கொள்ளை யடித்

துக்கொண்டு போகவே பக்கிரி மாத்திரம் துக்கப்படாமலிருந்தார். "உங்களுடைய பொருள் கொள்ளை யடிக்கப் படவில்லையா" என்று கேட்டதிற்கு அவர் சொன்னதாவது "பிரிந்து போகுங்கால் பெரிதும் வருந்த வேண்டிய அளவு நான் எப்பொருளிலும் ஆசை வைப்பதில்லை." இதைக் கேட்டதும் நீர் சொலவது எனக்கு முற்றிலும் ஏற்கும் என்றேன். சிறுவன் ஒருவனை நேசித்தேன். அவன் அழகு என் கண்களுக்குக் கிப்ளா வாயிருந்தது. அவனிறந்த பின்னர் மிகவும்துக்கப்பட்டேன்.சவம் அடக்கம் பண்ணப்பட்ட விடத்தின் பக்கத்தில் வெகு நாள் உட்கார்திருந்தேன். அவனிறந்த பொழுதே நானும்மடிந்திருந்ததால் நன்றாயிருக்குமேவென்று அலறினேன். காலத்தின் கோலத்தினால் அவன் முகமாகிற ரோஜாக்களும் புஷ்பங்களும் சிதறிப்போய் அதனிடத்தில் முட்களும் புதர்களும் முளைத்திருக்கின்றன. இதன் பின்னர் இன்பமாகிய படுக்கையை மடித்து வைத்து விட்டு சும்மாயிருக்க வேண்டுமென நிச்சயஞ் செய்து விட்டேன். அலையின் பயமல்லாமற் போனால் சமுத்திரத்தைத் தோண்டிப் பார்க்கலாம். முள்ளின் பயமில்லாமற் போனால்ரோஜாவைக் கொய்யலாம். சமூகமாகியத் தோட்டத்தில் நான் நேற்று மயிலைப்போல் நடந்தேன். இன்று என் சிநேகிதன் இல்லாத குறையினால் பாம்பைப் போல் பதுங்குகிறேன்.

கதை 13.

நல்லகுணம் உருவம் இவைகளுடன் கூடியிருந்த லைலா மன்ஜூன் ஊரைவிட்டு அப்புறம் போயிருந்தார். ஜனங்களை விட்டுத் தனியாய் இருப்பதற்கு யாது காரணமென்று கேட்டதிற்கு அவர் சொன்னதாவது "நான் லைலாவைக் காதலிப்ப

தற்கு நண்பர்கள் குறை கூறுகிறார்கள். அதை நான் சகிக்க முடியவில்லை.'' அரசன் அவளை வரவழித்துக்காண விரும்பின வனாயிருந்தமையினால் அவளையும் கொண்டு வந்தார்கள். அரசன் அவளைக் கறுத்த விகார உருவத்துடன் கூடினவள் என நினைத்தான். இதை யறிந்த மஜ்னூன் சொன்னதாவது "மஜ்னூனின் கண்களைக் கொண்டு லைலாவைக் காணவேண்டும். என் துன்பத்தை அநுபவியாதவர்களுக்கு அதைப் பற்றிக்கூறி யாதுபயன்? தேனீயின் கடியைக் காணாதவனுக்கு அதன் கூண்டைப்பற்றி என்ன சொல்லமுடியும்? என் கஷ்டங்களைப் பிறர் கஷ்டங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்காதேயுங்கள்.

கதை 14.

காஜியொருவர் குடியானவனின் பெண் ஒருத்தியைக் காதலித்திருந்தார். பழுக்கக் காய்ச்சின குதிரை லாடத்தைப் போல் அவருடைய மனம் உருகியிருந்தது. அவளைச் சேரப் பலவழியில் பாடுபட்டுக் கொண்டிருந்தார். இதையறிந்த அப் பெண் காஜியை மானபங்கம் பண்ண வெண்ணி ஒரு கல்லை விட்டெறிந்தாள். அப்போது காஜி சொல்லுவர் "அவ்விள நங்கையைப் பாருங்கள்; என்ன முரட்டுத் தனமாய் நடக்கிறாள். நாம் காதலிக்கும் கைகளிலிருந்து வரும் அடிகள் பழத்தைப் போன்றவைகள் என்று அரபுவில் சொல்லுவதுண்டு.

தன் கைகளைக் கொண்டு ரொட்டி சாப்பிடுவதைக் காட்டிலும் உன் கையைக் கொண்டு வாயில் அடிக்கச்சொல்லுவது மேலல்லவா? பழம் புளிக்கலாம். ஆனால் இரண்டு மூன்று நாள்களாய் விட்டால் பழுத்துவிடும்.'' இவ்விதமாகச் சொல்லி விட்டு அவர் போய்விட்டார். அப்பொழுது சில சேவகர்கள்

காஜியிடம் சொன்னதாவது "நாங்கள் சொல்லுவது ஏற்ற தாயில்லாமலிருந்தாலும் மன்னிக்க வேண்டும். பெரியோர்களுடைய குறைகளைக் கூறுவது குற்றமாகும். இருந்தாலும் தர்ம வழியிலிருக்கும் நீங்கள் இவ்வெண்ணத்தை வெல்ல வேண்டும் என்று சொல்லத்துணிகிறோம். நீங்கள் இத்தீய காரியத்தினால் காஜி தர்மத்தைப் பழுதுள்ளதாகச் செய்து விடாதீர்கள். தன் மதிப்பு கெட்டவருக்குப் பிறருடைய மதிப்பைப் பற்றி எண்ணவேண்டிய அவசியமென்ன?" இதைக்கேட்டு அவர்களுடைய பேச்சை மெச்சிவிட்டு காஜி "கறுப்பு வெள்ளையாகாது" என்று சொல்லி அவ்விதம் நடக்க மறுத்து விட்டார், ஓர் இரவு பெண்ணுடன் சேர்ந்து விட்டார். இராப்பொழுதைக் கழித்த பின்னர் "நேரமாய் விட்டது எழுந்திருங்கள். இந்நெருப்பு, பொறியாயிருக்கையிலேயே நன்னடத்தையாகிற தண்ணீரைக் கொண்டு அணைத்து விடுங்கள். தீப்பொறி ஊரில் பரவி விட்டால் நெருப்பை யணைக்க முடியாது" என்று சில சேவகர்கள்சொன்னார்கள். சிங்கத்தின்வசம் இறையிருக்கையில் நாயிக்குப் பயப்படுவானேன் என்று காஜி சொல்லி விட்டார். அரசனுக்குச் சமாச்சாரம் தெரிய வந்தது. காஜியைப்பற்றி நல்லபிப்பிராயங்கொண் டிருந்தமையினால் தான் கண்ணால் கண்ட பின்னரே முடிவுகூற வேண்டும் என்று காஜியும் பெண்ணும் இருக்குமிடத்திற்கு வந்தார். வந்து சூரியோதயம் ஆய்விட்டது எழுந்திரும் என்றார். எப்பக்கத்திலிருந்து என்று காஜி கேழ்க்கவே கிழக்கிலிருந்து என்றார். சூரியன் மேற்கிலிருந்து உதயம் ஆகும் வரை மன்னிப்பு கேழ்க்க நாள்களுண்டு என்று சொல்லி அரசனுடைய ஆஞ்ஞையைக்கீழ்ப்படிய மறுத்துவிட்டார். அரசனும் விளக்கு எரிவதையும், பெண் பக்கத்திலிருப்பதையும் சீசாக்கள் உடைந்

திருப்பதையும், காஜியின் மயக்கத்தையும் பார்த்து உண்மையை ஊகித்துக்கொண்டு காஜிக்குத் தண்டனையை யளித்து விட்டார். அப்பொழுது காஜி "நான் செய்த தப்பு மன்னிக்கக்கூடாதது. ஆனாலும் உங்களுடைய தயாளத்தில் எனக்கு நம்பிக்கையுண்டு" என்றார். "நீ சொல்லுவது உண்மையான பொழுதிலும் நீதி வழுவக்கூடாது. மற்றவர்களுக்கும் ஒரு உதாரணமாக வேண்டி உன்னை மலையுச்சியிலிருந்து உருட்டி விடவேண்டும்" என்றார் அரசர். அதற்குக்காஜி சொன்னதாவது "மண்டலாதிபதியே - நான் வளர்ந்தது உங்களுடைய குடும்பத்திலேயே. இக்குற்றத்தில் தனியாக விருப்பவன் நான் மாத்திரமல்ல. எனவே வேறு யாரையாவது உருட்டி விடுவீர்களேயானால் நான் அதனால் பயனடைவேன்" என்றார். இதைக்கேட்ட அரசன் " உங்களிலொவ்வொருவருக்கும் ஒவ்வொரு குற்றங்குறையுளது. பிறரைப்பார்த்து குறை கூறத்தேவையில்லை. தன்குற்றங்களை யறிபவன் பிறருடைய குறைகளைக் கவனிக்கமாட்டன்" என்று சொல்லி அவரை விடுதலை செய்துவிட்டான்.

கதை 15.

காதலன் காதலி இருவர் கப்பல் பிரயாணம் செய்துகொண்டிருக்கையில் சுழலிலகப்பட்டுக்கொண்டு திண்டாடினார்கள். அப்பொழுது மாலுமியொருவன் சிறுவனைத் தூக்கிவிட முயன்றான். அப்பொழுது அவன் உரத்த குரலுடன் "என்னை விட்டு என் காதலியைக் காப்பாற்றுங்கள்" என்றான். உலகம் அவனை அதற்குப் புகழ்ந்தது. அவனிறக்குந்தருவாயில் சொன்னதாவது " காதற் கதையை, கஷ்டத்தில் காட்டிக்கொடுக்கும் கடின சித்தர்களிடமிருந்து, படியாதே"

யுங்கள்' என்றான். இவ்விதமாகக் காதலரிருவர்கள் உயிர் நீத்தனர்.

காதலும் இளமையும் முற்றிற்று.

தள்ளாமையும் மூப்பும்

அத்தியாயம் 6.

கதை 1.

இறக்குந் தருவாயில் ஒருவர் சொன்னதாவது "மீதி நாளைச் சௌகரியமாகக் கழிக்கலா மென்றிருந்தேன். ஆனால் மூச்சிற்கே கஷ்டம் வந்துவிட்டது. வாணாளாகிற விருந்தில் நான் சாப்பிட்டது மிகச்சிலதே. அதற்குள்ளேயேபோதும் என்றுவிட்டார்கள்" இத்தள்ளாத காலத்தில் உலக வாழ்க்கைக்கு ஆசைப்படுவதைக்கேட்டு ஆச்சரியப் பட்டார்கள். எவ்விதம் இருக்கிறாய் என்றதற்கு அவர் சொன்னதாவது "பல்லைப்பிடுங்கும் பொழுது துன்பப் படுகிறவனை நீ பார்த்ததில்லையா? இச்சரீரத்தை விட்டு ஆத்மா அகலும் பொழுது எவ்விதமாகத்தான் இராது." அப்பொழுது நான் சொன்னதாவது "இறப்போம் என்னும் எண்ணத்தை விட்டுவிடு. கிலிப்பிடித்து விட்டால் கஷ்டமாகும். மிருகபலம் இருந்தாலும் அது தாங்கும் என்றும் வியாதி அதிகமாயிருந்தாலும் அது கேடாய் முடியுமென்றும் நம்புவதற்கில்லை. எனக்கு உத்தரவளித்தால் வியாதி தீரவேண்டி வைத்தியனை அழைத்து வருவேன்" என்றான். அப்போது

அவர் சொன்னதாவது "அஸ்திவாரம் அசைந்துகொண்டும் அழிந்துகொண்டுமிருக்க வீட்டுக்காரன், கூடத்து அலங்காரத்தைப்பற்றி நினைப்பது போலாகும். குடத்தைப்போல் உடையும்பொழுது வைத்தியர்கள் கைகட்டி பதைக்கவேண்டியதே. வியாதிக்காரன் வருந்திக் கொண்டிருக்கக் கிழவி அவன் காலில் சந்தனத் தைலத்தை தடவுவது போலாகும். மிருக பலம் போய்விட்டால் மருந்தாலும் தாழ்த்தாலும் யாது பயன்?"

கதை 2.

கிழவன் தன் கதையைக் கூறும்பொழுது சொன்னதாவது:—நான் இளமங்கையை மணந்தபொழுது புஷ்பக்கட்டில் பூட்டி அவளுடன் தனித்து உட்கார்ந்து கொண்டு அவளையே கவனித்துக் கொண்டிருந்தேன். அவளுடைய கூச்சத்தைத் தெளிய வைக்கவேண்டி விளையாட்டுப் பேச்சு பேசுவேன். ஒரு இரவு நான் சொன்னதாவது "உலக அறிவு, நன்மை தீமைகளின் யனுபவம், சமுக பழக்கவழக்கங்களின்ஞானம்,சிநேகப் பான்மை, பிரியம்,சீலம், சந்தோஷம், முதிர்ந்த அனுபவம் இவைகளைக் கொண்ட ஒரு கிழவனுக்கு நீ வாழ்க்கைப்பட்டது உன் அதிருஷ்டமே. உன்னைத் திருப்தி செய்ய பெரும்பாடு படுவேன். நீ சினங்கொண்டாலும் நான் மாறமாட்டேன்; உன் நட்பைப்பெற வேண்டியாது வேண்டினும் தருவேன். முரட்டு குணம், முதிராத அறிவு, குறைந்த ஞானம், கடுங்கோபம். மனம்போன எண்ணம், மாறுதல், புதுப்பது விடங்களில் இரவைக்கழித்தல், இவைகளைக்கொண்ட சிறியவனை நீ யடையாமற் போனது சிறந்தது. இளம்பிள்ளைகள் அழகாயும் சுறுசுறுப்பாயு மிருக்க

லாம். ஆனால் பற்றுதலற்றவர்கள். குயிலைப்போல் கிளைக் குக் கிளைக்குப்பாடும் அவர்களிடமிருந்து விசுவாசத்தை எதிர் பாராதே. கிழவர்கள் அறிவிலேயும் நன்னடத்தையிலேயும் காலத்தைக் கழிப்பவர்கள். இளமைப்பருவ அறிவீனத்தில் அகப்பட்டுக் கொள்ளுபவர்களல்ல. இவ்விதமாக என் பேச் சில் அவள் மயங்கிவிட்டாளென வெண்ணியிருந்தேன். ஆனால் அவளோ இங்ஙனம் மறுமொழிதந்தாள் "கிழவனுடன் கூடி வாழ்வதாலேற்படும் துயரத்தைக் காட்டிலும் அன்பினால் ஏற் படும் துயரம் துயரமாகாது என்று என் தாதி எனக்குச் சொன்ன இந்த ஒருவார்த்தைக்கு உன் பேச்செல்லாம் ஈடாகாது." என்னை அவளுக்குப் பிடிக்கவில்லை. கடைசி யில் பிரிந்தோம். சின்னாள் சென்றபின்னர் அநுபவக் குறைவானவும் கடுங்கோபமுமுள்ள ஒரு வாலிபனை மணந் தாள். வறுமையினின்றும் வருந்தினாள். இருந்தும் அவள் கடவுளைப்போற்றி வாழ்த்தினதாவது "அந்நரகத்திலிருந்து இச்சுவர்க்கத்தை யடைந்ததிற்கு உன்னைப் போற்றுகிறேன். உன் குற்றங் குறைகளைக் கவனியாம விருப்பேன். ஏனெ னில் சௌந்தர்ய முள்ளவனா யிருக்கிறாய். அவனுடன் கூடி சுவர்க்கத்தில் வாழுவதைக் காட்டிலும் உன்னுடன்கூடி நரகத் தில் எரிந்துபோவதே சிறந்தது. குரூபியின் கையிலிருக் கும் ரோஜா வாசனையைவிட அழகான கையிலிருந்துவரும் வெங்காய வாசனையே மேல்."

கதை 3.

தியா பக்ரத்தில் ஒரு தனவந்தரிருந்தார். அவருக்கு ஒரு மகனிருந்தான். அவர் சொல்லுவார் "உனக்கு இவன் ஒரு பிள்ளையே. இதற்கருகாமையில் ஒரு புனித மாமிருக்

கிறது. மக்கட் பேறுக்காக ஜனங்கள் அங்கு சென்று அதை வணங்குவார்கள். நான் அவ்விதம் செய்ததின் பய னுகவே இவன் ஜனித்தான்.'' அவருடைய மகன் மெதுவாகச் சொல்லுவான் "தன் தகப்பன் இறக்கவேண்டி அம்மரம் அங்கு வளருகிறதென்று அறிய நான் எத்துணை சந்தோஷ முள்ளவனுக விருப்பேன்''. பிள்ளையின் புத்திக்குத்தகப்பன் சந்தோஷப் பட்டுக் கொண்டிருந்தார். மகனே தகப்பனு டைய தள்ளாமையைப் பற்றி மகிழ்ந்து கொண்டிருந்தான். உன் தகப்பன் சிராத்த தினத்தை நினைத்து வெகு நாளாச் சுது. உன் மக்கள் உன்னிடம் அன்புகாட்ட நீ உன் பெற் றோர்களிடம் என்ன பக்தியுட னிருந்தாய்.

கதை 4.

இளமைப் பருவத்தில் வெகுதூரம் பிரயாணம் செய்ததின் பயனுகக் களைப்படைந்து மாலைப்பொழுதில் மலையடியை யடைந்தேன். தள்ளாத கிழவன் அங்குவந்து சொன்ன தாவது "என் இங்கு தூங்குகிறுய். எழுந்திரு; தூங்கு வதற்கு இதுவல்ல இடம்''. கால்கள் ஓய்ந்திருக்கிறதே என் னல் எவ்விதம் போகமுடியும் என்றேன். அதற்கு மறு மொழியாக அவர் சென்னதாவது "ஓடி அதன் பயனுகக் களைப்படைந்து போவதைக் காட்டிலும் நின்று நிதானித் துப் போவது நல்லதென்று நீ கேட்டதில்லையா? தினப் பிர யாணத்தை முடிக்க விரும்புகிறவனே! அவசரப் படாதே. நான் கூறுவதைக் கேட்டு பொறுமையுடனிரு. ஒரே மூச் சில் அரபிக் குதிரை இரண்டு அடிகளைத் தாண்டும். ஒட் டகமோ இரவும் பகலும் மெதுவாகவே சென்று பிரயா ணத்தை முடிக்கும்.

கதை 5.

சுறு சுறுப்பான இளம் பிராயமுள்ள பையன் எங்கள் கூட்டத்திலிருந்தான். அவன் ஹிருதயம் துக்கத்தைக் கண்டிராது. சிரிப்பு அவன் வாயை மூடியது கிடையாது. வெகு காலம் அவனைக் காணாமலிருந்த பின்னர் நான் அவனைக் கண்டேன். குழந்தை மனைவியுடனிருந்தான். முகத்திலிருந்த புன் முறுவலைக் காணுவதற்கில்லை. காரணங் கேட்கவே சொன்னான் "நான் குழந்தைகளுக்குத் தகப்பனானவுடன் என் குழந்தை குணம் அகன்று போய் விட்டது. வயதேறினவுடன் விளையாட்டு விலகி விடுகிறது. வயது காலத்தில் இளம்பிராய சுறு சுறுப்பை எதிர் பாராதே. ஏனெனில் நீர் திரும்பவும் ஊற்றை யடையாது. அறுவடைக்குத் தயாராயிருக்கும் வயல் காற்றில் பச்சை வர்ணத்துடன் ஆடாது. சிங்கத்திற்குக் கால் பலம் குன்றிப்போய் விட்டது. கிழவி தலைமயிரை கறுமையாகச் செய்து கொண்டதைப் பார்த்துச் சொல்லுவேன் என் தாயே! தலைமயிரைக் கறுமையாகச் செய்து கொண்டு விட்டாய். முதுகு கூனைத் திருப்புவர் யாவர்?

கதை 6.

அறிவின் குறைவால் சிறு வயதில் என் தாயை வைது விட்டேன். அவள் மனம் நொந்துபோய் மூலையில் உட்கார்ந்து அழுது கொண்டு முறையிட்டுக் கொண்டிருந்ததாவது "குழந்தைப் பருவத்தில் கொடுத்த கஷ்டங்களையெல்லாம் மறந்துவிட்டாய் போலும். என் கையில் படுத்துக் கொண்டிருந்தது கவனமில்லை போலும். கவனமிருந்தால்கிழவியாகிய என்னைச் சிங்கமாகிற நீ கஷ்டப்படுத்த மாட்டாய்."

கதை 7.

பணமுள்ள லோபியின் மகன் நோயின் வாயிலகப்பட்டு வருந்திகொண்டு இருக்குங்கால் குர் ஆனையாவது படிக்க வேண்டும் அல்லது தான தர்மங்களையாவது செய்ய வேண்டுமென்றார்கள். சிறிது நேரம் யோசனை செய்த பின்னர் லோபி "கையிலிருப்பது குர் ஆன்" ஆனபடியினால் அதையே படிப்போம் என்றான். இதைக் கேட்டுக் கொண்டிருந்த பெரியோர் சொன்னதாவது "வாயின் நுனியில் குர்-ஆனும் வயிற்றின் அடியில் பணமும் இருக்கிற படியினால் அதைப் படிக்கச் சொன்னார் போலும்."

கதை 8.

கலியாணம் செய்து கொள்ளாமலிருந்த கிழவனைக் காரணங்கேட்கவே "கிழவிபை எனக்குப் பிடிக்கவில்லை" என்றான். உனக்குச் சொத்திருக்கிறபடியினால் குமரியைக் கலியாணஞ் செய்து கொள்ளேன் என்றார்கள். கிழவனான எனக்குக் கிழவியைப் பிடிக்காமலிருக்கக் குமரிக்கு என்னைக் கண்டு எவ்விதம் பிடிக்கும்?

கதை 9.

தள்ளாத கிழவன் கலியாணம் செய்ய மனதைத் திடப்படுத்திக்கொண்டு இரத்தினம் எனப் பெயர் வாய்ந்த இளமங்கையை மணந்து கொண்டான். அவளுடைய அழகு மனிதர்களுடைய கண்ணிலிருந்து மறைத்து வைக்கப்பட்டிருந்தது. மணவாழ்க்கையில் மனஸ்தாபமும் சண்டையும் அதிகமாகவிருந்தது. இருவருக்கும் இருந்த மனத்தாங்கல்

கடைசியாக காஜி, போலீஸ் உத்தியோகஸ்தர் முதலானவர்களின் முன் விசாரணைக்கு வந்தது. அப்பொழுது வாதி சொன்னதாவது "பெண்ணின்மேல் குற்றமே கிடையாது. நடுங்குகிற கைகளைக்கொண்டு இரத்தினங்களை எவ்விதம் தாங்கமுடியும்?"

தள்ளாமையும் மூப்பும் முற்றிற்று.

கல்வியின் பயன்

அத்தியாயம் 7.

கதை 1.

மந்திரி தன்னுடைய மடப்பையனைப்படிக்கச் செய்ய ஒரு பெரியாரிடம் அனுப்பினன். பாடம் கற்பித்தும் பிரயோசனப் படாமற் போகவே இவ்விதம் எழுதின பத்திரத்துடன் தூதனைத் தகப்பனிடம்அனுப்பினர். "உன் மகனுக்குப் புத்திகிடையாது. சக்தி யிருந்தால் சொல்லுவது பதியும்; இரும்பின் சேர்க்கை சரியில்லா விட்டால் மெருகு கொடுத்தாலும் பிரயோசனப்படாது. சப்த நதிகளில் கழுவியும் நனைந்த நாய் அழுக்காகவே இருக்கும். கிறிஸ்துவைச் சுமந்த கழுதை மக்கத்திற்குப் போனாலும் கழுதையே.

கதை 2.

" மக்களே! உலகப் பொருள்களில் நம்பிக்கை வையாதேயுங்கள். அறிவைப் பெறுங்கள். பிரயாணகாலத்தில் பணம்

செலவழிந்து போய்விடும். திருடன் திருடிவிடுவான்; அல்லது எஜமானனே செலவழித்துவிடுவான். அழியாப் பொருள் அறிவு ஒன்றே. அறிவாளி தாராளமா யிருந்த பொழுதிலும் பயப்படவேண்டியதில்லை. ஏனெனில் கல்வியே கஜானுவாகும். கற்றவனுக்குச் சென்ற விடமெல்லாம் சிறப்பு. கற்காதவனுக்கு எங்கும் கஷ்டமே. அதிகாரத்தை யனுபவித்த பின்னர் வணங்கியிருத்த லென்பது வீண் காரியமே.'' என்று பெரியவர் உபதேசஞ்செய்து கொண்டிருந்தார். தமாஸ்கஸ் நகரில் கலகம் ஏற்படவே எல்லோரும் ஓடிவிட்டனர். குடியானவனின் படித்த மக்கள் மந்திரியானுர்கள்; மந்திரியின் மூடப்பிள்ளைகள் பிச்சையெடுக்கலானுர்கள். பிதுராஜ்ஜிதம் தேவையானல் தகப்பனிடமிருந்து அறிவைப் பெறுங்கள்.

கதை 3.

வெடுத்த முகத்தைக்கொண்ட உபாத்தியாயரை ஆபிரிக்காவில் கண்டேன். அவர் அற்பபுத்தியை உடையவர்; மனிதச் சமுகத்தை வெறுப்பவர்; அவரிடம் கல்வி பயின்று வந்த சிறுவர்களும் சிறுமிகளும் சிரிக்கக்கூடப் பயப்படுவார்கள். அவருடைய நடத்தைப் பிடிக்காமற் போகவே, அவருக்குப் பதிலாக சாந்த சுபாவமும் சிரித்த முகத்தையும் உடைய ஒரு பெரியவரை அமர்த்தினுர்கள். சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் பழைய உபாத்தியாயருடைய ஞாபகம் போய்விட்டது. எனவே ஒருவருக் கொருவர் சண்டைசெய்து கொள்ளலானுர்கள். புதிய உபாத்தியாயருடைய தாராளப் போக்கை நம்பி பாடங்களை மறந்தார்கள். உபாத்தியாயர் உறுதியிழந்தால் பிள்ளைகளும் கடைத்தெரு

வில் குஸ்தி விளையாடுவார்கள். தகப்பனின் சீராட்டிலும் உபாத்தியாயரின் கடுமையே மேலானது.

கதை 4.

மாமன் இறந்த பின்னர் அவருடைய உயிலில் கண்டபடி தர்மப்பிரபுவின் குமாரன் தனவானானன். செல்வச் செருக்கினால் அவன் செய்யாத பாபங் கிடையாது; குடியாத சாராயங் கிடையாது. அப்பொழுது நான் சொன்னேன் "குழந்தாய்! செல்வம் என்பது ஓடும் நீராகும். வருவாய் நிச்சியமுள்ள வனுக்கே பெருமிதசெலவு செல்லும். மாலுமிகள் கூறும் வண்ணம் மழைபெய்யாவிடில் நதிவற்றிவிடும். அறிவை உபயோகித்து செலவைக்கட்டுப்படுத்து" .இதற்குச் சிறுவன் "வருங்கால பயத்தினால் இப்பொழுது வருந்துவானேன். வீண்எண்ணங் கொண்டு கவலைப் படுவானேன். என் பெயர் எல்லோருக்குந் தெரியும். அதை நான் இழக்க விரும்பேன்" என்று சொல்லி என் உபதேசத்திற்கு செவி சாய்க்க மறுத்து விட்டான். இன்பத்தில் முழுகியிருக்கும் தூர்த்தர்கள் இறக்கவேண்டிய காலத்தைக்குறித்து யோஜிக்க மாட்டார்கள். கோடைகாலத்தில் பழங்களால் நிறைந்திருக்கும் மரம் குளிர் காலத்தில் இலைகள் கூட இல்லாமல் போய் விடுகிறது.

கதை 5.

"உன் மகனைப் போல் நினைத்து பாடஞ்சொல்லிக் கொடு" என்று ஆஞ்ஞாபித்து அரசகுமாரன் குருவினிடம் ஒப்பு விக்கப்பட்டான். ஒரு வருடம் உபாத்தியாயர் பாடு பட்டும் பிரயோசனப்பவில்லை. பிள்ளைகள் கற்றுணர்ந்த

வித்வானுனர்கள். அரசகுமாரனே அங்ஙனமே யிருந்தான். அரசன் அதற்குச்சினங் கொள்ளவே குருசொன்னர் "பயிற்சி ஒன்றே: அறிவோ வெவ்வேறு. கற்களில் வெள்ளியிருந் தாலும் எல்லாக்கற்களிலும் அது கிடைப்பதில்லை.

கதை 6.

அரபி ஒருவன் தன் மகனிடம் "தீர்ப்பு தினத்தன்று நீ உலகில் என்ன செய்தாய் என்று கேழ்ப்பார்களே தவிர நீ யாருடைய மகன் என்று கேழ்க்க மாட்டார்கள்" என்று சொல்லிக் கொண்டிருந்தார். காபாவின் மேலிருக்கும் துணி பட்டுப்புழுவினுடைய தானபடியினல் சிறந்ததல்ல;சில காலம் புண்ணிய புருஷருடன் கலந்திருந்த படியினல் மேன்மைப் பெற்றிருக்கிறது.

கதை 7.

தன் மனைவி பிரசவவேதனை யிலிருக்கும் பொழுது பக்கிரி, ஆண் குழந்தை பிறந்தால் சர்வ சம்பத்தையும் தானஞ் செய்துவிடுவதாக வேண்டிக் கொண்டார். அவ்விதமே ஆண் குழந்தை பிறந்தது. சொன்ன பிரகாரமே செய்தார். சில காலம் பொருத்து நான் திரும்பிவருகையில் அவரை சிறையில் அடைத்திருந்தார்கள். காரணங் கேட்கவே சொன்னதாவது "மகன் குடிவெறியினல் சண்டை செய்து ஒருவனைக் கொலை செய்துவிட்டு தப்பியோடி விட்டான். அதற்காகத் தகப்பனைச் சிறையிலடைத்திருக்கிருர்கள்." அப்பொழுது நான் சொன்னேன் "தன்னுடைய ஜெபத்தின் பயனே யாகும் இது. அறிஞர்கள் கூறுவதுபோல் பிரசவஸ்திரீ துஷ்டக் குழந்தையைப் பெறுவதைக் காட்டிலும் பாம்பைப் பெறுவதே மேலானது."

கதை 8.

அறிவிற்கு அடையாள மென்னவென்று கேட்டபொழுது பெரியார் சுயநலத்தைக் கருதாமல் கடவுளைப் போற்றுவதே என்றார். நீர்த்துளி நாற்பதுநாள் கருப்பையில் இருப்பதினாலேயே மனித உருவத்தை அடைகிறது. வயதாயும் சிறந்த குணத்தையும் சுவபாவத்தையும் பெறாதவர்கள் மனிதராக மாட்டார்கள். மனிதனுக்கு உருவம் மாத்திரமிருந்தால் போதாது. பரோபகார சிந்தையும் வேண்டியது. இல்லையேல் சுவரிலிருக்கும் சித்திரத்திற்கும் மனிதனுக்கும் வித்தியாசம் உண்டோ? பொருள் ஈட்டுவது அறிவாகாது. மனதைக் கவருவதே யாகும்.

கதை 9.

கண்வலி கண்ட சிறியவன் குதிரை வைத்தியனிடம் போகவே அவன் மிருகங்களுக்களிக்கும் மருந்தைக் கொடுத்தான். அதனால் இருந்த கண் பார்வையும் போய்விட்டது. அதிகாரியிடம் முறையிட்டான். நீதிபதி கூறியதாவது:— "உன் பிராது செல்லாது. நீ கழுதையா யில்லாமற் போனால் குதிரை வைத்தியனிடம் போயிருக்கமாட்டாய்." அறிஞர் தகாதவர்களைக் கொண்டு பெருங் காரியங்களைச் செய்யச் சொல்லமாட்டார்கள். கைக்கோளனாயிருந்தாலும் பாய் முடைவோனைப் பட்டுத் தரியில் வேலைக்கு அமர்த்த மாட்டார்கள்.

கதை 10.

சத்புத்திரனை யிழந்த பெரியவரிடம் தன் மகனுடைய கல்லறையின்மேல் எழுத வேண்டியதென்னவென்று வின

வினபொழுது சொன்னதாவது "குர். ஆன் வாக்கியம் மிகவும் பரிசுத்தமானது. அதைக் கல்லறைமேல் செதுக்கினுல் பாதசாரிகளின் கால்படும், நாயும் அசுத்தப் படுத்தி விடும். ஆகையினுல் எழுத வெண்டுவது அவசிய மானுல் இதுபோதுமானது "தோட்டம் செழுமையா யிருந்த காலத்தில் என் உள்ளம் எங்ஙனம் குளிர்ந்திருந்தது? வசந்தகாலம் வரையில் காத்திருந்தால் காவின் கீழ் புல் முளைத்திருப்பதைக் காணலாம்."

கதை 11.

திமிஷ்க் நகரத்துக்குச் செல்லுங்கால் என்னுடன் ஒரு சிறுவனிருந்தான்: அவன் கத்தி கேடயங்களை நன்ருய் உபயோகிப்பவன்; குஸ்தியில் கைதேர்ந்தவன்; ஆனுல் அனுபவமில்லாதவன். உலகத்தை அறியாதவன். நாங்களிருவரும் போகும் வழியிலிருக்கும் மரங்களை முறித் தெறிவான். மதில்களை உடைத் தெறிவான். என் கை வலிமையைக் காட்ட யானையையும் சிங்கத்தையுங் காணேமே என்று வருந்திக்கொண்டே வந்தான். அப்பொழுது எங்கள் முன் இரு இந்தியர்கள் தோன்றினுர்கள். ஒருவர் கையில் ஒரு மரக்கிளையும் மற்ருெருவர் கையில் சிறிய தடியுமிருந்தது. இவர்களைக்கண்டவுடன் சிறுவனின் உடல்நடுங்கிற்று. கையில் இருந்த வில் நழுவிற்று. தப்பித்துக்கொள்ள வகையில்லாமல்அவர்களிடம் சரணமடைந்தோம். சிறியவனுக்குச் சரீர பலமும் சக்தியுமிருந்த பொழுதிலும் யுத்த தினத்தில் நடுங்குவான். காரியங்களைச் செவ்வனே செய்து முடிக்க அநுபவத்தில் முதிர்ந்தவர்களையே அமர்த்துவாயாக.

கதை 12.

தனவானின் குமாரன் தன் தகப்பன் கல்லறையின் சமீபத்தில் உட்கார்ந்துகொண்டு பக்கிரியின் குமாரனை இவ்விதமாக ஏசினன் "என் தகப்பன் கல்லறையி லிருப்பது சலவைக்கல்; அதன் எழுத்துக்களோ தங்கம்; உன் தகப்பனுடையதோ இரு கற்களைச் சேர்த்து சுண்ணும்பினல் கட்டப்பட்டது." இதற்குப் பக்கிரிமகன் சொன்னதாவது "இவ்வளவு கஷ்டத்திலிருந்து உன் தகப்பன் எழுந்திருப்பதற்கு முந்தியே என் தகப்பன் சுவர்க்கத்தைச் சேர்ந்துவிடுவார். வாழ்க்கையில் வறுமையுடனிருப்பவர்கள் சுமையில்லாமல் மரண வாயிலைக் கடப்பார்கள். சர்வ சுகத்திலிருப்பவர்களோ மரணத்திற்கு அஞ்சுவார்கள். சிறைக்குச் செல்லும் பணக்காரனுக் கிருப்பதைவிட பாதுகாப்பிலிருந்து வெளிவரும் ஏழைக்கு இருக்கும் இன்பமே அதிகமானது.

கல்வியின் பயன் முற்றிற்று.

ஸா-அதியின் வாக்கு

1. உண்டு உழுபவனே அதிர்ஷ்டக்காரன்; அனுபவியாமலிறந்தவன் துரதிஷ்டக்காரன். வாழ்க்கைக்குப் பொருள் வேண்டுமே தவிர, பொருள் ஈட்டுவதற்கல்ல வாழ்க்கை. அறிவைக்கொண்டு தர்மத்தைக் காக்க வேண்டும்.

2. புகழ் அறிவு இவ்விரண்டையுங்கொண்டு தன் லாபத்தைத் தேடுபவன் தானியக் களஞ்சியத்தை யுண்டாக்கி தானே அதை அழித்தவனுவான்.

3. தன்னடக்கமில்லாத வித்வான் சங்கிலியைத் தூக்கும் குருடனே யாவான். பிறருக்குப் பாதையைக் காண்பிப்பான். ஆனால் தன் வழியைத் தானே யறியான். வாணளை வீணாக்கினவன் ஒன்றும் வாங்காமல் பணத்தை எறிந்தவனாவான்.

4. அறிவாளர்களால் அரசாங்கமும், தர்மாத்மாக்களால் சமயமும் சிறந்துவிளங்கும்.

5. வர்ணிப மில்லா பொருள், ஆதாரமற்ற ஆராய்ச்சி, அரசாங்க மில்லா நாடு, இம்மூன்றும் தனித்தனியாக வெகு நாள் இராது.

6. அரசர்களுடைய நட்பையும் இளைஞர்களுடைய இனிய குரலையும் நம்பாதே. ஏனெனில் முற்கூறியதை ஒரு சிறிய சந்தேகம் அழித்துவிடும். பிற் கூறியது இரவுடன் இறந்து விடும்.

7. உள்ளத்திலுள்ள யாவற்றையும் நண்பனிடம் சொல்லி விடாதே. ஏனெனில் எச்சமயத்திலாவது அவன் விரோதியாக மாறக்கூடும். இதே போல் சத்துருவிடம் உன் சாமர்த்தியம் முழுவதையும் உபயோகித்து விடாதே. ஏனெனில் அவன் மித்திரனாகக்கூடும். அந்தரங்கமாயிருக்க விரும்புவதை அன்பனிடமும் கூறாதே. ஏனெனில் உனக்கு நீயே உண்மை நண்பன்.

8. சக்தியற்றிருந்தபொழுதிலும் சத்துருவைப் புறக்கணிப்பது நெருப்புப் பொறியை விட்டுவிடுவது போலாம். அக்கணமேஅதை யணைத்துவிடு. இல்லையேல் தீயாகிவிட்டால் உலகத்தைஎரித்துவிடும். நண்பனுடைய அந்தரங்கத்தைக்கூட நம்பாதே யென்றிருக்கச் சத்துருவுடைய புகழ் மொழிகளைப் பற்றி சொல்ல வேண்டியது என்ன விருக்கிறது?

9. இருவருக்குள் பகையை உண்டு பண்ணுவது அத்தீயில் தன்னை மாய்த்துக் கொள்ளுவது போலாம்.

10. உன் விரோதிகளுடன் சகவாசஞ் செய்யும் நண்பனுடைய நேசத்தை ஒழித்து விடு.

11. தேகபலத்தில் காரியம் ஆகாதாயின் கத்தியின் உதவியைத் தேடுவது நியாயமானதே.

12. அதிகக் கோபம் பயத்தை யளிக்கும். காரணமற்ற கருணை அதிகாரத்தைத் தொலைக்கும். வெறுப்புண்டாகும் வரையில் கடினமாயிராதே. பயந்தெளியும் வரையில் இடங் கொடுக்காதே. கத்தியை உபயோகிக்கும் வைத்தியன் அதனுலுண்டாகும் புண்ணையாற்ற மருந்தையுங் கொடுப்பது போல் கடுமையும் கருணையுங் கலந்திருத்தல் வேண்டும்.

13. அன்பற்ற அரசனும், அறிவற்ற சாதுவும் அரசாங் கத்திற்கும் சமயத்திற்கும் முறையே விரோதியாவார்கள்.

14, பிறரைப் புண்படுத்தும் செய்தியை நீ வெளிப்படுத் தாதே. ஏ! குயிலே!! வசந்த கால வருகையை நீ அறிவித்து விட்டு துன்பத்தை வெளியிட ஆந்தையை விடு.

15. முகஸ்துதி செய்பவன் உன்னிடமிருந்து பெரும் லாபத்தை எதிர்ப்பார்ப்பான். அதை நீ திருப்திசெய்யா விட்டால், குணங்களை விட்டு உனது குற்றங்களை ஆயிரம் ஆயிரமாக எடுத்துக் கூறுவான்.

16. பத்து பேர் ஒரே இலையிலிருந்து சாப்பிடுவார்கள். இரண்டு நாயோ ஒரே எலும்பைக்கண்டு திருப்தியுராது. பேராசைக்காரனுக்கு உலகமெல்லாம் தந்திடினும் பசி தீராது. மனத்திருப்தியுடையவனுக்கு ஒரு துண்டு ரொட் டியே போதுமானது. இரைச்சி யில்லாத ரொட்டித் துண்டத்துடன் இச்சிறு வயறு நிரம்பிவிடும். ஆனல் உலக

ஐசுவர்யங்களைக் கொண்டும் இச்சிறு கண்கள் திருப்தியடையாது.

17. உயிருக்கு ஆதாரம் மூச்சேயாகும். இரண்டு அபாவங்களின் இடையில் உலகின் பாவம் விளங்குகிறது. எனவே உலகத்திற்காகச் சமயத்தை விற்பவன் கழுதையே.

18. ஒரு சீனக்கோப்பையைச் செய்யக் கீழ்த்தேசத்தில் நாற்பது வருடங்கள் ஆச்சுது என்று கேள்விப்பட்டிருக்கிறேன். பக்தாத் நகரிலோ ஒரு நாளைக்கு நூறு செய்கிறார்கள். எனவே விலை குறைகிறது. எங்கும் கண்ணாடி கிடைப்பதனால் விலை குறைவாயிருக்கிறது. இரத்தினமோ அபூர்வமாய் கிடைக்கிறது. எனவே விலை அதிகமாகிறது. திடீரென்று பெரியதானதெல்லாம் பூர்ணமானதாகாது.

19. அறிவிலிக்கு ஆபரணம் மௌனம். இதையறிந்தவன் அறிவிலியாகான்.

20. மனிதர்களின் இரகசியக் குற்றங்களைப் பிரசுரஞ் செய்யாதே. ஏனெனில் அவர்களை அவமானப் படுத்துவதனால் உன் மரியாதை குறையும்.

21. அறிவைப்பெற்று அநுபவியாம விருப்பவர்கள் உழுது பயிரிடாம் விருப்பவர்கள்.

22. மனத் திருப்தியற்றவனது கீழ்ப்படிதல், உண்மையான வணக்கமாகாது.

23. குற்றங் கூறுபவர்களெல்லாம் குணக்குன்றல்ல. முக மூடியின் மறைவில் உருவம் நன்றாயிருக்கும். அதைத் திறந்துவிட்டால் உள்ளிருப்பவள் கிழவியா யிருப்பாள்.

24. குணத்தின் இருப்பிடம் மனதே தவிர மேற் பார்வையல்ல. ஒரு நாள் பழக்கத்தில் மனிதனுடைய அறிவின்

ஆழத்தை அறியலாம். ஆனால் மனதின் ஆழத்தை அறிய பலநாள் வேண்டும். ஏனெனில் பகையும் பொறுமையும் வெளிப்பட பல வருடங்கள் செல்லும்.

25. புத்திமதியைக் கேளாதவன், கண்டனத்திற்கு ஆளாகிறான்.

26. வீட்டு நாய் வேட்டை நாயைக் கண்டவுடன் குலைத்து விட்டுச் சும்மாயிருப்பது போலவே துஷ்டர்கள் தர்ம புருஷர்களிடம் நடந்து கொள்வார்கள்.

27. நல்லோனுடைய குணங்களைப்பற்றி தீயோன் அவனைக் காணாத விடங்களில் தூற்றுவான். நேராகக் கண்டு விட்டால் வாய் அடைப்பட்டுப் போய்விடும்.

28. வயிற்றுக் கொடுமை யில்லாவிட்டால் பட்சியும் வலையில் விழாது; வேடனும் வலையை விரிக்கமட்டான். வயிறு கைகளுக்குச் சங்கிலியும், கால்களுக்கு விலங்குமாகும். வயிற்றின் அடிமை கடவுளைத் துதிக்கமாட்டான்.

29. அறிஞர்கள் காலங்கடந்து உண்பார்கள்; தர்ம புருஷர்கள் அரைவயிறு சாப்பிடுவார்கள்; சாதுக்கள் உயிர் வாழப் புசிப்பார்கள்; இளைஞர்கள் இலையிலுள்ளதை யெல்லாம் சாப்பிடுவார்கள்; பெருந்தீனிக்காரர்களோ வயிறு நிறைய மூச்சுத்திணறும் வரையிலும் உண்பார்கள். வயிற்றின் அடிமை இரண்டு இரவு தூங்கமாட்டான். முதல் இரவு வயிறு அதிகமாயிருக்கும்; இரண்டாம் இரவு பசியின் கொடுமைப் பொறுக்க முடியாமலிருக்கும்.

30. எதிரி தன் வசமிருக்கையில் நாசஞ்செய்யாம லிருக்கிறவன் சுயசத்துருவே யாவான். கையில் கல்லும் கல்லின் கீழ் பாம்பும் இருக்குங்கால் அதைக் கொல்லுவதற்குத் தயங்கக்கூடாது. ஆனால் இதற்கு எதிராகப் பதிலுரைக்கக்

கேட்டிருக்கிறேன். கைதியைச் சிரச்சேதம் செய்வதில் அவசரம் கூடாது. ஏனெனில் சிரச்சேதம் செய்யலாம் அல்லது அவனுக்குச் சுயேச்சை யளித்துவிடலாம். உயிர் போய்விட்டால் திரும்பிவராது அல்லவோ? அம்பைவிட்டு அகன்றவில் திரும்பியும் வருமோ?

31. அறிவிலியுடன் வாதிக்கும் அறிஞன் கீர்த்திக்கு ஆசைவைக்கக் கூடாது. அறிவிலி ஜெயித்து விட்டாலும் அதிசயம் ஒன்றுமில்லை. ஏனெனில் சாதாரண கல், நகையை உடைக்கும். காக்கையுடன் கூட ஒரே கூட்டிலிருக் கும் குயில் பாடாம லிருப்பதில் என்ன விந்தை யிருக் கிறது?

32. வெங்காயம் கஸ்தூரியின் வாசனையை மறைத்துவிடும். நகை மண்ணில் விழுந்தாலும் நகையே. ஈ உயரப்பறந்தாலும் ஈயே. பரிசுத்த நெருப்பிலிருந்து பிறந்த பொழுதிலும் சாம்பலுக்குக் குண மில்லாததினால் மண்ணிற்குச் சமானமா னதே. கஸ்தூரிக்குள்ள வாசனை அதற்குள்ள குணமே தவிர வியாபாரி அதை அப்பெயரிட்டு அழைப்பதினாலல்ல. குணங் களிருந்தும் பிரசுரஞ் செய்துகொள்ளாமலிருக்கும் மருந்தை அறிஞர் ஒத்திருக்கிறார். அர்த்தமில்லாமல் சத்தஞ் செய்யும் மேளத்தைப்போல் அறிவிலியும் ஆகிறான். குருடர்களின் மத்தியில் சுந்திரப்பெண்ணைப் போலவும், நம்பிக்கையற்றவர் களிடையில் குர் - ஆனைப்போலவும் மடையர்களுடைய சபை யில் புத்திமான் ஆகிறான்.

33. வாணாள் முழுவதும் தேடி எடுத்த நட்பை ஒருகணத் தில் இழந்து விடாதே. ஏனெனில் மாறுவதற்கு நெடுங் கால மெடுத்துக் கொண்ட மாணிக்கக்கல்லை இன்னுமொரு கல்லின்மேல் உடைக்கமாட்டாய்.

34. அறிவாளி மடையனுடைய மமதையைக் கண்டிக்காமற்போனல், அவனுடைய சுயமரியாதைக்குப் பங்கமேற்படுவதுடன் மடையனுடைய அறிவின்மையும் நிச்சயமாகிவிடும்.

35. கடவுள் கொடுத்ததைவிட அதிகம் அனுபவிக்க முடியாது; ஆயுள் முடிவதற்கு முந்தி இறக்க முடியாது; விதியை மாற்ற முடியாது.

36. அளிக்கப்படாதது கிடைக்காது. அளிக்கப்பட்டது எங்கிருந்தாலும் கிடைக்கும். சிகாந்தர் பெருங்கஷ்டத்தினல் நாடு நகரங்களைச் சயித்தான். இருந்தும் சிரஞ்சீவியாக முடியவில்லை.

37. விதியின் வலியில்லாமல் செம்படவன் மீன் பிடிக்க முடியாது. மீனும் வலையில் விழாது.

38. மனமில்லா மாணுக்கன்; பொருளில்லாக் காதலன்; பார்வையற்ற யாத்ரிகன்; சிறகில்லாப்பட்சி; நூற்களெழுதா வித்வான்; பழமில்லா மரம்; ஞானமில்லா பக்தன் கதவில்லா வீடு; இவைகள் பிரயோஜனமாகா.

39. நம்பிக்கை யில்லாமல் மருந்து சாப்பிடுவதும் உதவியில்லாமல் தெரியாத வழியே போவதும் அறிவிற்கு ஏற்றதல்ல வென்று சொல்லுவதுண்டு.

40. தன்னுடைய பெரும்பேருக்கும் புகழுக்கும் எது காரணமென்று இமாம் முர்ஷீத் முஹம்மத் பென் முஹம்மத் கெஜாலியை (கடவுள் அருள் அவருக்கு விளங்குமாகா) வினவினபொழுது சொன்னர் "எனக்குத் தெரியாதவைகளை நான் கேட்டுத் தெரிந்துகொள்ள வெட்கப்படுவது கிடையாது"

41. குறித்த காலத்தில் காரியம் முடியுமென்று தெரிந்திருந்தால், அதைப்பற்றி முன்னரே விசாரித்தறிய ஆசைப்

படாதீர்கள். ஏனெனில் அங்ஙனம் செய்வதினுல் மரியாதை யும் அதிகாரமும் குறையும். தாவீது கையில் இரும்பு மெழு காக மாறுவதை லுக்மான் பார்த்தும் அதன் காரணத்தைக் கேழ்க்கப் பிரியப்படவில்லை. ஏனெனில் அது வெளிவரு மென்று அவர் அறிந்திருந்தார்.

42. கடவுள் சிருஷ்டியில் சிறந்தது மானிடப் பிறப்பு. இழி வானது நாய்பிறப்பு. இருந்தும் ஞானிகள் நன்றிகெட்ட மனிதனைக் காட்டிலும் நன்றியுள்ள நாயே மேல் என்கிறுர் கள். ஆயிரங்கற்களைக் கொண்டடித்தாலும் ஒரு கவளம் சோற்றை நாய் மறக்காது. ஆயுள் பூராவும் காப்பாற்றினு லும், ஒரு அற்ப விஷயத்தில் மனிதன் உன்னுடன் சண்டை யிடுவான்.

43. சுவிசேஷத்தில் கூறுவதாவது "செல்வத்தில் கர்வ மும் அலட்சியமும், வறுமையில் கஷ்டமும் கவலையும் இருக்கையில் நீ என்னைப்பற்றி நினைக்குங்காலம் எது?"

ஸா - அதியின் வாக்கு முற்றிற்று.

ரோஜாத் தோட்டம் முற்றிற்று.

சத்தியார்த்தப் பிரக

ஆரிய சமாஜத்தை நிறுவிய சுவாமி தயாநந்த சரஸ்வதியினுல் எழுதப்பட்ட நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு. உலகத்திலுள்ள எல்லா விஷயங்களும் இதிலடங்கியிருக்கின்றன. லட்சம் காபிகள் அச்சாகி நாடெங்கும் செலவழிந்திருக்கின்றன.

விலை ரூபா நான்கு.

		ரூ.	அ.	பை.
வைதிக ஜெயபேரிகை	...	0	2	0
சிராத்தம் ...	...	0	2	0

சென்னை சௌகார்பேட்டை ஆரியன் புக் ஷாப்பில் எல்லா தமிழ் இங்கிலீஷ் முதலான புத்தகங்களும், சாமான்களும் கிடைக்கும். நம்பிக்கையான வியாபார ஸ்தலம் இதுவே.